
93

# வசந்தம்



8

ணை

விய, கார்த்திகை
நவம்பர், 1946

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

## கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

## தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷுரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர்:—ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர்:—ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

### ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

| | |
|---|---|
| 1945-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ் | ரூ. 8 கோடிக்கு அதிகம். |
| 1945-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை | ரூ. 27 கோடிக்கு அதிகம். |

### பொருளாதார புள்ளி விவரங்கள்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 71,21,055. |
| மொத்த நிதி (31-12-1945) | ரூ. 7,19,29,551. |
| மொத்த இருப்பு (சுமார்) | ரூ. 9 கோடி. |
| ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம் | ரூ. 24 கோடிக்கு அதிகம். |
| கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை | ரூ 12 கோடிக்கு அதிகம். |

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளை நிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

Vasantham. November, 1946.

: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

# வசந்தா மில்ஸ்

## லிமிடெட்.

ரிஜிஸ்டார்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

OF THE REGISTRAR ... MADRAS

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

**R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.**

**1934-ஹு கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறேம்.**

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறேம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறேம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

**நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.**

# புதிய வீடு கட்டுகிறீர்களா?




தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா,
199. மௌன்ட் ரோட், மதராஸ்.
"புது வீட்டின் 60 மாதிரி பிளான்கள்" என்ற வெளியீட்டின் . . . . பிரதி/பிரதிகள் எனக்கு தயவு செய்து அனுப்பவும். தபால்சிலவு உள்பட கிரயத்திற்காக ரு . . அனுப்பி யிருக்கிறேன்.

பெயர் ..............................
..............................
விலாசம் ..............................
Key NO: M V ..............................

. . அப்படியானல் கீழ்க்கண்ட வெளியீட்டிற்கு எழுதுங்கள்.

★ 60 பிளான்களும் அவைகளின் சுமாரான விலைமதிப்பும்.

★ முழுதும் வர்ணப்படங்கள்.

★ விலை ரூ. 2/- (தபால் சிலவு அணு 0-5-0 பிரத்தியேகம்.)

## தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CMI. 122 A-Tamil.

★

# அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங்,
டுவில், கிரேப், பாப்ளின், நயின்ஸுக்,
லான், மல், டோரியா, வாயில் முதலிய
தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

★


Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram
Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.



# தானியம் புடைத்தல்

பாரத நாட்டின் முக்கிய தொழில் வேளாண்மை. அறுவடை காலத்தில் நீங்கள் வயல்களில் நடந்து செல்லுகையில் தானியம் புடைக்கும் சர்வ சாதாரணமான காட்சியைக் காணலாம். விவசாய ஜீவிதத்தின் வழக்கமான அம்சம் இது. ஸ்திரீகள் உள்பட குடும்பத்தில் எல்லோரும் இதில் கலந்து கொண்டு உதவி புரிவார்கள்.

பின்னர் நீங்கள் கிராம வீதிகளில் செல்லும்போது ஆங்காங்குள்ள மளிகைக் கடைகளில் கிராம வாசிகளின் அன்றாடம் முக்கியமாய் வேண்டிய பண்டங்களுடன் ஹமாம் ஸோப்பையுந் தான் காண்பீர்கள்.




# ஹமாம்

பாரத நாட்டு மக்களின்
மனதிற்குப் பிடித்த ஸோப்பு.

டாம்கோ விற்பனை இலாகா:
4/117 திருச்சிரோட்டு, கோயமுத்தூர்.

A TATA PRODUCT

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.**

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந் தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்துறக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடை யில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக் காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

EYETEX

ஐடெக்ஸ்

கண் மை.

கண் மை

கோயமுத்தூர் ஜில்லா
ஏஜண்டு :-
சி. ஆர். ராமாநுஜ
தேசிகம்,
கோயமுத்தூர் (சிட்டி)

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

## UMAYAL WEAVING ESTT., LTD.,

**Cannanore, N. Malabar.**

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

**BEDSPREADS**
**TABLE LINEN**
**FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS**
**DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS**
**TURKISH TOWELS**
**BATH GLOVES**
**BATH MATS**
**MUFFLERS ETC.**

**ENQUIRIES EARNESTLY SOLICITED.**

**ENCOURAGE HANDLOOM INDUSTRY.**

**"UMAYAL" FABRICS**
**AN ASSET TO EVERY HOME**
**EVERYTHING MADE TO ORDERS**
**POPULAR FABRICS**
**THROUGHOUT INDIA AND CEYLON.**

**Distributors for Mysore State :-**
**SRI UMAYAL STORES,**
**363, Avenue Road,**
**BANGALORE CITY.**

The Fashionable Furnishing Fabrics

**DRESS TEXTILES**

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

## S. BEEMIAH CHETTY,

**"WHITE SHOP" Coimbatore.**

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

# சிலப்பதிகாரம்

## (புகார்க்காண்டம்)

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்

எழுதிய உரையுடன் தயாராகிவிட்டது.

- ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன சிலப்பதிகாரத்தின் இனிமையையும், நயத்தையும் எளிதில் எல்லோரும் இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

- நமது கலை, நாகரிகம் இவற்றின் உயரிய பண்பாட்டுக்கு அத்தாட்சியாக இது விளங்குகிறது.

- தமிழ் அறிஞர்களான திரு எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், திரு. ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் முறையே சிறப்பான முன்னுரை, மதிப்புரை தந்து, நூலின் சுவையை அனுபவிக்கச் செய்திருக்கிருர்கள்.

★

விலை ரூ. 5—0—0

விபரங்களுக்கு

## புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு, : : கோயமுத்தூர்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

# ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

# வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

# பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

# வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25, சைனு பஜார் :: மதருஸ்

# அவர்களின் தேவை



ஓடியாடி விளையாடும் சிறுவர்களுக்குத் தேவையானது காமதேனு வனஸ்பதியில் தயாரிக்கப்பட்ட உணவு தான். அது அவர்களுக்கு பலத்தையும் ஆரோக்யெத்தையும் அளிக்கிறது.

காமதேனு வனஸ்பதியையே நீங்களும் உபயோகியுங்கள். அது பரிசுத்தமானது கையால் தொடாதது. ஸீலிட்ட டின்களில் தான் விற்கப்படுகிறது. குறைந்த செலவில் நிறைந்த புஷ்டி. மணமும் இல்லாததால் பதார்த்தங்களின் வாசனையை பாதிக்காது.

தயாரிப்பவர்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சி.

பூரண விற்பனையாளர்கள் :

தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்டிரிப்யூட்டர்ஸ் லிமிடெட்,
ஜி. டி., மதராஸ்.

KAMADHENU
*Vanaspati*



சேர்குலைக்கும் அவசரமான சந்தர்ப்பங்களைச் சமாளிக்க ஏன் ஒரு திட்டம் வகுக்கக்கூடாது? நீர் இடைவிடாமல், ஒழுங்காகச் சேமித்து வருவீரானால், உம்மிடம் எப்போதும் ஒரு சேமநிதி இருக்கும். இத்தகைய சேமிப்புகளை வட்டிக்குப் போட்டு வைப்பதற்கான சிறந்த சாதனங்கள் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளுமே யாகும்

# நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

## இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிகிதம் கூடுகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிறது. இது வரவொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பிரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

# உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!


ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் நேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

# மைசூர்
# சந்தன அத்தர்

MSR 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.


உயர்தரமான :-

- சட்டைத் துணிகள்,
- கோட்டுத் துணிகள்,
- படுக்கை விரிப்புகள்,
- ஸ்நானத் துண்டுகள்

முதலியன

நூதன முறையில் கைத் தறியில்

உற்பத்தி செய்பவர்கள்.

**TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,**

(Incorporated in British India)

CANNANORE : : NORTH MALABAR.

# வசந்தம்

| மலர் 5 | விய ஹஸ கார்த்திகை மீ | இதழ் 8 |
|---|---|---|

## பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| மலர் மணம் | ... | ... | ... 1 |
| கார்த்திகைப் பிறை | ... | பெ. தூரன் | ... 2 |
| தமிழன்பர் தம்பு | ... | ஏ. ஷண்முகம் பி. ஏ. | ... 5 |
| சுகவேதனை | ... | கு. ப. சேது அம்மாள் | ... 8 |
| பண்டி சுருங்குதல் | ... | அ. துரைசாமி பிள்ளை | ... 13 |
| மல்லிகை மொக்கு | ... | தா. நாகலிங்கம் | ... 17 |
| மனச் சாட்சி | ... | பெ. கிருஷ்ணசுவாமி | ... 25 |
| இட்லியோ பாக்யானம் | ... | 'சுகி' | ... 30 |
| பிரயாணி | ... | கு. மா. பாலசுப்பிரமணியம் | ... 36 |
| எங்கள் காவேரி | ... | அ. கிருஷ்ணமூர்த்தி | ... 37 |
| மனித இதயம் | ... | எச். விஜயகுமார் | ... 42 |
| ஒளியோட்டம் | ... | ஆர். கே. விசுவநாதன் | ... 56 |
| கண்வளராய் | ... | 'விசாகன்' | ... 61 |
| கலையும் கலைஞனும் | ... | எம். எஸ். ஹமீத் | ... 62 |
| அவன்! | ... | க. பஞ்சாபகேசன் | ... 69 |
| காட்டில் விசாரணை | ... | எஸ். பி. மாதையன் | ... 76 |
| புத்தக ஆராய்ச்சி | ... | 'உமாபதி' | ... 80 |

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

# யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

[ஸ்தாபிதம் : 1906]

தமிழ் நாட்டின் தலை சிறந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி. மக்கள் நல்வாழ்வே அடிப்படை லட்சியமாகக் கொண்டது. இன்ஷ்யூர் செய்வதற்கோ, பிரதிநிதியாக இருப்பதற்கோ ஏற்ற கம்பெனி.

**<u>பொருளாதார புள்ளி விவரங்கள்:</u>**

| | |
|---|---|
| 1945–ல் புது பாலிஸிகளுடைய பிரிமியம் | 17,48,590 |
| பழைய பாலிஸிகளின் பிரிமியம்: | 48,04,520 |
| இன்ஷ்யூர் செய்தவர்களின் நடைமுறையிலிருக்கும் மொத்த தொகை | 13,98,54,180 |
| மொத்தம் செலுத்தப்பட்ட தொகை: | 1,16,24,880 |

இந்தியாவெங்கிலும், வெளியிலும், கிளைக் காரியாலயங்களும் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

## யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ்

**கம்பெனி லிமிடெட்,**

**எஸ்பிளனேட், சென்னை.**

---

**கோவை கிளை ஆபீஸ்:**

அவினாசிரோடு :: கோயமுத்தூர்

# வசந்தம்



கௌரவ ஆசிரியர்கள்:
டி. கே. சிதம்பரநாத முதலியார். சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

## மலர் மணம்

இயற்கையின் இன்ப எழிலை விளக்கும் ஒரு இனிய காட்சி இம்மாத 'வசந்த' இதழின் மேலட்டையை அலங்கரிக்கிறது.

'கார்த்திகைப் பிறை'யைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்த கவிஞர் தூரன் அவர்கள், அந்த இன்பத்தை ஒரு சொற் சித்திரமாகத் தீட்டி 'வசந்தம்' வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறார்.

தமிழ் அறிஞர் அ. துரைசாமி பிள்ளையவர்கள் 'பண்டி சுருங்குதல்' என்ற தலைப்பில் எழுதியிருக்கும் இலக்கியக் கட்டுரை ஒரு நல்ல ஆராய்ச்சி. கொன்றை வேந்தன், ஔவையார் சம்பந்தமாய் அவர் குறிப்பிடும் அபிப்பிராயங்கள், இலக்கியத் தொடர்புடையவர்கள் சிந்திக்க வேண்டியவை.

'சுகி'யின் 'இட்லியோ பாக்யானத்'தில் நகைச் சுவை இழையோடு வதைச் சுவைத்து, 'முற்கால' இட்லியுண்ட மனத்திருப்தியும், ஆனந்தமும் அடையலாம்.

இளம் எழுத்தாளர்களான பொ. கிருஷ்ணசுவாமியும், க. பஞ்சாபகேசனும் எழுதியிருக்கும் கதைகள், இளம் உள்ளங்களின் துடிப்பையும், உணர்ச்சிப் பெருக்கையும் வெளிப்படுத்துகின்றன.

இன்னும் இந்த இதழில் இடம் பெற்றிருக்கும் சுவையான விஷயங்களைப் படித்துப் பாருங்கள்!

— ஆசிரியர்.

# கார்த்திகைப் பிறை

[ பெ. தூரன் ]

கார்த்திகைப் பிறையைக் கண்டிருக்கிறீர்களா? மெல்லிய மின்னற்கொடி போன்று மேல் வானத்திலே தோன்றுகின்ற அந்த மூன்றாம் பிறையைத்தான் சொல்லுகின்றேன். புதிதாக முளைக்கும் பிஞ்சு மதிக்கீற்றை மற்ற மாதங்களிலே பார்த்திருக்கலாம். ஆனால் கார்த்திகையில் காண்பது அவ்வளவு சுலபமல்ல. ஐப்பசியிலே தொடங்கிய அடைமழை இம் மாதத்திலே சற்று குறைந்தாலும் பெய்து கொண்டுதானிருக்கிறது. வானத்திலே சதா கருமேகங்கள் புகைந்து கொண்டிருக்கின்றன. ஆதலால் பல நாட்களில் பகலவனைக் காண்பதே அருமை; அப்படி இருக்க ஒரு இரண்டு நாழிகை நேரங்கூட வந்து நிற்காத இந்த மின்வளைவைக் காண்பதெப்படி? இவ்வருமையை எண்ணித்தான் 'கார்த்திகைப் பிறை கண்டாற் போல' என்ற பழமொழியும் பிறந்திருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதான் மறுபடியும் கார்த்திகைப் பிறையைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒவ்வொரு கார்த்திகையிலும் நான் ஆவலோடு பிறைச் சிறுமியின் சிரிப்பைக் காணக் காத்துக் கொண்டிருப்பேன். ஆனால் பொல்லாத மேகமொன்று அவளைக் காணுதபடி திரை போட்டுவிடும். ஆனால் இம்முறை எனக்கு நல்ல அதிர்ஷ்டமென்று சொல்ல வேண்டும். இல்லாவிடில் நேற்றுவரை, ஏன் சென்ற இரவிலும், இன்று காலையிலுங்கூட ஒரே அடைப்பும், தூறலுமாக இருந்த வானம் இப்படி மாறிவிடுமா? பகல் ஒரு மணிக்கே மப்பும் மந்தாரமும் நீங்கிச் சூரியனின் பொற்கிரணங்கள் பாய்ந்து கொண்டிருந்தன. அப்பொழுதுதான் பாற்கடலின் வெள்ளலைகளை விட்டு மேலெழுந்த திருமகள் போன்று நிலமகள் புதிய எழிலோடு விளங்கினாள். நீல வெளியிலே முற்றிலும் மேகங்கள் இல்லாமலில்லை. ஆனால் அவை ஆங்காங்கு ஒரு சில குவியலாகக் கிடந்தன. மத்திய பாகங்கள் இருண்டும், விளிம்புகள் வெண்சுதை போன்று ஒளி விட்டுக்கொண்டுமிருந்தன. அவை வானத்தை அணி செய்யும் அழகைத்தான் என்னென்று சொல்வது! கணந்தோறும் கணந்தோறும் மாறி மாறிப் புதிய புதிய வடிவு கொள்வதும், புதிய புதிய சித்திரங்களைத் தோற்றுவிப்பதும், வருணனைக்கு அடங்காத இன்பக் காட்சியாக அமைகின்றது. நான் அந்தி வேளைக்கு முன்பே வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன். பிறையைக் கண்டு மகிழ வீடு ஏற்ற இடமல்ல. நிலா முற்றத்

திலேயிருந்து பார்க்கக் கூடாதா என்று கேட்கலாம். அதை விட நிலங்களிடையே செல்லும் ஒற்றையடிப் பாதைதான் சிறந்தது. அழகு நாக்குருவிகளின் பேச்சையும், செம்போத்தின் கூவலையும், கதிரவனின் பொன்னொளியிலே பளபளக்கும் மரங்களையும், மஞ்சுக் கிரீடம் தரித்த நீலமலைகளையும் அருகிற் சென்று அனுபவித்த உள்ளத்திற்குத்தான் பின்னல் வரும் பிறைக் காட்சியின் முழு இன்பமும் புலனுகும். வீட்டின் சூழ்நிலை அதற்கு அவ்வளவு பொருந்தாது.

புனங்களினிடையே நடந்துகொண்டே இருந்தேன். செங்கதிர்ச் செல்வன் மெதுவாக நீல மலைத்தொடரில் மறைய ஆரம்பித்தான். மேல் வானிலே எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் லேசாக வெண்மேகம் படர்ந்திருக்கிறது. அவற்றிற்குள்ளே புகுந்து சூரிய கிரணங்கள் செய்கின்ற வர்ண ஜாலங்களைப் பாருங்கள்! ஆகா! கிளிப்பச்சை, தாமிரச் சிவப்பு, பசுமஞ்சள் -- அடடா! இந்திர தனுசிலும் அதிகமான வர்ணங்கள் அங்கே நிமிஷத்திற்கு நிமிஷம் இடம்மாறி அமைந்து கொண்டே இருக்கின்றன! கீழ் வானத்தை நோக்கினலோ அங்கே ஒரு தனிக் காட்சி. பஞ்சை வில்லிலிட்டுத் தட்டிப் பட்டை போடுவதற்குக் குவித்து வைத்தது போல மேகத்திறள். அதிலே அந்தி வண்ணச் செந்தூளைத் தூவி வைத்துவிட்டு ஞாயிறு ஒளிந்து கொண்டான். ஒரே காவிச் செம்மை சுடர் விடுகின்றது; அது மட்டுமா? அந்தச் செவ்வண்ணம் பூமியிலும் பிரதிபலித்து எங்கும் புதியதோர் மோகனக் காட்சியை உண்டுபண்ணுகிறது.

இதைப் பார்த்துவிட்டு மேல்புறம் திரும்பினேன். அங்கே முன்பு கண்ட பளிங்குப் பாறை போன்ற பஞ்சைக் காணும். அதற்குப் பதிலாக செஞ்சோதி மேகம் ஒன்று பின்னங்கால்களை ஊன்றி எட்டித்தாவும் குதிரையைப் போல் காண்கிறது.

காண்கிறதென்ரு சொன்னேன்? இப்பொழுது அதையும் காணும்; வேறு ஏதோ ஒரு விந்தையான உருவம். இப்படி நிமிஷத்திற்கு நிமிஷம், விநாடிக்கு விநாடி புதிய சிருஷ்டிகள்; புதிய அழகுகள்; புதிய காட்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன:

இருள் கொஞ்சங் கொஞ்சமாகக் கீழ்த்தொடு வானத்திலிருந்து, மேலே பரவத் தொடங்குகிறது; ஒளி பின் வாங்குகின்றது. அதிலும் ஒரு அழகிருப்பதை நான் கவனித்துக் கொண்டே நின்றேன். வெள்ளி பளிச்சென்று மின்னி வெளி வந்தது.

நிலவரசி வருவதற்கு வெள்ளி விளக்கு எடுத்தாகி விட்டது. தனியாக ஜ்வலிக்கும் அந்த மீனின் வசீகர சக்தியில் கட்டுண்டு உலகம் பிறைமகளை எதிர்பார்த்திருக்கிறது.

அதோ வந்து விட்டாள்! மின்னல் நெளிவு; மெல்லிய தங்கக் கொடி; கார்த்திகைப் பிறை!

பிஞ்சு மதியே, நீ என்ன உண்மைப் பொருளா? அல்லது அழகுத் தேவதையின் இளஞ் சிரிப்புத்தான் இப்படி வானில் தோன்றுகின்றதா? பிறைக் கீற்றே, நீ இத்தனை அழகுடன் இருந்தால் யார்தான் உன்னை நெற்றிப் பட்டமாக அணிந்து கொள்ள மாட்டார்கள்? துறவிகளுக்கெல்லாம் துறவியான அந்தச் சிவபிரானுக்கும் உன்மீது ஆசை பிறந்து முடியில் அணிந்து கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

மறு பக்கம் திரும்பினேன். கிழக்கு வானம் நன்கு இருண்டு விட்டது. செவ்வொளி பெற்று அங்கிருந்த மேகமெல்லாம் பொறாமையால் இருண்ட உள்ளம் போல இப்பொழுது களையிழந்து கிடக்கின்றன.

ஆனால் அவற்றைப் பார்ப்பதில் எனக்கு விருப்பமில்லை. தேவலோகத்துச் சிறுமிகள் செய்துவிட்ட பொன்னோடம் போன்று மிதந்த மூன்றாம் பிறையின் மேலேயே என் நாட்டம் திரும்பியது. பிஞ்சு மதி, பிறைக் கீற்று - இல்லை, இல்லை, இனி வரப்போகும் வசந்தத்திற்கு மன்மதன் புதிதாகச் செய்து கொண்ட வில் - அதிலேயே என் உள்ளம் லயித்து விட்டது.

தூரத்திலுள்ள மரங்களெல்லாம் இருட் குவியல் போலத் தோன்றுகின்றன. அவைகளெல்லாம் இருளின் படை வீடுகளோ? அங்கிருந்து தான் உலகத்தையே வளைத்துக் கொள்ளப் படையெடுப்பு நடக்குமோ? தலை விரித்து நிற்கும் தென்னைதான் இருட்டின் கொடி மரமோ?

பிறை மகளின் பிரகாசம் இப்பொழுது அதிகரித்து விட்டது. ஆனால் அதிக நேரம் அவள் தங்கியிருக்க மாட்டாள். ஒரே சிரிப்போடு அவள் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

மேற்கு மலைத்தொடர் இந்த ஒளி வளைவைப் பார்த்துப் பார்த்து நிமிர்ந்து படுத்திருக்கிறது. தன்னிடம் பிறைமதியாள் வரவேணும் என்று தவங்கிடக்கின்றது.

அதன் நீல மேனியிலே அந்த மின்னல் துண்டு ஒருகணந் தங்கிற்று. ஆகா, திருமாலும் லக்ஷ்மியும்! மணிவண்ணனுடைய மார்பிலே களித்து மறைகின்றாள் சீதேவி.

நான் அந்தக் காட்சியை இன்று பார்த்து விட்டேன்!

# தமிழன்பர் தம்பு

ஏ. ஷண்முகம் பி.ஏ.

கொங்கு நாட்டில் தமிழ் மணம் கமழும் ஒரு சின்னஞ்சிறு ஊர். ஊர் சிறியதாக இருந்தாலும் பெயர் பெற்ற பெரிய வியாபாரஸ்தலம். அந்த ஊரில் தம்பு என்னும் திருநாமத்தைக்கொண்ட ஓர் செட்டியார் இருந்தார். மெள்ள மெள்ளப் படித்து மெட்ரிகுலேஷன் வகுப்பை மிகவும் சிரமத்துடன் எட்டிப்பார்த்தார். மெட்ரிகுலேஷன் பரீட்க்ஷையில் எப்படியாவது தேறிவிட வேண்டுமென்று இரவென்றும், பகலென்றும் பாராமல், அன்ன ஆகாரங்களையும் சட்டை செய்யாமல், பரீக்ஷைக்குரிய பாடங்களைப் படிப்பதிலேயே தம் முழு கவனத்தையும் செலுத்தி வந்தார். தம் ஆங்கிலப் பாடங்களை அள்ளி அள்ளிப் பருகி ஜீரணம் செய்து கொண்டு ஏப்பமும் விட்டார்! கணித சாஸ்திரத்தில் கணக்கு வழக்கில்லாமல் தன் கவனத்தைச் செலுத்தினர். ஆனல் தமிழ்த்தாயை அலட்சியம் செய்து, பரீக்ஷைக்குரிய தமிழ்ப் பாடங்களைக் கவனியாமல் அசிரத்தையாக இருந்து விட்டார். தமிழ்ப் பரீக்ஷைக்கு முந்திய இரவு ஒரு இரண்டு மணி நேரம் வாசித்தால், தமிழ்த்தாயைத் தம் வசமாக்கிக் கொள்ளலாம் என்பது தம்புவின் அபிப்பிராயம் போலும்! தமிழ்த்தாய், தன் புத்திரன் தம்புவினிடம் தன் கருணையைக் காட்டத் தயக்கம் கொண்டாள். எனவே தம்பு தம் தமிழ்ப் பாடத்தில் எண்ணிச் சுட்ட பணியாரங்கள் போல் பதினைந்து மார்க்குகளே பெற்றுப் பரீக்ஷையில் 'கோட்' அடித்து விட்டார்!

தம்புவின் தகப்பனர் இச்சமயத்தில் காலமாகி விட்டதால், ஏக புத்திரனை தம்பு தன் தகப்பனரின் வியாபாரங்களையும், மற்ற நிலபுல அலுவல்களையும் கவனிப்பதன் பொருட்டு, தம் வித்தியாப்பியாசங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலானர். ஏராளமாக வியாபாரம் செய்து திரவியம் சேர்த்தார். தம் மனதிற்கு ஏற்ற மங்கையை மணமும் செய்து கொண்டார். சகல சம்பத்துக்களோடு சுகமாக வாழ்ந்தும், திருப்தி கொள்ளாமல், தாம் பரீட்சையில் தோல்வியடைவதற்குக் காரணமாயிருந்த, தமிழ்த்தாயைச் சபித்துக் கொண்டே இருந்தார். தமிழ்த்தாயை வெறுத்தவராய், தம் அரைகுறைப் படிப்புக் காரண

மாக, அரைகுறை ஆங்கிலத்தையே தம் வேலைக்காரரிடமும், மனைவியாரிடமும், தம்மோடு கூடிப் பழகும் இதர வியாபாரிகளிடமும், நண்பர்களிடமும் 'உபயோகம்' (பிரயோகம் 'என்று சொல்லலாமோ?) செய்து வந்தார். ஆனால் தம்பு பேசுவது, தம்புவுக்கே புரியவில்லையென்றால், மற்றவர்களுக்கு எப்படித்தான் புரியப் போகிறது?

தமிழ்த்தாயைத் தம் தவ அன்னையாக தரிசித்துப் போற்றிப் பாதுகாத்துவரும் தமிழ் மக்கள் தம்புவை வெறுத்துத் தள்ளினர். தம்புவின் உள்ளக் கருத்தை உணர்ந்த தம்புவின் மனைவியும் நண்பர்களும், அவரைச் சீர்திருத்த சிரத்தை கொண்டு, தம்பு தமிழ்ப் பேசினால் ஒழிய தாங்கள் தம்புவினிடம் பேசிப் பழகுவதில்லையென்று தங்கள் முடிவான தீர்மானத்தைத் தெரிவித்து விட்டனர். அனலில் அகப்பட்ட புழுப் போல் தவித்தான் தம்பு. செய்வதின்னதென்று தெரியாமல் திகைத்தான். தன் கொள்கை, அதாவது தமிழ்ச் சொற்களைத் தன் திருவாயால், உச்சரிப்பதில்லை என்பதை, தயவு தாட்சண்யமின்றிக் கைவிடுவதா! அல்லது ஊர்ச்சனங்களுக்குப் பயந்து வெறுத்துத் தள்ளிய தமிழ்த்தாயைக் கட்டி அணைவதா, என்பதே தம்புவின் பெரிய பிரச்சினையாகியது!

தன் மைந்தர்களில் ஒருவன், சிறிதளவு சிந்தனையில்லாத தம்பு படும் துயரத்தைக் கண்டு சகியாதவளாய், அன்னை பாரததேவி தம்புவின் கனவில் தோன்றி "குழந்தாய்! உன் மனக் கவலையை நான் நன்கு அறிவேன். நீ கருத்தறிந்த நாள் முதலாய், நான் இன்று பரியந்தம் உன்னைக் காத்து வளர்த்து வந்தேன் என்பதை நீ உணராமல், என்னை ஒரு சிறு துரும்பாக மதித்து அலட்சியம் செய்தாய். அதைக் குறித்து நான் இன்றும் என்றும் வருத்தம் கொள்வதற்கில்லை. அன்னை தம் மைந்தர்கட்கு ஆற்றும் உதவியென்னவென்றால், மைந்தர்கள் அறியாமல் செய்யும் சின்னஞ்சிறு பிழைகளைப் பொருட்படுத்தாமல் அவர்களைச் சீர்திருத்தம் செய்து சிறப்படையச் செய்வதே. ஆதலால் நீ அறியாமல் செய்த பிழைகளை நான் பொருட்படுத்தவில்லை. பரீட்சையில் தோல்வியடைந்ததைக் குறித்து நீ கவலையும் கொள்ள வேண்டியதில்லை. என் தவப் புதல்வர்களில் நீ தலை சிறந்தவனாக வர உனக்கு விருப்பம் இருந்தால் நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது மிகவும் சுலபமான காரியம். அக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு உரிய சக்தியும், அறிவும் உன்னிடம் இருக்கிறதப்பா" என்றாள்.

அன்னை பாரததேவி, மைந்தனுக்குத் தன் புத்திமதிகளைச் சொல்லி முடிக்கு முன், தம்பு படுக்கையினின்றும் கீழே குதித்தவராய், மண்டியிட்டுத் தம் இரு கரங்களையும் கூப்பிக் கிழக்கு முகமாகத் திரும்பி, அன்னை பாரததேவியை வணங்கி "அன்னையே! உன் மைந்தர்களில் ஒருவன் நான். அறியாமல் தெரியாமல் கள்ளம் கபடமின்றிச் செய்த பிழையைப் பொறுத்து ஆதரித்து அருள்வது உனது கடமை. காலால் இடும் பணியை நான் சிரத்தால் செய்யக் காத்திருக்கிறேன்" என்று தன்னையும் அறியாமல் ஆங்கிலக் கலப்பில்லாத தெள்ளிய தேனிசைத் தமிழில், தன் உள்ளக் கருத்தைத் தெரிவித்துக்கொண்டான். அன்னையின் ஆதரவு கிடைக்குமெனில்

தீந்தமிழ் மொழி, தேனினும் இனியதாக ஊறி ஊறி, நீர்ப் பெருக்கெடுத்து நித்திய வாழ்க்கையை அலங்கரிக்கச் செய்யுமல்லவா?

மண்டியிட்டுப் பரதவிக்கும் தம்புவைப் பார்த்து, தமிழ்த் தாய் மீண்டும் பேசுகையில் "குழந்தாய்! நான் உனக்கு இடும்பணிகள் மிகச் சிலவேயாகும். உனக்கு தேக சிரமம் கொடுக்க எனக்கு அணுவளவேனும் விருப்பமில்லை. முதலாவதாக நீ செய்ய வேண்டுவது என்னவென்றால் ஆங்கில பாஷா மோகத்தில் மதி மயங்கி, மன்றாடித் திரியும் உன் போன்ற சகோதரர்கள் பலருக்கு தமிழ் மணத்தின் பெருமைகளை எடுத்துக்காட்டி, தமிழ் மொழியில் வெளிவரும் கணக்கற்ற பத்திரிகைகளைப் படிக்கச் செய்தல் வேண்டும். கூடுமான வரையில் தமிழ்ச் சொற்களை அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டும். அடிமை வாழ்விற்கு ஊன்றுகோலாயிருக்கும் அன்னியமொழிகளை ஆதரிப்பதை அடியோடு நிறுத்துவது அவசியம். சுருங்கச் சொன்னால் ஆங்கில பாஷையில் அபிவிருத்தியடைந்த உன் சகோதரர்களுக்கு தமிழ் மொழியிலும் பற்றுதல் உண்டாகச் செய்தல் வேண்டும். இரண்டாவதாக என் பெருமையை உலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டு, எண்ணற்ற உன் திரவியத்தை தமிழ்க்கலை வளர்ச்சியின் பொருட்டு மனச் சங்கடமின்றி, சந்தோஷமாக நீ உபயோகிக்கவும் வேண்டும். இதுவே என் தவக்குழந்தையாகிய நீ எனக்குச் செய்யும் பேருதவியாகும்" என்று சொல்லி மறைந்தாள்.

மறு நாட்காலையில் தம்பு செட்டியார் தம் கனவின் மகிமையை முதலாவதாகத் தம் மனைவிக்கும், பின்பு தம் நண்பர்களுக்கும் தெரிவித்து பூரிப்படைந்தார். தமிழ் நாடெங்கும், ஏன் உலக முழுவதுமே பரவ, தான் சேகரித்து வைத்த திரவியத்தை தாராளமாக பயன் படுத்தலானார் தம்பு. தக்கோர் உதவியால் தமிழ் மணம் கமழச் செய்தார்.

ஆங்கிலத்தை அடியோடு மறக்கவில்லை. 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற கவியின் வாக்குப்படி எந்தத் தோட்டத்தில் மலர்ந்த புஷ்பங்களானாலும் அழகும், இனிமையும் உள்ள மலர்களையே எல்லோரும் சூட வேண்டும் என்று பிரசாரம் செய்தான். தம்புவின் பிரசாரத்தில் கவிதை அழகு ததும்புவதாக விமர்சகர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி ஒன்றும் தம்புவிற்குத் தெரியாது. ஆனால், அன்னையின் உள்ளம் குளிர்ந்திருக்கும் என்பது மட்டும் தம்புவிற்கு நிச்சயம் தெரியும்!

★

# சுக வேதனை

## கு. ப. சேது அம்மாள்

ராஜகுமாரன் சித்தார்த்தனுடைய கண்ட பூஷணமாகிய நவரத்ன ஹாரத்தை வெகுமதியாகப் பெற்ற யசோதரையின் ஆனந்தம் உடல் கொள்ளவில்லை!

பரவசத்தால் இட்ட அடியும் எடுத்த அடியும் தள்ளாட ஒருவாறாக தன் மாளிகைக்குள் வந்து நுழைந்தாள் யசோதரை.

அவள் எப்பொழுது வருவாள் என்று ஆவலோடு காத்திருந்த அவளுடைய தோழி சீலவதி கையில் முத்தாரத்தியை ஏந்தியபடி முன் வந்து திருஷ்டி கழித்து திலகமிட்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஏதோ பெரும் செயலால் சிரமமுற்றவள் போல் ஆஸனத்திலமர்ந்து சாய்ந்து கொண்ட யசோதரையின் முகத்தை உற்றுப் பார்த்தாள் சீலவதி.

பிறகு அருகில் வந்துட்கார்ந்து அவள் முகவாயைப் பற்றி தன் புறமாகத் திருப்பிப் பார்த்தாள்.

"என்னடீ. நானும் பார்க்கிறேன்; வந்தது முதலாக வைத்த கண் வாங்காமல் என் முகத்தையே பார்க்கிறாயே என்னவோ! அப்படி என்ன இருக்கிறது......"

"இருப்பதால்தான் பார்க்கிறேன்! உன் தோழியாக இருந்து கொண்டு இதுகூட தெரியவில்லையானால்........."

"என்ன இருக்கிறது?"

"ராஜகுமாரனிடம் பரிசு பெற்ற ஆனந்தத்தை ரஞ்சிதமாகச் சொல்லுகிறது உன் கண்கள்!"

"எப்படி? ரஞ்சிதமாகவா! அப்படியென்றால்?"

"சொல்லுகிறேன்; பெற்ற வெகுமதி என்ன?" என்று கேட்டாள் சீலவதி.

உடனே தனது மேகலையில் செருகிக் கொண்டிருந்த ரத்ன ஹாரத்தை எடுத்து "இதோ பார். இதுதான்!" என்று காண்பித்தாள் யசோதரை.

கையில் வாங்கிப் பார்த்தாள் சீலவதி.

விசித்திர சாந்தி பொருந்திய அந்த மாலையின் வர்ண சோபையைக் கண்டு வியந்து விட்டு, "யசோதரா, இதை நான் ராஜகுமாரனுடைய கழுத்திலன்றோ பார்த்தேன்?"

"ஆமாம்"

"அது எப்படிக் கிடைத்தது உனக்கு?"

"அது கிடைக்க வேண்டும் என்றுதான் கடைசியில் போனேன் என்று வைத்துக் கொள்ளேன்!"

"யசோதா, விபரமாகச் சொல்லு, விளையாடாதே........."

"விளையாடவில்லையடி, நிஜம் தான். மறைவான ஓரிடத்திலமர்ந்து கொண்டு அங்கு நடப்பவற்றை யெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன் — கடைசியாக நாம் போகலாமென்று,........."

"ஊம்!"

"பாபம், ராஜகுமாரிகளெல்லாம்......... பிரமாதமாக அலங்காரம் செய்து கொண்டு, ஆடிய ஆட்டமும், பாடிய பாட்டும்..."

"ஆனால் நீ?"

"ஐய! தூ! வெட்கமில்லை — ஒரு யுவனுக்கு முன்பாக நின்று ஆடவும், பாடவும்? அப்படிச் செய்தும் கூட அந்த விசித்திர பிரகிருதி அசைய வேண்டுமே, நிமிர்ந்து பார்க்க வேண்டுமே!',

மலர விழித்தாள் சீலவதி.

"ஆமாடீ! இதுவும் ஒரு விதமா என்று பார்த்துக் கொண்டிருந்து அந்த மோகினிகளின் ஆர்ப்பாட்ட மெல்லாம் ஓய்ந்த பிறகு கடைசியாகப் போனேன் நான்! வெகுமானத்திற்காக குவிக்கப்பட்டிருந்த ஆபரணக் குவியல்களில் ஒன்றுகூட மிச்சமில்லை. ராஜகுமாரன் என்னதான் செய்கிறான் பார்ப்போமென்று, நினைத்துக் கொண்டு போனேன். கேட்டேன் 'வெகுமதி எங்கே' என்று!"

"அடி, சாஹஸக்காரி!"

"சாஹஸமென்னடி இதில்? எல்லாரையும் போல எனக்கும் ராஜகுமாரன் பரிசளிக்க வேண்டியதுதானே?"

"நியாயம்! அப்புறம்?"

"அப்புறமென்ன? அளிப்பதற்கு ஒன்றுமில்லாமல் போனதும் தமது கழுத்திலிருந்த ஆபரணத்தைக் கழற்றிக் கொடுத்தார், பெற்றுக் கொண்டேன்! என்று சொல்லி முடித்தாள் யசோதரை,

சற்று நேரம் வரையில் சீலவதி பேசவில்லை. அவளுடைய மௌனம் யசோதரைக்கு பரபரப்பைக் கொடுத்தது. "முதலில் சுவராஸ்யமாகக் கேட்டாய். பிறகு என்ன பேச்சே காணோமே!" என்று அவளைக் கிண்டினாள் தானாக.

"யோசித்துப் பார்த்தேன் சற்று, நிஜத்தை சொல்லு என்னிடத்தில்; வெறும் ஆபரணம் மட்டுந்தானா அவர் உனக்களித்தது?"

"அவ்வளவுதான்!"

"உள்ளதைச் சொன்னால் உடம்புக்காகாது; பொய்யே சொல்லு!"

"என்னடீ உள்ளது? என் மனதில் ஒளிவு மறைவு ஒன்றும் கிடையாது."

"மனதா! அதெங்கிருக்கிறது உன்னிடம்?"

"பின்?"

"கேட்கிறாயா? கேள்! நவரத்ன ஹாரத்தைக் கொடுத்து ராஜகுமாரன் உன். மனதை எடுத்துக் கொண்டு விட்டாரே அதுதான்!"

"சீ, வாயை மூடு. யார் காதிலாவது படப் போகிறது! பரிகாசம் என்றால் எது வரையிலும் என்று நீ நினைத்திருக்கிறாய்?" என்று முகச் சுளிப்புடன் கேட்ட யசோதரையை அணுகி அவள் முகத்தோடு முகம் இடிக்க நின்று மௌனமாகத்தலையை ஆட்டினாள். பிறகு கலகல வென்று சிரித்துக் கொண்டு, "ஊம்! முடிந்த வரை

யில் ரகசியத்தைக் காப்பாற்று! சீலவதி இருக்கவே இருக்கிருள் கடைசியில் தூது செல்ல!"

மாதுர்யம் சொட்டும் முகத்தில் கோபத்தை வரவழைத்துக் கொண்டு, "நீ என்ன செய்வாய்; உன் குற்றமில்லை! எல்லாம் நான் கொடுத்த இடம் உனக்கு–பேசு கிருய்! பேசிக் கொண்டிரு உன் பாட்டில். நான் போகிறேன் இதை விட்டு வேறெங்காவது....."

எழுந்து இரண்டடி நடந்த யசோதரையின் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் சீலவதி.

"விடு கையை."

"உட்கார், ரொம்ப கோபித்துக் கொள்ளாதே ராஜகுமாரி! இங்கே கொண்டா அந்த ஹாரத்தை!" என்று அவளுடைய மேகலையிலிருந்து ஹாரத்தை யெடுத்தாள். யசோதரையின் கழுத்தில் அதை அணிவித்துக் கொண்டே, "இது நன் முகூர்த்தமாக இருக்கட்டும். அடுத்த ஹாரம் புஷ்ப ஹாரமாக ராஜகுமாரன் கையால் சூடிக் கொள்ள நம் குலதெய்வம் அருள் புரியட்டும்" என்று சொல்லிவிட்டு கண்ணாடியின் முன்பு அவளை அழைத்து வந்து நிறுத்தினாள் சீலவதி.

## 2

நல்ல நிலா இரவு. அரண்மனையின் அர்த்த ஜாமத்தை அறிவிக்கும் காலமணியும் அடித்து ஓய்ந்து ஒரு நாழிகைப் பொழுதாகி விட்டது.

மஞ்சத்தில் புரண்டு கொண்டிருந்த யசோதரை மெல்ல எழுந்து நிலவொளியில் நின்ருள். வியர்வையால் சொட்ட நனைந்த அவளுடைய உடம்பில் வெளிக் காற்று பட்டதும் அப்பாட என்றிருந்தது அவளுக்கு.

குறுக்கும் நெடுக்குமாக நாலு தரம் உலாவினாள். கழுத்திலிருந்த ரத்ன ஹாரத்தைக் கையிலேந்தி சரத்தையும் பதக்கத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். கண்களில் ஒற்றிக் கொண்டாள் ஒரு தரம்.

'என் ராச' என்று ஏதோ சொல்லி நெட்டுயிர்த்தது அவள் நெஞ்சம்.

சோர்வுற்று, அருகிலிருந்த கைப்பிடிச் சுவற்றில் நின்ற பளிங்கு ஹம்ஸத்தின் கழுத்தைக் கட்டிக்கொண்டு நின்ருள்.

அவளுடைய கண்கள் தாமாக மூடிக் கொண்டன. அகத்தில் அந்த அழகன் சித்தார்த்தனுடைய திவ்ய ரூபத்தை நினைத்து உள்ளம் பூரிக்க தன்னை மறந்து போனாள் யசோதரை.

அப்படி அரை நாழிகை சென்றது.

சில்லென்ற கர ஸ்பரிச முண்டாகவே திடுக்கிட்டு விழித்துப் பார்த்த யசோதரையின் முன்பு அன்பு நிறைந்த பார்வையுடன் சீலவதி நின்றதைக் கண்டு திகைத்துப் போனாள் அவள்.

"யசோதரா, என் சங்கை கொண்டு திகைக்கிருய்! என் உயிரைப் போன்றவளே. அதோ பார்! எதிர்த்தாப் போல் தெரியும் உப்பரிகையில் நிற்பது யார் என்பதை!"


சீலவதி காண்பித்த திசையில் பார்த்தாள் யசோதரை. எட்டத்திலிருந்த போதும் அது இளவரசனுடைய உருவம் என்பதைநன்கு

தெரிந்து கொண்டாள் யசோதரை.

நாணமும், அதே சமயத்தில் பேரானந்தமும் உள்ளத்தில் உருவெடுக்க யசோதரையின் பால் முகத்தில் செம்மை படர்ந்தது.

"என்னுயிர் போன்ற யசோதரா, நில், சற்று நின்று, ராஜகுமாரனுடைய தாகம் சற்று தணியும் வரையில்........."

சீலவதியின் வார்த்தைகள் முடியும் வரையில் யசோதரை அங்கு



"சீலவதி, வா நாம் போகலாம்" என்று சொல்லிப் புறப்பட்டாள் யசோதரை.

நிற்கவில்லை. ஓட்டம் பிடித்தவள் தனது அறைக்கு வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு விட்டாள்.

மஞ்சத்தில் சாய்ந்து ரத்ன ஹாரத்தைப் பற்றி உதடுகளில் நெருடிக்கொண்டே சாவகாசமாக யோசிக்க ஆரம்பித்தாள் யசோதரை!

அவளுடைய நினைவின் முன்பு மாலையில் நடந்த சம்பவங்கள், ஆரம்ப முதல் அந்தியம் வரையில் வரிசைக்கிரமமாகத் தோன்றி— அதே காட்சியை மறுபடி காண்பித்தது!

ராஜபுத்திரிகள் ஒவ்வொருத்தியின் உள்ளப்போக்கும் செயலும் பாவமும் அப்போதைவிட இப்பொழுதுதான் தெளிவாகப் புரிந்தது யசோதரைக்கு!

இந்தக் கட்டத்தில் வந்து நின்றுகொண்டதும் யசோதரையின் தேகத்தில் திடீரென்று ஒரு புல்லரிப்புக் கண்டது!

ராஜகுமாரன் முன்பு சென்று நின்றுகொண்டு தனது வாயைத் திறந்து பரிசு கேட்டது, முதலில் 'இல்லை' யென்றது, அப்புறம் தனது கழுத்து மாலையைக் கழற்றிக் கொடுத்த தகைமை—அந்த சமயத்தில் அவனுடைய முகத்தில் தோன்றிய மலர்ச்சி, ஆபரணத்தைக் கை நீட்டி வாங்கிய சமயம் இருவரும் அனுபவித்த அந்தக் கரஸ்பரிசம்!

இந்த நினைவு யசோதரையின் உணர்ச்சி இனிப்பாக இனித்தது! அந்த இன்பப் பெருக்கின் சுகானுபவத்தில் விஷமம் செய்துகொண்டிருந்த அவளுடைய கைகள் செயலற்றன! மலர்ந்த விழிகள் இமைக்காமல் மலர்ந்தவாறிருந்தன.

நினைவு ஓடிற்று மறுபடி! என்ன ஆச்சரியம்! அவ்வளவு ரூபவதிகளும், ராஜகுமாரனுடைய மனதை நெருங்கவும் முடியாமல் ஆசாபங்கமடைந்து பின் வாங்கினார்கள்! சர்வ சாதாரணமாக நான் சென்று—இல்லை—விஷமத்திற்கென்றே நான் கடைசியில் போய்க் கேட்டேன், வெறும் விளையாட்டிற்காக!

ஆ! என் மிடுக்கை குதிரையின் கடிவாளங்களைப் போல தன் கையில் பற்றிக்கொண்டு விட்டு, 'இந்தா, பெற்றுக்கொள்' என்று எனக்களித்தது உண்மையில் எது?

கேவலம் பொருள் மதிப்புப் பெற்ற இந்த ஆபரணமா? சை! அல்ல! தான் திரும்பிப் போகும்போது தன்னை நெடு நோக்காக நோக்கிய ராஜகுமாரனுடைய அந்தப் பார்வை?

ஆ! இளவரசன் நிச்சயமாக என்னை வெற்றி கொண்டு விட்டார்! எப்படி? எனது பெண் கர்வத்தை, எனது சௌந்தரியச் செருக்கை தனது ஆசனமாக்கிக் கொண்டு, தன்னுட்சியில் சிக்கிய அந்த அபலை என்ன செய்கிறாள்—என்று இந்த அர்த்த ராத்திரியில் வேடிக்கை பார்க்க வன்றோ வந்து நின்றிருக்கிறார்!

ஆம்! எனது பெண் தன்மையால் அவருக்குப் பெரும் வெற்றி! தன் ஜயத்தைப் பற்றி மகிழ்வு கொண்டிருப்பார் நிச்சயமாக— என்னை உப்பரிகையில் நிலவொளியில் பார்த்ததுமே!

வாஸ்தவத்தில் யசோதரையின் உள்ளம் இவ்வித இன்பத் திளைப்பில் அகப்பட்டுத் திணறிற்று! நெஞ்சத்தின் படபடப்பில் வேர்த்தது! எனினும் அந்த நினைவிலிருந்து மீளவும் அவளுக்கு இஷ்டமில்லை. அந்தச் சுக வேதனையின் அனுபவமும் வேண்டித்தான் இருந்தது அந்த யுவதிக்கு!

# பண்டி சுருங்குதல்

அ. துரைசாமி பிள்ளை

உயர்திருவாளர் இராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள் 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு என்னும் நீதி வாக்கியப் பொருளை விளக்கி, அழகுற ஆராய்ந்து எழுதிய கட்டுரையை, ஆவணி மாத 'வசந்தத்' தில், இருமுறை வாசித்து இன்புற்றேன். வழக்கமாகக் கூறப்படும் அர்த்தத்தை ஏற்காது, தக்க காரணங் காட்டித் தள்ளி, வாக்கியத்தின் உண்மைப் பொருள் ஈதென ஆதாரத்துடன் நிறுவித் தம்முடைய 'வியாக்கியானம் சரியா இல்லையா என்பதை'க் கட்டுரையை வாசிப்பவர்களைச் சொல்லும்படி வேண்டுகிறார். அழைப்பில்லாமலே, டாக்டர் அவர்களின் கட்டுரை என் கருத்தைக் கவர்ந்தது. ஒரு முறை படித்தேன்; முடித்த பின் மீண்டும் கருத்தூன்றி நிதானமாகப் படித்தேன். கட்டுரை என் மனத்தெழுப்பிய எண்ணங்களை ஈண்டு தருகின்றேன்.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்னும் இவ்வாக்கியம் 'கொன்றை வேந்தன்' என்ற நீதி நூலில், ஐந்தாவது வாக்கியமாக உளது. 'உணவு குறைதல் பெண்களுக்கு அழகு' என்பது சாதாரணமாகச் சொல்லப்படும் அர்த்தம். உணவை மிகுதியாய் உட்கொண்டு வந்தால் ஊன் அதிகமாக வளர்ந்து உடல் பருக்கும். உடல் பருத்திருத்தல் பெண்களுக்கு அழகு தராது. ஆதலின் குறைவாக உண்டு, கொடிபோல இருக்க வேண்டும் என்பதாகப் பழைய உரைக்குச் சொல்லப்படும் சமாதானத்தை டாக்டர் அவர்கள் ஒப்பவில்லை. "ஆகாரத்தைச் சுருக்கிக் கொள்வதால் மட்டும் அழகு ஏற்பட்டு விடாது. உண்டி அதிகம் குறைந்தால் உள்ள வசீகரத் தோற்றமும் போம்" என்ற உண்மையை எடுத்துக்கூறிப் பழைய உரையை மறுக்கிறார்.

சில பருவங்களில் ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிக ஆகாரம் அவசியமாகும். மாதர் மாதாக்களாக மாண்புறுந்தன்மையர். ஆதலின் பெண், கருவுற்று ஈருயிர்க்காரியாகி, வயிற்றினுட் பிண்டத்தை வளர்க்கும் போதும்; ஈன்றபின் உலகனை உவந்தளிக்கும் உணவுப் பொருள்களைத் தானே எடுத்து உண்டு உடலை வளர்க்கச் சக்தி வரும் வரை, வாளாக்கிடந்தழும் குழந்தைக்குத் தன் உதரத்தைத் தாயன்பினல் கனிவித்து அமுதாக்கி ஊட்டி வளர்க்கும் காலத்தும், பெண்களுக்குச் சற்று அதிக அளவில் உணவு வேண்டும் என்பதை யாவரும் (ரேஷன் அதிகாரிகள் தவிர) ஒப்புக் கொள்வார்கள். ஒப்புக்கொண்டு அதிக உணவை உட்கொள்ளும்படி வற்புறுத்தா விட்டாலும், உணவைக் குறைத்து உண்ணும்படி பெண்களுக்கு உபதேசம் செய்ய எவரும் முன் வாரார்; எனவே மருத்துவ நூல் வல்லார், அதிலும் நம் நாட்டின் ஏழ்மை நிலையை நன்குணர்ந்த நல்லார் தம் கட்டுரையில் 'குறைத்துண்பது பெண்களுக்கழகு' என்ற கருத்தை நிராகரித்திருப்பது

வியப்பன்று, பொருத்தமே. மேலும், பெண்ணின் உறுப்புகளில் பருத்திருக்க வேண்டியவை சில, சிறுத்திருக்க வேண்டியவை சில. பருக்க வேண்டியவை பருத்தும், சிறுக்க வேண்டியவை சிறுத்தும் இருப்பதே அழகாம். பெண்களுக்கு இடை மிகவும் சிறுத்து இருப்பதுதான் அழகு. இடையை அடுத்துள்ள வயிறும் சிறியதாக, உப்பல் இல்லாமல் உள்ளடங்கி இருக்க வேண்டும் என்று கூறி உடலமைப்பிலக்கணத்தை ஆதாரமாகக் கொண்டு பெண்களின் வயிறு சுருங்குதல் அழகுதரும் என்று தாம் எடுத்துக் கொண்ட நீதி வாக்கியத்திற்கு உரை காண்கிறார். இதுவரை டாக்டர் அவர்கள் கூறியவை எனக்கு முற்றும் உடன்பாடாம். டாக்டரவர்கள் கண்ட உரையே கொன்றை வேந்தனின் உண்மையான வாக்கியத்திற்குச் சரியான உரையும் ஆகும். ஆனால் 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்பது உண்மையான வாக்கியம் அல்ல.

"உண்டி" என்ற பதததற்கு உணவு ஏற்றுக் கொள்ளும் பை என்பது அர்த்தமாகக் கொள்ள வேண்டும்" என்று டாக்டர் அவர்கள் சொல்வதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. உண்டி என்னும் சொல்லுக்கு 'வயிறு' என்னும் பொருள் யாண்டும் காணப்படுவதில்லை. ஆகு பெயராகவேனும் கொள்ள இடந்தருவதில்லை. காசு, பணம் சேர்க்க உபயோகிக்கும் 'ஹூண்டி' 'உண்டியல்' என்ற பிற மொழிச் சொல்லுக்கும், உணவு என்ற பொருளைத் தரும் 'உண்டி' என்ற தமிழ்ச் சொல்லுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. உண்டிக்கு வயிறு என்று வலிந்து பொருள் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. 'வயிறு' என்ற பொருளைக் குறிக்கத் தமிழில் பல சொற்கள் உள. இவற்றுள் 'பண்டி' என்பதும் ஒன்று. 'பண்டி' என்ற சொல்லுக்கு நேரான பொருள் வயிறு. எனவே டாக்டர் அவர்கள் ஆராய்ந்து நிறுவிய உரைக்கு நேரான வாக்கியம் 'பண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு' என்பதுவேயாகும். 'பண்டி' என்ற பதம் அதிகமாகப் பயிலப்படாத நிலையில் இவ் வாக்கியம் புதியதாக ஒலிக்கலாம். அதிலும் இது இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் பிறிதோர் வாக்கியத்திற்குச் சொந்தமான இடத்தில் வந்து ஒண்டி நின்றால் இதை அடையாளம் கண்டு பிடிப்பது கஷ்டமாகத்தான் இருக்கும். கொன்றை வேந்தன் நீதி நூலில் இது சம்பந்தமாக உணரப்படும் சில வேறுபாடுகளை இனிக் கூறுவேன்.

"கொன்றை வேந்தன் செல்வன் அடியினை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" என்னும் பிள்ளையார் வாழ்த்துடன் ஆரம்பித்து மொழிக்கு முதலில் வரும் 103 எழுத்துகளில் ஒரு சில போக ஒவ்வொரு எழுத்திற்கும் ஈரசை நாற்சீர் அளவடி ஒவ்வொன்றையும் பொறுக்கி அகர வரிசைப் படுத்திக் கோவை செய்திருக்கும் ஓர் சிறு நூல், கொன்றை வேந்தன் என்பது. நூலின் முதல் இரு சீர்களின் பெயரால் வழங்கப் படும் இதனை ஔவையார் அருளிச் செய்தனர் என்பர். சிறந்த கருத்துக்களைச் சுருங்கிய வார்த்தைகளில் விளங்கக் கூறும் உயரிய நூல். அகர வரிசையில் எதுகைமோனைச் சிறப்புடன் அளவொத்த அடிகளாய் இருப்பதால் பாடம் செய்தற் கெளிது.

இதன் முதல் வரி "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது. ஐந்தாவது வரி 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்பது. இவ்வரி உகர உயிரை முதலாகக் கொண்டிருக்கும் காரணத்தால் 5வது இடத்தைப் பெற்றது. உண்டி என்பதற்கு வயிறு என்று வலிந்து பொருள் கொண்டாலன்றிப் பொருள் சிறப்பதில்லை என்று மேலே கண்டோம்.

இதே கருத்தைத் தெளிய உரைக்கும் வாக்கியம் "பண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" என்பதாம். இவ்வாக்கியம் எதுகைச் சிறப்புடன் பொருட்டெளிவும் உள்ளது. ஆனால் இவ்வாக்கியம் 5 வது வரியாக அமைய முடியாது. 'ந' கர வரிசை எழுத்துக்களை முதலாக உள்ள வரிகளுக்குப் பின் 'ப'கர வரிசை ஆரம்பத்தில் இருக்க வேண்டும். 'நோன்பென்பது கொன்று தின்னாமை' என்ற வரியின் கீழ் இருக்க வேண்டும். இப்பொழுது இந்த இடத்தில் "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்" என்னும் வாக்கிய மிருக்கிறது. 'பண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்னும் வரி, தலை இழந்து உகர உயிர் ஏற்று உருமாறி முன்னேறி ஐந்தாவது இடத்திற்கு வந்தது. ஆயின் அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த வரி யாது? அது என்னவாயிற்று? ஊரவோரன்கை இரவாதிருத்தல் என்பது ஐந்தாம் வரியாய் ஆதியில் அமைந்திருந்தது. ஊரம் என்பதற்கு ஊக்கம், பலம், ஞானம், வலிமை என்று பொருள். உரவோன் என்றால் பலவான்; அறிவாளி என்று அர்த்தம். வல்லவன் என்று சொல்லப்படுபவன் எவரிடத்தும் எப்பொருளையும் யாசியாதிருப்பவன் என்பது இவ்வரியின் கருத்து. தன் பலம் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் சீரிய ஒழுக்கத்தை வற்புறுத்தி, யாசித்தவன் இழிவையும், யாசிப்பவன் வல்லவன் ஆகான் என்பதையும் குறிக்கிறது. இதே கருத்து 'ஆத்திச் சூடி'யில் 'ஏற்பது இகழ்ச்சி' என்று எட்டாவது வரியில் கூறப்பட்டிருக்கிறது. இதனை நம் நாயனார் எவ்வளவு வன்மையோடு வற்புறுத்துகிறார் 'இரந்தும் உயிர் வாழ வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்!' நீதி நூல்களிலெல்லாம் ஈதலின் சிறப்பைச் சொல்லி உடனடியாக ஏற்றலின் இழிவையும் சொல்லுவது நம் முன்னோர் மேற்கொண்ட முறை. 'இயல்வது கரவேல், ஈவது விலக்கேல் என்பவற்றை அடுத்து உடனே 'ஏற்பதிகழ்ச்சி' என்று ஆத்திச் சூடியில் காண்கிறோம்.

அதுபோலக் கொன்றை வேந்தனிலும் 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்ற வரியில் ஈதலின் சிறப்பையும் ஈயாது வைக்கும் பொருள் தீயவழியில் போம் என்பதையும் கூறிய பின் இரவாதிருத்தலின் சிறப்பையும் இரத்தலின் இழிவையும்தான் சொல்லியிருக்க வேண்டும். ஆதலின் ஊரவோரன்கை இரவாதிருத்தல் என்னும் வாக்கியமே இப்பொழுது 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்னும் உருமாறிய வாக்கியம் கொன்றை வேந்தனின் ஐந்தாம் வரியாய் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்க முற்றிலும் தகுதியுடைய கருத்தைக் கொண்டது. இவை போன்ற மாறுபாடுள்ள இன்னும் சில உள. அவை பற்றி ஆராயும் அவசியம் இது போதில்லை. ஆனால் கொன்றை வேந்தனையும், ஆத்திச் சூடியையும் இயற்றிய ஔவையைப் பற்றி மட்டும் சிறிது கூறுவேன்.

ஔவை என்ற சொல்லுக்கு தவப் பெண், தாய் என்று அர்த்தம். தவ ஒழுக்கத்துடன் தாயன்பு மிகுந்துள்ள பெண்கள் அனைவரும் ஔவைகள் ஆவர்.

ஔவை என்ற பெயருடன் வெவ்வேறு காலத்தில் இருந்த பலரையும் ஒருவராகக் கொண்டு, பல செய்திகளும் பல பாடல்களும் வழங்கி வருவதால் ஔவையைப் பற்றிய வரலாறு விளங்குவது அவ்வளவு எளிதன்று திருவள்ளுவருடன் பிறந்து பாணன் வீட்டிலே வளர்ந்த ஔவையும், பாரிமகளிரைக் கோவலூர் தெய்வீகனுக்கு மணம் முடித்து வைத்த ஔவையும், குலோத்துங்க சோழன் கலியாணத்திற்குச் சென்று 'வரப்புயர' என வாழ்த்திய ஔவையும், தகடூர் அதிகமான் நெடுமான் அஞ்சியிடம் கருநெல்லிக் கனிபெற்ற ஔவையும், சிலம்பியிட்ட கூழைக் குடித்து அச்சிலம்பிமீது பொய்யாமொழி பாடி முடிக்காது விட்ட வெண்பாவைப் பாடி முடித்துக் கூழுக்குப்பாடி எனப் பெயர் பெற்ற ஔவையும், புல்வேளூர் பூதன் பரிந்திட்ட வரகரிசிச் சோற்றைப் புகழ்ந்து பாடிய ஔவையும், அசதிக் கோனுன் அரும்பசிக் குதவிய கஞ்சியைக் குடித்து, அவன் மீது கோவை பாடிய ஔவையும், விநாயகரைப் பூசித்து விநாயகர் அருளால், வெம்பரிமீது சென்ற சுந்திரமூர்த்தி சுவாமிகளுக்கு முன் கயிலை சேர்ந்து "குதிரையும் காதம், கிழவியும் காதம்" எனக் கூறிய ஔவையும் ஒருவராய் இருக்க முடியாது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்குமேல் அவர் வாழ்ந்திருந்ததாக சொல்லப்படுகிறது. தனிப்பாடல்கள் தவிர இவர் செய்த நூல்கள் பல.

வேறு வேறு காலத்தில் மூன்று ஔவைகள் இருந்ததாக ஆராய்ச்சிக்காரர் சிலர் கருதுகின்றனர். வள்ளுவர் காலத்து ஔவையும், குலோத்துங்கன் காலத்து ஔவையும், சுந்தரர் காலத்து ஔவையும், வேறு வேருனவர் எனக் கருதலாம். ஔவைகள் எவ்வளவு பேராயினும் நம் கொன்றை வேந்தனின் ஆசிரியர் எந்த ஔவையும் அல்ல என்று நான் கருதுகிறேன். கொன்றை வேந்தனை இயற்றியவர் பலர். தொகுத்து வெளியிட்டது ஒரு சபை. நீதி நூற் கல்வியை நாட்டில் பரவச் செய்வதற்கு இக்காலத்து இருக்கும் இரண்டொரு ஆசிரியர் கழகங்களும் தமிழ் சங்கங்களும் போன்று, தமிழ் அரசர்கள் ஆண்ட முற்காலத்திலும் "அவைகள்" இருந்திருக்க வேண்டும்.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளின் நல்லொழுக்கத்தையும் நீதிநூல் அறிவையும் வளர்க்க வேண்டி, எளிய நடையில் வெள்ளைச் சொற்களைக் கொண்டு சிறிய வாக்கியங்களாக அமைத்து, புலவர்களைக்கொண்டு அவையின் பெயரால் வெளியிட்டிருக்க வேண்டும். அவையார் (சங்கத்தார், கழகத்தார், சபையார்) திரட்டி வெளியிட்ட நீதி வாக்கியத் தொகைகள் ஔவைப்பாட்டி இயற்றியதாக வழங்கி வருகின்றன. இவ்வாறு அனுமானிப்பதற்கு மேற்படி நூல்களில் சில சான்றுகள் உள. அகத்தியர் தலையில் சுமத்தப்படும் அநேக நூல்களைப்போல (வைத்தியம், ஜோதிடம், மாந்திரீகம்) ஔவையார் தலையிலும் சுமத்தப்படும் நீதி நூல்கள் பல. "அவையார்" "ஔவையார்" ஆவது எளிது. பாட்டி சொல்வதைச் சிறுவர் பிரியத்துடன் கேட்பர் அல்லவா?




## அத்தியாயம் இரண்டு

**கோ**யமுத்தூருக்கு வடமேற்கே உள்ள முத்தண்ணன் குளம் எந்தவிதமான சரித்திரப் பிரசித்தியும் பெற்றதல்ல. அதைப் பற்றி எந்தப் புலவரும் இதுவரை பாடியதாகவும் தெரியவில்லை. ஆனல் யார் புண்ணியத்தாலோ குமாரசாமி ஏரி என்ற ஒரு மாறு பெயர் மட்டும் அதற்கு உண்டு. நகரத்தின் ஜன சந்தடியிலிருந்து சிறிதளவாவது நிம்மதி பெற விரும்புபவர்கள், காற்று வாங்கும் காரணத்தைப் பிரதானமாய்க் கொண்டு இந்த ஏரிப்பக்கமோ அல்லது ஏரியை ஒட்டியிருக்கும் ஆர். எஸ். புரத்தின் பக்கமோ நடந்து செல்வதுண்டு.

ஏரியை வளைத்துச் செல்லும் மேட்டின்மேல் ஒரு ஒற்றையடிப் பாதை செல்கிறது. இப்பாதை வழியாகச் செல்பவர்கள் இனிய காட்சிகளைக் காணமுடியும். வலது புறம் பரந்த நீர்ப்பரப்பு. இளங் காற்றினல் எம்பி எம்பி எழும் சிறு அலைகள் ஒன்றை ஒன்று உந்தித் தள்ளிப் பின்தொடரும் இன்பக் காட்சி, ரம்மியமாயிருக்கும். அதனல் ஏற்படும் மெல்லிய ஓசை கிண்கிணியின் இன்னிசைபோல் ஒலிக்கும். இதைவிட்டு இடது புறம் பார்த்தால் கண்ணுக்கெட்டிய வரையில் பச்சைப் பசேரென்று படர்ந்திருக்கும் வயல் வெளிகள், பல ரத்தினக் கம்பளங்களை ஒன்று சேர விரித்ததுபோல் தகதகக்கும். அவற்றின் இடையிடையே தவழ்ந்து செல்லும் வாய்க்கால்த் தண்ணீர் அவ்வப்பொழுது படும் சூரிய வெளிச்சத்தினல் வெள்ளி ஜரிகைபோல் பளிச்சிடும். மெல்ல உராய்ந்து செல்லும் காற்றின் மென்மையும், ஜிலுஜிலுவென்ற தண்ணீரின் குளுமையும் தேகத்திற்கு அப்போதைக்குத் தெம்பாகத்தான் இருக்கும். ஆனல் சற்று நேரம் அந்த இன்ப போதையில் இருந்து விட்டால் அதன் பலனை மறுநாளே வரும் சளி, ஜுரம் இவைகளிலிருந்து நன்ருய்த் தெரிந்து கொள்ளலாம், அனுபவ பூரணமாக!

ஏரிக்கரையில் நின்று கொண்டு சற்று வடகிழக்கே பார்த்தால் மஞ்சள் காவிபூசிய ஒரு உயர

மான இரண்டடுக்கு பங்களாவும் அதன் பின்புறத் தோட்டமும் நம் கண்களில் படும். அந்த பங்களாவின் முன்புறம் செல்வதற்கு, நாம் ஏரிக்கு எதிர்த்தாப்போல் செல்லும் ரஸ்தா வழியாகச் சென்று இடது கைப்புறமாகத் திரும்பி, பத்துப் பதினைந்து பங்களாக்களைத் தாண்டியாக வேண்டும். 'சுதர்சனம்' என்று காம்பவுண்டு சுவற்றில் பொறித்திருக்கும் பெயரும், முன்புறத் தோட்டமும் நமக்கு முதலில் சற்று திகைப்பை அளித்தாலும் முன்பு பார்த்த பங்களாவின் உயரமும், பூசியிருக்கும் மஞ்சள் காவியும் அந்த பங்களாவின் பின்பாகத்தைத்தான் நாம் குளத்தங் கரையிலிருந்து முன்பு பார்த்தது என்று நம்புவதற்குப் போதிய காரணமாய் இருக்கும்.

இந்த 'சுதர்சன'த்தின் சொந்தக்காரர் தான் புகழ்பெற்ற தாசில்தார் சதாசிவம் பிள்ளை. ஆரம்ப காலத்தில்— இடம் கேட்பாரற்றுக் கிடந்த காலத்தில் — 'இருந்து தொலையட்டும்' என்ற மனோபாவத்தில் மிகக் குறைவான விலைக்கு வாங்கிப் போட்டார் அந்த இடத்தை. பிற்பாடு அதே இடத்திற்கு இருபது பங்கு அதிக விலை கொடுப்பதாகப் பலர் முன் வந்தும் இடத்தைக் கொடுக்க மறுத்து விட்டார் பிள்ளை. பலர் வந்து கேட்கக் கேட்க, மேலும் அந்த இடத்தில் கட்டிடம் கட்டாமல் சும்மா விட்டு வைப்பது கூடாது என்ற முடிவுக்கு வந்து அந்த இடத்தை ஒரு அழகிய இரண்டடுக்கு பங்களா ஆக்கி, 'சுதர்சனம்' என்ற பெயரையும் அதற்குச் சூட்டினர். ஜன நெருக்கடியான இடத்தில் தாம் முன்பு இருந்த பங்களாவை வாடகைக்கு விட்டுவிட்டு நல்ல காற்றுக்கும், நிம்மதிக்கும் புகழ்பெற்ற ஆர். எஸ். புர வட்டாரத்தில் இருந்த 'சுதர்சன'த்திற்குப் பிள்ளை குடிவந்து நான்கு ஐந்து வருஷங்கள்தான் இருக்கும். வேலையாட்களும், நல்ல மேல் வேலை வாங்கும் நபர்களும் இருந்ததால் பங்களா மெருகு ஏறிய புது நகைபோல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

பங்களா புத்தம் புதிதாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும் என்பதில் எல்லோரையும் விட தாசில்தாரின் மனைவி காமாக்ஷியம்மாளுக்குத்தான் அதிக அக்கறை; தப்பித்தவறி காய்ந்து விழுந்த பூ, வெங்காயச் சருகு முதலியவை கீழே கிடப்பதைக் கண்டுவிட்டால் போதும். உடனே அது சம்பந்தமான வேலைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைக்காரனுக்குப் பிடித்தது சனியன். அவனது அஜாக்கிரதை, கண்ணில்லாமை முதலியவை பற்றி காமாக்ஷியம்மாள் அவன்மேல் ஒரு வசை புராணம் பாடி, உடனே அதை அப்புறப் படுத்தச் செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பாள். இதனால் அந்த வீட்டு வேலைக்காரர்களுக்கெல்லாம் தாசில்தார், சின்னம்மா (தாசில்தாரின் மகள் புவனேஸ்வரி) சின்னையா (மகன் முத்துசாமி) ஆகிய இவர்களைக் காட்டிலும் பெரியம்மா காமாக்ஷியம்மாளிடம்தான் பயம் அதிகம். மற்றவர்கள் வேலைக்காரர்களை அதிகமாய்க் கண்டிப்பது இல்லையாகையால் அந்த ஏகபோக உரிமையைக் காமாக்ஷியம்மாள் தானே வைத்துக் கொண்டாள். வேலைக்காரர்களிடம் வேலை வாங்குவதிலேயே அவள் பொழுதின் பெரும் பாகமும் கழிந்து விடும்.

'அடிக்கும் கையே அணைக்கும்' என்பது போல காமாக்ஷியம்மாள் வேலை வாங்குவதில் கண்டிப்பாக இருந்தாலும் அவர்களுக்குச் செய்வது, செலுத்துவது போன்ற விஷயங்களில் எப்போதும் தாராளமாக இருப்பாள். அந்தச் சந்தர்ப்பங்களில் வேலைக்காரர்கள் தாங்கள் அதுவரை வாங்கிய வசை மாறிகளை யெல்லாம் அடியோடு மறந்து விட்டு, "எங்கள் பெரியம்மாளைப் போலுண்டா?" என்ற தோரணையில் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

சதாசிவம் பிள்ளைக்கு பூர்வீகச் சொத்து கொஞ்சம் இருந்தது. காமாக்ஷியம்மாள் வாயிலாக இன்னும் கொஞ்சம் சேர்ந்தது. தமது அபார வாக்கு சாமர்த்தியத்தாலும், இயற்கையிலேயே அமைந்திருந்த புத்தி கூர்மையினாலும் ஒரு சாதாரண குமாஸ்தாவாக இருந்த பிள்ளை, படிப்படியாக முன்னேறி தாசில்தாராகி அதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொஞ்சம் சம்பாதித்து, தமது சொத்தை ஏறக் குறைய அரை லக்ஷத்திற்குக் கொண்டு வந்துவிட்டார். அரை லக்ஷமும், பங்களாவும், காரும் கோவைப் பிரமுகர்களின் ஜாபிதாவில் பிள்ளைக்கு முன்னிடம் தந்தன. அவர்கள் கூட்டுறவில் பெரும்பாலும் தமது நேரத்தைப் போக்கி, ஒழிந்த நேரங்களில் தமது தாசில் வேலையையும் பார்த்துக்கொண்டு தமது வாழ்க்கை ரதத்தை சுகமாக ஓட்டி வந்தார் சதாசிவம் பிள்ளை.

மேற்கொண்டு நமது கதையைத் தொடங்குவதற்கு வாசகர்களைப் பிள்ளையவர்களின் ஆபீஸ் அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

தலைக்குமேல் மின்சார விசிறி சுழன்று கொண்டிருக்க, எதிர்ப்புறம் இருந்த ஜன்னலைப் பாதி மறைத்துக் கொண்டிருந்த வெள்ளைத்திரை லேசான காற்றில் படபடக்க, மேஜை அருகில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் பிள்ளை. சற்று நேரத்திற்குள் சுவரில் மாட்டியிருந்த பெரிய கடிகாரம் பனிரெண்டடித்தது. பிள்ளை தாம் இருந்த சுழல் நாற்காலியை ஒரு திருப்புத் திருப்பி அந்தக் கடிகாரத்தையும் தமது கைக் கடிகாரத்தையும் ஒப்பிட்டு ஒரு முறை பார்த்து விட்டு எழுதிய காகிதங்களை மடித்து ஒரு உறைக்குள் போடலானார்.

முன்னால் கேட்ட காலடி ஓசையைத் தொடர்ந்து அதற்கு உரியவளான காமாக்ஷியம்மாள் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தாள்.

"ஓங்களைத்தானே! மணி பனிரெண்டு அடித்து விட்டதே, சாப்பிடவரவில்லையா?" என்று கேட்ட காமாக்ஷியம்மாளின் குரலைக் கேட்டுக் கொண்டே திரும்பிய பிள்ளை, கடித உறையை ஒட்டி மேஜைமேல் வைத்து விட்டு எழுந்து சாப்பிடும் அறையை நோக்கிப் புறப்பட்டார்; தமது துணைவி பின் தொடர.

பறிமாறிய இலை மேஜை மேல் தயாராக இருந்தது. பக்கத்திலிருந்த குழாயில் கையை அலம்பிக் கொண்டு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார் பிள்ளை. சமையற்கார வேலாயுதம் பறிமாறினான்.

"ஓங்களைத்தானே, புவனாவைப் போய்ப் பார்த்து வர வேண்டாமா? ஒரு மாதம் ஆகிவிட்டதே! போய்க் கூட்டி வந்தால் ஒரு

பத்து நாளைக்காவது வைத்திருந்து அனுப்பலாமே!" என்று குடும்ப விவகாரத்தைப் பற்றிய பேச்சை ஆரம்பித்து வைத்தாள் காமாக்ஷியம்மாள்.

"யார் போய்ப் பார்த்துவர வேண்டாம் என்றது? இப்போதே நீ புறப்பட்டுப் போவதானாலும் கூட எனக்கு எந்த விதமான ஆக்ஷேபணையும் கிடையாது" என்றார் பிள்ளை தமக்கே உரிய பசையற்ற வரட்டுக் குரலில்.

"அப்படியானால் நீங்கள் வரமாட்டீர்களா?"

"நான் வருகிற மாதிரிதான் நீ செய்து வைத்திருக்கிறாய். இல்லையா?"

"என்? நான் என்ன செய்து விட்டேன் அப்படிப் பிரமாதமாக? அதைத்தான் கொஞ்சம் வாய் திறந்து சொல்லுங்களேன்!"

"அதை வாய் திறந்து வேறு சொல்ல வேண்டுமாக்கும்?"

"பையனுக்குவீடுஒன்றைத் தவிர வேறு சொத்து சுகம் ஒன்றும் இல்லை என்பதுதான் ஏற்கெனவே தெரிந்ததாயிற்றே! என்னமோ பையன் படித்திருக்கிறான். நல்ல புத்திசாலி. புவனாவை நன்றாக வைத்துக் கொள்வான் என்று நினைத்துத்தானே கொடுத்தோம்! இத்தனைக்கும் புவனாவே மதுரை சென்று ஆபீசுக்குப் போய்க் கொண்டிருந்த அவனைப் பார்த்து வந்த பிறகல்லவா கல்யாணத்திற்குச் சம்மதித்தாள்? நல்ல இடம் சுலபமாய்க் கிடைக்கும் போது அந்தஸ்து, பட்டம், பதவி இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? என்னமோ காரியம் நல்லபடியாக முடிந்தது. புவனாவுக்கும் குறை யொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. கண்ணிறைந்த கணவனும், தாய் போல மாமியாரும் கிடைத்திருக்கிறார்கள். பணம், துணிமணி விஷயத்தில்தான் எந்த வகையிலும் குறைவுஏற்படாதபடி நாம் பார்த்துக் கொள்ளுகிறோமே! இன்னும் என்ன வேண்டும்?" என்று ஒரு கேள்வியோடு தன் பேச்சுப் படலத்தின் முதல் அத்தியாயத்தை முடித்து, பிள்ளையின் பதிலுக்காக அவர் முகத்தைப் பார்த்தாள் காமாக்ஷியம்மாள்.

"ஆஹா! இனி யென்ன? காரில் சென்று மாப்பிள்ளையையும் பெண்ணையும் வீட்டிற்கு அழைத்து வர வேண்டியதுதான்" என்றார் பிள்ளை, வாயிலிருந்த உருளைக் கிழங்கை விழுங்கியபடி.

"அழைத்து வராவிட்டால் விட்டு விடுங்களேன். யாருக்கு என்ன நஷ்டம் வந்து விடுமோ தெரியவில்லையே! என், நீங்கள் தான் பெரிய இடம் ஒன்று தவறாமல் ஜல்லடை போட்டு சலித்தீர்களே, எந்த மாப்பிள்ளையை எடுத்தீர்கள்? நீங்கள் பிரமாதமாய்ச் சொல்லிக் குறிப்பிட்ட ஒன்றிரண்டு மாப்பிள்ளைகளையும் புவனா சரியான காரணம் காட்டிக் கழித்துத் தள்ளிவிட்டாள். இந்த வரையிலுமாவது வயது வந்த பெண் கலியாணத்திற்குச் சம்மதித்து விட்டாளே என்று சந்தோஷமடைந்தோமே இருவரும் அப்போது! கலியாணத்தைக் கூட நீங்கள்தானே தடபுடலாக நடத்தத்திட்டம் போட்டு அதன்படி நடத்தியும் வைத்தீர்கள். அப்பொழுது பார்க்காத அந்தஸ்தும் தாரதம்யமும் இப்பொழுது மட்டும் என்ன வந்துவிட்டதாம்?"

காமாக்ஷியம்மாளின் கேள்விகள் பிள்ளையைத் திணற அடித்தன. அவரால் பதில் ஏதும் சொல்ல முடியவில்லை. ஊமையல்ல செவிடுமல்ல என்ற நிலையில் இருந்தவர், "எனத்துக்கு வெட்டி விவாதமெல்லாம்? எனக்கு அங்கு போக இஷ்டமில்லை. அவ்வளவுதான். உனக்குப் பிடித்தால் நீ போய் அழைத்துவா, வைத்திரு, அனுப்பு. நான் வேண்டாம் என்று சொல்லவில்லையே!" என்று மழுப்பினர்.

"நான் மட்டும் எப்படிப் போவது? உங்களுக்குள்ள கௌரவம், மதிப்பு, அந்தஸ்துதானே எனக்கும்? நான் போனல் மட்டும் உங்கள் அந்தஸ்து குறையாதா?"

"இதென்ன காமாக்ஷி, என் அந்தஸ்து குறைகிறது என்றல் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவன் நான். உனக்கு இஷ்டமானல் போ. இல்லாவிட்டால் இரு. இந்த விஷயத்தில் என்னைப் பற்றி நீ கொஞ்சம்கூட சிந்திக்க வேண்டிய அவசியமில்லை" என்று காமாக்ஷியம்மாளின் பேச்சுக்கு முற்றுப்புள்ளிவைத்தார் பிள்ளை.

காமாக்ஷியம்மாள் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை. அவளுக்கு ஆத்திரமும், ஆங்காரமும் பொங்கிவந்தது. பிள்ளை சாப்பிட்டு விட்டுக் கையலம்பும் வரையில் சுவரோடு சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். மெத்தைப் படிகளில் யாரோ ஏறிச் சென்ற சப்தம் பிள்ளை சிரமபரிகாரம் செய்து கொள்ள மெத்தைக்குப் போய் விட்டார் என்பதை உணர்த்தியது.

'தமக்கும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் இடையேயுள்ள அந்தஸ்தைப்பற்றி பிறர் ஜாடை மாடையாய்ப் பேசியபோது கூட பளிச்சென்று "அந்தஸ்து என்ன அந்தஸ்து? பையன் நன்றயிருக்கிறன். ஏதோ படித்து உத்தியோகத்திலும் இருக்கிறன். பெண்ணுக்கும் பிடித்திருக்கிறது. பிறகு என்ன அந்தஸ்து வேண்டியிருக்கிறது, அதற்குமேல்?" என்று சுடச் சுடப் பதில் கொடுத்தாரே! அப்படிப் பேசியவரா இப்போது இப்படிப் பேசுகிறர்? அப்படியானல் அப்போது இவர் நடந்து கொண்டதெல்லாம் வெறும் வெளிவேஷம் தானு?' இப்படி ஏதேதோ எண்ணி ஏங்கியது காமாக்ஷியம்மாளின் மனம். தன் கணவனின் போக்கைத் தன்னல் கூட சரியாகப் புரிந்து கொள்ள முடியாதது பற்றி அவளுக்கே அவமானமாக இருந்தது.

"சாதம் ஆறிப்போகிறதம்மா!" என்ற வேலாயுதத்தின் குரல் அவள் சிந்தனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. கையலம்பிக்கொண்டு சாப்பிடச் சென்றள்.

## அத்தியாயம் மூன்று.

"பெரியோர்களே, தாய்மார்களே, சகோதரர்களே! இந்த மாபெரும் கூட்டத்திலே அடியேனும் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பமளித்த இந்த மகாநாட்டுக் காரியதரிசிக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நாம் எல்லோரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாக இந்த இடத்திலே கூடியிருக்கிறோம். இப்படிக் கூடியிருப்பது எதற்காக என்பது உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கும். இன்னும் சற்றுநேரத்தில் அது எல்லோருக்கும் தெரிந்துவிடும் என்று நம்புகிறேன்......"

இப்படிச்சொல்லி ஒருக்கனைப்புக் கனைத்துவிட்டு எதிரில் இருந்த பெரிய நிலைக்கண்ணாடியை ஒரு தரம் பார்த்தான் முத்துசாமி.

ஆயிரக்கணக்கான மக்கள் ஆணும்பெண்ணுமாகக் கூடியிருந்திருக்க வேண்டிய இடத்தில், முத்துவின், பிரதிபிம்பமாகிய ஒரே ஒரு உருவம் மட்டுமே காட்சியளித்தது!

அப்போது பதிமூன்றாவது தடவையாகப் பேசிக்கொண்டிருந்தான்முத்து. அந்தப்பேச்சைபேசி முடிப்பதற்குள் முத்து முத்தாய் அவன் நெற்றியில் வியர்வை துளிர்த்துவிட்டது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். 'பிளாஸ்க்'கிலிருந்து அரைடம்ளர் பாலை ஊற்றி ஒரே முடக்காய் கண்ணை மூடிக் கொண்டு குடித்தான். பிறகு, சட்டை, மேல் வேஷ்டிகளைச் சரியாய் இழுத்துவிட்டுக்கொண்டு முன்பு இருந்ததைவிட இன்னும் சற்று விரைப்பாய் நின்று கொண்டான். மீண்டும் ஒருமுறை கனைத்துக்கொண்டு பதினான்காவது தடவையாக "பெரியோர்களே, தாய்மார்களே, சகோதரர்களே" என்று ஆரம்பித்தான்.

தாசில்தார் சதாசிவம் பிள்ளையின் அருந்தவப் புதல்வன் என்றால் அது முத்துசாமியைத்தான் குறிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் தரித்திர பட்சம் மும் மூன்று வருஷங்களாவது இருந்து அஸ்திவாரத்தைப் பலமாக்கிக் கொண்டுதான் முத்துசாமி மேல்வகுப்பிற்குப் போவது வழக்கம். இப்படியாகத்தானே அவன் நான்காவது பாரம் தாண்டுவதற்குள் பகீரதப் பிரயத்தனம் ஆகிவிட்டது. ஆசிரியர்கள், பையன்கள், பள்ளிக்கூட பியூன்கள் ஆகிய எல்லோரது நினைவிலும் என்றும் பசுமையாக இருக்கும் ஒரு மாணவன் உண்டு என்றால் அது நமது முத்துசாமி தான்! முத்துசாமியைச் சுற்றித்திரியும் மாணவர்களுக்கு சாதாரணமாய் நல்ல வேட்டை. இதனால் அவனைச் சதா ஒரு சிறு கூட்டம் சுற்றிக் கொண்டு அவன் சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டுக் கொண்டு வரும். அவனும் வஞ்சனையில்லாது கண்ணில் படுவதையெல்லாம் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கூச மாட்டான்.

பணம் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திற்கும் பள்ளிக் கூடத்தில் அவன்தான் முன்னணியில் நிற்பான். இதைப் பலர் பல்வழிகளில் பயன் படுத்திக் கொள்வார்கள்.

எப்படியோ முத்துசாமியின் உள்ளத்தில் தான் ஒரு பெரிய பிரசங்கியாக வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இந்த எண்ணம் தோன்றியது முதல் முத்துசாமி எங்கெல்லாம் கூட்டம் கூடுகிறதோ, எங்கெல்லாம் சொற்பொழிவு ஆற்றுகிறார்களோ அங்கெல்லாம் போகத் தலைப்பட்டான். அதன் பலனாக அவனுக்குத் தானும் பேச வேண்டும் என்ற ஆசை அதிகரித்ததே தவிர அவனால் உருப்படியாக

பிரசங்க தோரணையில் நாலு வார்த்தைகூட சரியாகப் பேச முடியவில்லை. கூச்சம் அவனைப் பேச விடாது தடுத்தது.

சிலர் நிலைக்கண்ணாடியின் முன்பு நின்று பேசும்படி அவனுக்கு யோசனை சொன்னார்கள். இன்னும் சிலர் முதலில் மனித அரவமே அற்ற இடத்திற்குச் சென்று பேசிப் பழகினால் பிறகு சரளமாகப் பேசவரும் என்று சொன்னார்கள். வேறு ஒருவர் "உன் முன்னால் இருப்பவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்று எண்ணிக்கொண்டு பேசிப்பார். உனக்கு வெற்றி நிச்சயம்" என்ற அபூர்வ யோசனையைச் சொல்லி வைத்தார். ஆனால் முத்துசாமிக்கு இதெல்லாம் அவ்வளவாகப் பிடிக்க வில்லையென்றாலும் நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டு பேசிப் பழகுவது அவனுக்குக் கொஞ்சம் சுலபமாகப் பட்டது. அதை நடைமுறையில் கையாளவும் ஆரம்பித்தான்.

ஒருநாள் முத்துசாமி இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது எதற்கோ அங்குவந்த காமாக்ஷியம்மாள் திடுக்கிட்டு உள்ளே சென்று பார்த்ததும் குபீரென்று சிரித்துவிட்டாள். அன்று முதல் முத்துசாமி கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, பிறகுதான் பேச ஆரம்பிப்பது வழக்கம். இந்தத்தீவிர முயற்சியில் இருந்த முத்துசாமி சரியாகச் சாப்பிடுவதுகூட இல்லை. ஆரம்பத்தில் இரண்டு மூன்று நாட்கள் காமாக்ஷியம்மாள் இதைப் பற்றி வற்புறுத்திப் பார்த்தாள். முத்துசாமியிடத்தில் இது ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு, 'எப்போதோ வந்து சாப்பிடட்டும்' என்று விட்டுவிட்டாள். பசியானால் வந்து சமையற்காரனைச் சாதம் போடச் சொல்லிச் சாப்பிட்டு விட்டுச் சென்றுவிடுவான் முத்து.

★

என்றுமில்லாத விதமாக ஒருநாள் கதவு தட்டப்பட்டதைக் கேட்டு முத்துசாமி, "யாருடா அது?" என்று ஆத்திரத்துடன் கேட்டுக்கொண்டே கதவைத் திறந்தான்.

"நான்தாண்டாப்பா" என்று சாந்தமாய்ப் பதில் சொன்ன தன் தாயாரைப் பார்த்ததும் ஆத்திரம் தணிந்தகுரலில் "நீயாம்மா? நான் யாரோ என்று நினைத்தேன்" என்றான் ஒரு அசட்டுச் சிரிப்போடு.

"இதென்னடா இது முத்து? காலாகாலத்திலே சாப்பிடாமல் கொள்ளாமல் என்னடா நாக்கு வரளப் பேசிக் கொண்டிருக்கிறாய்?" என்றாள் காமாக்ஷியம்மாள்.

"நாக்கு வரளாமல் இருக்கத்தான் 'பிளாஸ்க்'கிலே பால்வைத்திருக்கிறேனே!" என்றான் முத்துசாமி பளிச்சென்று.

"நல்லா பால் வைத்திருந்தாய் போ! தொலையட்டும். மதுரைக்குப்போயி அத்தான், அக்கா ரெண்டுபேரையும் கூட்டிக் கொண்டு வருகிறாயா? பத்து நாளைக்கு இருந்துவிட்டுப் போகட்டும்!"

"ஏன், அப்பாவும் நீயும் காரில் ஜாம் ஜாம் என்று போய்க் கூட்டிக்கொண்டு வாருங்களேன்?"

"அப்படிப் போவதாய் இருந்தால் உன்னை ஏன் வந்து அழைக்கப் போகிறேன். அப்பா வர மாட்டேன் என்கிறார். அவருக்கு என்னவோ அந்தஸ்து குறைந்து விடுகிறதாம்!"

"அப்படியானால் நீ மட்டும் போய் வருவதுதானே?"

"நான் போனாலும் உங்க அப்பாவின் அந்தஸ்து குறையத்தானே செய்யும்? அதனால்தான் உன்னைப் போய் வரச் சொல்லுகிறேன்."

"அப்பாவின் அந்தஸ்து நான் போவதாலும் உயர்ந்து விடுமென்று தோன்ற வில்லையே!" என்று இழுத்தான் முத்துசாமி.

காமாக்ஷியம்மாளுக்கு ஏனோ கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "என்னமோ செய், போவதானால் போ. இருப்பதானால் இரு. எப்படியோ எக்கேடு கெட்டுத் தொலையுங்கள். எனக்கு என்ன வந்தது!" என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு அழ மாட்டாத குறையாய் அந்தஇடத்தைவிட்டுச் சென்றாள் காமாக்ஷியம்மாள்.

(தொடரும்)

★

## காலமும் வாழ்வும்

வேலைக்காக நேரத்தை உபயோகி; அதுதான் வெற்றியின் விலை.

சிந்தனைக்குக் காலத்தை உபயோகி; அதுவே அதிகாரத்தின் பாதை.

விளையாட நேரத்தை உபயோகி; அதுவே புத்திசாலித்தனத்தின் ஊற்று.

நண்பனாக காலத்தை நினை; அதுவே ஆனந்த வாழ்வின் ராஜபாட்டை.

சிரிப்பதற்காக காலத்தை உபயோகி; அதுவே ஆத்மாவின் சங்கீதம்.

குழந்தைகளோடு விளையாட நேரத்தை உபயோகி; அதுவே இன்பம்.

# மனச்சாட்சி

பொ. கிருஷ்ணசுவாமி

இப்படி நேரும் என்று தோன்றியிருந்தால் நான் முதலில் கல்யாணம் செய்து கொண்டிருக்கவே மாட்டேன். வேண்டாம், வேண்டாம் என்று எவ்வளவோ தடவை கெஞ்சினேன், என் பெற்றோரைகளை. அவர்கள் கேட்டால்தானே? என்னை வளர்த்து மனிதனக்கிய பெற்றோர்களின் மனதைப் புண்படுத்த விரும்பாது மணத்திற்கும் சம்மதித்தேன். கலியாண நாட்கள் நெருங்கி வந்தபோது எவ்வளவோ மனக் கோட்டைகள் கட்டினேன். ஏனே, கலியாணத்தின் மீது திடீர்ப் பற்றுதல் ஏற்பட்டுவிட்டது. ஆனால் கலியாணமான பின்பு இப்படி நடக்கும் என்று கனவிற் கண்டிருந்தால் கூட அதை அறவே மறந்திருப்பேன். இதோ மணி ஏழு ஆகிறது! ஆபீஸிலிருந்து வீட்டிற்குச் செல்லுகிறேன், என்ன நடக்குமோ என்ற கவலையுடன்! என்னுடன் வேலை பார்க்கும் குமாஸ்தாவோ நல்ல மலர்ந்த ரோஜாப்பூ; பழம் என்று என்னவெல்லாமோ வாங்கிச் செல்கிறார் அவர் வீட்டிற்கு. எனக்கு மட்டும் சக்தியில்லையா?... சொல்லப்போனால் அந்த குமாஸ்தாவைவிட எனக்குப் பத்து ரூபாய் அதிகமாகச் சம்பளம் கிடைக்கிறது. அவரைவிட எவ்வளவோ செய்யவேண்டும் என என் உள்ளம் ஆசையைக் கிளப்புகிறது. அதே சமயத்தில் என் மனைவி சாரதாவின் சோகம் ததும்பிய முகமும் நினைவிற்கு வருகிறது. அப்பொழுது உண்மையில் 'சாகிறதா பிழைக்கிறதா' என்ற எண்ணமே முன் வருகிறது.

அப்படியென்ன காரியம் நடந்துவிட்டது வாழ்க்கையில் என்று நினைத்துப் பார்த்தால் அதுவும் இல்லை. வீட்டில் தடபுடலோ அல்லது சிலருக்கு வாய்த்திருக்கும் அடங்காப் பிடாரிகள் போலுமில்லை. பின்......

சாரதா என் அக்காவின் மகள் தான். சிறு வயது முதல் என்னுடன் பழகியவள்தான். நல்ல அழகி. பரம சாது. அவளை எனக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரிந்தது முதல் அவள் புன்சிரிப்பும், கலகல வென்ற பேச்சும் எங்கள் முன் தோன்றவில்லை. ஒரு வேளை புது மணத்தினல் வெட்கம் என்று கருதினேன். அதே நிலையில்தான் இன்னமும் இருந்து வருகிருள். இன்னமுமா வெட்கம்? என் பெற்றோர்களுடன் சேர்ந்து வசிப்பதில் இஷ்டமில்லையோ வென்று தனிக் குடித்தனம் வைத்தேன். வீட்டில் சாரதா என்னுடன் பேச மாட்டாள். அதைவிட அவள் தேகம் நாளுக்குநாள் இளைத்துப் போவதைக் கண்டுதான் எனக்கு பெருங் கவலை யுண்டாகியது.

நான் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு நேரம் கழித்துத்தான் இரவில் திரும்புவேன். அதுவரை அவள் விழித்துக் கொண்டிருப்பாள். வந்ததும் கால் கழுவ ஜலம் கொடுப்பாள், பின்பு சாப்பாடு

நானும் சாப்பிட்டு முடிப்பேன். இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்பது கிடையாது. ஏதாவது வேண்டுமா என்று அவ ளும் கேட்க மாட்டாள். இலையில் பண்டம் தீர்ந்து விட்டது கண் டால் இலைக்கு முன் அவைகளைக் காண்பிப்பாள்.

வேண்டும், வேண்டாம் என்ப தற்குக் கையால் சைகைகள் செய் வேன். அவைகள் தான் சாப் பாடு சமயத்தில் எங்கள் முன்பு நடக்கும் நாடகம். 'சாப்பிடுகை யில் பேசலாகாது' என்ற நீதியை நாங்கள்தான் சரியாகக் கவனிக் கிறோம். பின்பு, சாப்பிட வேண் டுமே என்று என் இலையிலேயே பரிமாறிக் கொண்டு அவள் சாப் பிட உட்காருவாள். அவள் சாப் பிட்டு முடிக்கும் அளவு நான் ஏதாவது படித்துக் கொண்டிருப் பேன். அவளும் மள மள வென்று சாப்பிட்டு விட்டு எனக் குப் படுக்கை போடுவாள். பின்பு வெற்றிலைத்தட்டும், பாலும் வந்து சேரும். இருவரும் சேர்ந்தே சாப்பிடுவோம். அப்பொழுதும் ஒரு பேச்சுக்கூடக் கிடையாது. முடிந்ததும் படுத்துவிடுவோம். 'என்ன வியர்வை!' என்று நானே சொல்லிக் கொள்வேன் சில சம யம். உடனே அவள் விசிறுவாள். நான் தூங்கினதும், அவளும் என் அருகிலேயே படுத்து விடுவாள். அவ்வளவுதான் இரவு நாடகம்.

காலையிலும் அப்படியே நடக் கும். பத்து மணிக்கு ஆபீஸ் சென்றுவிட்டால் அவள் கதவை உள் தாளிட்டுக் கொண்டு விடு வாள். நானோ ஆபீஸில் உலகத் தையே மறந்தவனாக, 'எஸ் ஸார், ஸப்மிட்டட் ஸார்' என்று இருந்து விடுவேன்.

இதற்குமேல் ஒரு மனைவி தன் கணவனுக்குச் செய்யக்கூடிய கைங்கரியம் கிடையாது. இருந் தும் நான் வருத்தப் படுகிறேன். அவளும் அப்படித்தான் என்று எனக்குத் தெரியும். அவள் முல்லைப் பற்களைத் திறந்து ஒரு வார்த்தை பேசாததுதான் ஒரே காரணம் எங்கள் வருத்தங்களுக்கு என்பதும் நாங்களறிவோம். ரொம்பப் பேசிக்கொண்டே போனால் ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகளில் பதில் கூறிவிடு வாள். புருஷனுடன் பேச 'வெட்க'ப் படுகிறாளோ என்று கூட அர்த்தமில்லாது சில சமயம் சிந்தனை செய்ததுண்டு. ஆனால் அவள்தான் S. S. L. C. வரை படித்தவளே என்ற எண்ணமும் உடனே முன்வருகிறது.

அன்று ஆபீஸ் விடுமுறைநாள். வீட்டை விட்டுக் கிளம்ப முடி யாத வெய்யில். ஒரு இடத்திற்கும் நகர முடியவில்லை. கடைசியில் இன்று எப்படியாவது அவளைச் சரிப்படுத்துவது என்று கங்கணம் கட்டிக்கொண்டே, மார்க்கட்டுக் குச் சென்று காய், கறிகளை அதிக மாக வாங்கிக் கொண்டேன். வீட்டை யடைந்ததும் என்று மில்லாத சந்தோஷத்துடன், 'சாரதா!' என்றழைத்துக்கொண் டே உள்ளே சென்றேன். இன்று 'சமரஸ' மாகிவிடும் என்ற முழு நம்பிக்கை அன்று!

அவள் பதிலே கொடுக்கவில்லை. மறுபடியும் மறுபடியும் கூடத்தி லுட்கார்ந்தபடியே அழைத்துக் கொண்டிருந்தேன். அதற்கெல் லாமா அவள் சளைத்துவிடுவாள்? பேசாமல் பக்கலில் வந்து நின் றாள். அதைக் கவனிக்காதவன் போல் கீழே குனிந்து கொண்டே மறுபடியும் 'சாரதா' என்று அழைத்தேன். அப்படி...

'என்ன வேண்டும்!' என்றபதில் கணீர் என்று என்காதில் விழுந்தது. அவ்வளவுதான்! அவளை அப்படியே இழுத்து என் பக்கவில் அமர்த்திக்கொண்டேன். ஒரு வார்த்தைக்கூட பேசாத அவள் இரண்டு வார்த்தைகள் கொட்டியவுடன் எனக்குண்டான சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவள்



கண்களிலும் கண்ணீர் தேங்கியிருந்தது. சிறிது நேரம் சென்றதும் அவளாக விலகிக் கொண்டு, உள்ளே சென்று விட்டாள். அவ்வளவுதான். இரவு வரை அவளைக் காண்பதே பெரிதாகி விட்டது.

அவள் கூட இன்று உணர்ந்திருக்க வேண்டும் என்னுடைய கஷ்டத்தை! மனச்சாட்சி கூறியிருக்க வேண்டும். ஆனாலும் அவள் ஏனோ மௌனம் சாதித்தாள். தோல்வியும் வெறுப்பும் அடைந்த நான் அத்துடன் விட்டுவிடவில்லை. வெற்றிலைத் தட்டுடன் படுக்கையறைக்குள் வந்தாள் சாரதா. இன்று எப்படியாவது ஒரு முடிவு செய்ய விரும்பினேன். சாரதா என் முன்பு தட்டை வைத்து விட்டுப் படுக்க ஆரம்பித்தாள். நான் அவள் கையைப் பிடித்திழுத்து என் எதிரில் உட்காரவைத்து,

"சாரதா! இப்படியேதான் கடைசிவரை இருக்கப்போகிருயா?"

..................

"ஏன் பதில்கூடச் சொல்லமாட்டாயா? சாரதா. உண்மையாகக் கேட்கிறேன். இப்படியே எவ்வளவு நாளைக்குத்தான் நான் இருக்க முடியும்? மணமான நாள் முதல் இன்றுவரை நான் எவ்வித சுகமும் அடைந்ததில்லை. என்னுடன் வாழ இஷ்டமில்லையென்ருல், என்னை ஏன் கல்யாணம் செய்துகொண்டாய்?... இல்லை, உன்னைக் குரூரமாக நடந்துகிறேஞ அல்லது பட்டினி கிடக்கச் சொல்கிறேஞ?......"

"இல்லவே இல்லை......"

"பின்பு... ஏன் இந்த மௌன நாடகம் நடிக்க வேண்டும்......"

"எனக்கும்தான் தெரியவில்லை"

"இதுதான் கடைசி முடிவா...? அப்படியாஞல் இனியும் இப்படியேதான் இருக்கப் போகிருயா?"

"......முடிந்தவரை அப்படித்தான்......"

அப்பா! என்ன கொடூரம்!... என்ன திடமான பதில்! இதைவிட ஒருவன் கெஞ்ச முடியாது. கோபம்தான் முன் வந்தது. அதற்குமேல் ஒன்றுமே கேட்க விரும்பவில்லை. 'சரி, படுத்துக் கொள்' என்று கூறிவிட்டு நானும் படுத்துக்கொண்டேன்.

தற்செயலாகக் கண் விழித்த போது கடிகாரத்தில் ஒரு மணி அடித்தது. பக்கத்தில் சாரதா படுத்திருக்கவில்லை, கலவரத்துடன் மெதுவாக எழுந்து பார்த்தேன். கூடத்தில் விளக்கு வெளிச்சம் தென்பட்டது. சாரதா ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். எழுதுவதில்தான் என்ன வேகம்?

ஓசைப்படாமல் அடிமேல் அடி வைத்துச் சென்று பின்புறமாக நின்று மூச்சுக்கூட அவள் மேல் படாதபடி கடிதத்தைத் தட்டுத் தடுமாறிப் படிக்க ஆரம்பித்தேன்...

"......உங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் என்னுல் ஏற்பட்டுவிட்டன. நான் பேசாததுதான் உங்களை மிகவும் வருத்துகிறது என்பதும் எனக்குத் தெரியும். அதற்குக் காரணம் நீங்கள் சொல்வதுபோல் அல்ல. ஒரு மனைவி இதைவிடக் கணவனிடம் எதிர்பார்க்க முடியாது. இருந்தும் எனக்கு என்னவோ பிடிக்கவில்லை. என்ன வெறுப்பு என்று நீங்கள் கேட்கலாம்......ஆம்...... அதற்கு என் மனச்சாட்சிதான் காரணம். மனச்சாட்சிக்கு விரோதமாக என்பெற்ருேர்கள் உங்களை ஏமாற்றி விட்டார்கள். எனக்கு ஒரு காது கேட்காது. சிறு வயதில் எலக்டிரிக் 'ஷாக்' அடித்ததில் ஒரு காது செவிடாகி விட்டது. ஆஸ்பத்திரிக்குப் பயந்து, வீட்டிலேயே எண்ணை முதலியவைகளால் காதை நிறப்பிவிட்டார்கள். இதைச் சொன்னுல் கல்யாணம் நடக்காது என்று பயந்து வெளியேசொல்லவில்லை. ஏமாற்றி விட்டேனே என்று மட்டும் மனச்சாட்சி இன்னமும் உறுத்துகிறது. இதுதான் என் மௌனத்திற்குக் காரணம்.

......... இன்னமும் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை. நான் எங்கேயாவது சென்று........"

இப்படி எழுதிக் கொண்டே போனுள். எனக்கு உண்மையில் பீதியும் ஏற்பட்டு விட்டது. ஒரு

காது கேட்காது என்பதற்காகவா இப்படி வேதனை! சந்தடியின்றி திரும்பிப் படுக்கையை அடைந்தேன். படுத்துக் கொண்டே 'சாரதா! சாரதா!!' என்று வேண்டுமென்றே கத்தினேன். சாரதா ஓடிவந்தாள்.

"சாரதா! எனக்கு உடம்பு சரியில்லை... என்னைவிட்டு இரவு வரை நகராதேயேன்" என்றேன் கெஞ்சலோடு. என் மார்பில் கையை வைத்துப் பார்த்தாள் சாரதா. நான் அவள் கையைப் பிடித்தபடி அன்று இரவைக் கழித்தேன்.

மறுநாள் விடிந்தது. சாரதா என்னருகிலேயேதான் இருந்தாள். உண்மையாகவே பயந்து விட்டாள். காப்பி அருந்திவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகலாம் என்று சொல்லி அவளையும் கூட அழைத்துச்சென்றேன்.

சாரதா காது சிகிச்சை செய்யும் இடத்தருகில் வந்ததும் இது 'காது' ஆஸ்பத்திரி யல்லவா?... என்றாள். "இல்லை... ஜுரத்திற்கும் மருந்து கிடைக்கும்" என்று உள்ளே அழைத்துச் சென்றேன்.

டாக்டர் எனக்கு நன்கு அறிமுகமானவர். அவரிடம் சாரதாவின் 'காது' விஷயத்தை உள்ளபடியே சொல்லி அவரை சிகிச்சை செய்ய வேண்டினேன். "சரி, ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துவா" என்றார் டாக்டர். ஆபரேஷன் தியேட்டருக்குள் சென்றபின்புதான் சாரதாவுக்கு விஷயம் விளங்கியது. என்னைப் பார்த்துக் கொண்டே யிருந்த அவள் கண்களிலிருந்து இரு துளி நீர் வெளி வந்து தரையில் சிதறியோடியது! எங்களுக்கு இனி புனர்ஜன்மம்தான்!

அதன்பிறகு ஒருமாதம் கழிந்தது இன்று ஆபீஸிலிருந்து வீட்டிற்குச் செல்லுகையில் என்ன குஷி தெரியுமா? கை நிறையப் பூக்களுடன் செல்கிறேன். அதோ, சாரதா எனக்காக வாயிலில் காத்துக் கொண்டிருக்கிறாள்.

இரவில் படுக்கச் செல்லும் பொழுது, என் அருகில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். 'என்னைப் பிரிந்துவிடமாட்டாயே' என்றேன் கிண்டலாக. அன்புடன் கூடிய வெட்கத்துடன் என் அகண்ட மார்பில், அவள் மலர் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் சாரதா.

இந்தப் புனர் ஜன்மத்தில், எனக்கு இன்பமளித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றுதானே இனிஅவள் 'மனச்சாட்சி' கூறும்!

★

# இட்லியோ பாக்கியானம்

'சுகி'

"என்னைத் 'தேய் பிறை'க்கு ஒப்பாக ஒரு ஆசிரியர் எந்த நிமிஷம் சொன்னாரோ, அன்று முதல் நான் அமாவாசை ஆகிவிட்டேன்."

"நான்தான் சொன்னேன். இட்டிலியே நீயேன் இப்படித் தோசைமாவு போல பொங்கி யழுகிருய்? நீ இன்னும் மறைய வில்லையே............"

"ஹோட்டல்களிலே 'இதோ ரெடி சார். சூடான இட்லி மல்லிகைப் பூ மாதிரி' என்பார்களே பல்லாயிரக் கணக்கான அம்பிகள். அவர்கள் குரலினிமை என் காதில் என்று விழும்?"

"ஓகோ இட்லியாரே? உமக்கு ஹோட்டல் வாசந்தான் பிடிக்குமோ, வீடுகளில் உமது............"

"நீர்கூட சாம்பாருக்கும், சட்னிக்கும் ஆசைப்பட்டு எத்தனை நாட்கள் ஹோட்டலில் கை நனைத்திருக்கிறீர்?" என்று கூக்குரல் போட்டது இட்லி. உடனே குறுக்கே பேசாமல் அது சொல்லு மட்டும் ஊமையாக இருப்பதென நினைத்தேன்.

ஒரு பொருளின் மேன்மை, கவிகளைப் போல் மறைந்த பின்புதான் தெரியும். இறந்தகாலம், ஏட்டுச் சுரக்காய் என்ருகி விட்டது அடியேன் பெருமை. என் சாவின் காரணமாக, பல கவிதைகள் பலகாரக் கவிதைகள் வந்துள்ளன.

இட்லி தோசை தின்ற காலமும் போச்சே — காரம்
ஏற்ற மிளகாய்ப் பொடியின் காலமும் போச்சே
எட்டு வகைப் பலகாரம் தின்ருலுமே — எங்கள்
இட்லியைப் போல இன்பம் கிடைத்திடுமோ ?

கவியிலே ஏக்கத்தைப் பார்த்தீர்களா? இதற்குக் காரணம் உண்டு. தமிழ் நாட்டின் கலைப்பண்பு, தமிழரின் நாகரிகம் என்பது வெற்றிலை, வாழையிலை, இட்லி. தமிழ் மக்களின் சமையல்ச் சிகரம், உருசி உச்சம் என மதிக்கக் கூடியது என்னைத் தவிர வேறு எந்தப் பதார்த்தம்?

கவின்மலையாள அவியலோடும், மைசூர் ரஸத்தோடும், கன்னடத்து பேலா ஹோலாஹீளியோடும், வங்காளத்து ரஸ குல்லாவோடும்,

சுந்தரத் தெலுங்கு நாட்டின் ஆவக்காய் ஊறுகாயோடு தோள் தட்டி நிற்பது தமிழ் நாட்டில் எது?

தமிழகத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த உணவுப் பொருள் எது என்பதை உணர்ந்த ஒரு † சுந்தரக் கவிஞர் இட்லி யென்றால் அது தமிழ் நாடு; தமிழ் நாடு என்றால் இட்லி என்கிறார். கவிக்குத்தான் அந்த உரிமை யுண்டு.

யாமறிந்த உணவுகளிலே இட்லியைப் போல்
இனிதாவ தெங்கும் காணோம்
தேமதுரச் சுவையென்ற ஜாங்கரிகள்
பாதூஷா கீர் பேணி இவைகள் யாவும்
நாம மது ஸ்வீட் என்று நெய்யே யின்றி
நாக்குதனை அறுப்பதனால் என்ன லாபம்?
சேமமுற சிற்றுண்டி செழிக்க வேண்டில்
சேர்ந்தெல்லாம் இட்லிதனை ஆதரிப்போம்.

எந்தப் பொருளையும் காவியக் கண் கொண்டு, 'காட்சியிலே இல்லையது கண்களிலே உள்ளதடா' என்ற வாக்குப்படி பார்க்க வேண்டும். ஒரு காவியத்தின் துடிப்புக்கு கதையின் கட்டுக் கோப்புக்குச் சில பாத்திரங்கள் தேவை. எனது இட்லியோ பாக்யானம் என்ற நூலுக்குச் சில பண்ட பாத்திரங்கள் தேவை."

"ஹே இட்லியே. என்ன பிரமாதப் படுத்துகிறாய்? ஆப்டர் ஆல், நீ யென்ன? உளுந்து + அரிசி X ஆட்டுக்கல்தானே" என்று குறுக்கிட்டேன்.

"சபாஷ்! அப்படிச் சொல்லுமையா!" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் உளுந்து. உடனே அது உருள ஆரம்பித்தது.

"இட்லி உன் பேச்சை நிறுத்து. இப்போது உளுந்தும் அரிசியும் ஆட்டுக்கல்லும் சேர்ந்து இட்லி ஆகுமென்ற இந்தப் பிரகஸ்பதியை வாழ்த்துகிறேன். அவருடைய மேதைக்கு அல்ல என் வாழ்த்து. எனக்கு முதலிடம் கொடுத்தாரே அதற்கே. தமிழின் சிறப்பு 'ழ' கரத்தில் இருந்தால் தானியத்தின் சிறப்பு உழுந்தில். மகாகவி கம்பனே, உழுந்திட இடமில்லை உலகெங்கணும் என்று சிறப்பித்துக் கூறியதைக் கேட்டிருப்பாயா இட்லி? உனக்கு இந்தக் கௌரவம் உண்டா? நீ என் குழந்தை. சேர சோழ பாண்டியர்கள் தனித்தனியே புலிக் கொடி, மீனக் கொடி, விற் கொடி என்று கொடிகள் நாட்டிய அந்த நாள் முதலாய் என் பெருமை இருந்து வருகிறது.

இமயத்தை வென்று வாகை சூடப் போனத் தமிழ் நாட்டு வேந்தர்களது பாசறையில் மூட்டை மூட்டையாக இருந்தது எது? உழுந்து! கங்கை கண்ட சோழன் தென் திசையில் வீராதி வீரருடன் ரத கஜ துரகபதாதிகளுடன் போகும் போது வீரர்களோடு வீரனாய் அவர்கள் துணைவனாய்க் குதிரைகள்' பொதி மாடுகள் மீது போன மூட்டைகளில்ச் சிறப்பான 'காபந்து'க் குள்ளாகியது என்ன வஸ்துவாக

† எஸ். டி. சுந்தரம், + கூட்டல்

X into என்பது 'உள்ளே'! ஆங்கில தமிழ்ச் சிலேடை.

இருக்க முடியும்? உழுந்து மூட்டைகள். நான் இல்லாதிருந்தால் இந்த இட்லி வாய் வீச்சு வீச முடியுமா? முக்கால்ப் பங்கு அரிசிக்கு கால்ப் பங்கு உழுந்து 'ஜவாப்' சொல்லுகிறேன். சிறுவர்கள், 'வெள்ளை மாடும், கருப்பு மாடும் தண்ணி குடிக்கப் போச்சு; கருப்பு மாடு தண்ணீரோட போச்சு; வெள்ளை மாடு வீட்டுக்கு வந்தது — இது என்ன? - உழுந்து' என்று விடுகதை போடுவார்கள். குளவிகளும் கிழவிகளும் ஆடவரும் பெண்டிரும் அனைவரும் ரஸிக்கும் பொருளாக இருந்துள்ளேன். அரிசியோடு நான் கிடந்து உழலுவதையும் ஆட்டுக் கல்லின் வாயில் நான் கிடந்து பொங்கிப் பொங்கித் தவிப்பதையும் நினைக்கும் போது கம்பரின் கவிதை அடியும், விடுகதையும் நினைப்பு வரும். என் துக்கங்கள், மெதுவடை போல மென்மையாகி விடு கின்றன!"

பெரிய பிரசங்கத்தைச் செய்த உழுந்தின் பெரு மூச்சு முடியு முன் அரிசியின் குரல் கேட்டது.

அரிசி, "உழுந்தே விழுந்திடாதே. நெல்லில் பாதி அரிசி யென் பதுபோல, உலகில் பாதிப் பேர் என்னால் உயிர் வாழ்கிறார்கள். உழுந்தென்னமோ தன்னை இப்படி டம்பம் அடித்துக் கொள்ளுகிறது. இந்த நாளில் 'க்யூ' நிற்கிறதும், கார்டு தூக்குவதும் இந்த உழுந்திற்கு உண்டா? அற்ப வஸ்து. யாரோ ஒரு உணவுப் பிரியன் என்றோ என்னை உழுந்தோடு இணைத்து விட்டான். சிப்பியில் முத்தும் கள்ளி வயிற்றில் அகிலும், மான் வயிற்றில் கஸ்தூரியும் பிறந்தது போன்று என் வயிற்றில் பிறந்தது இட்லி. கப்பலில் பாதிப் பாக்குப் போட் டவன் கதையாக இன்று தன்னால்த்தான் இட்லி உயிர் வாழ்கிறதாக, வாழப் போவதாக ஜம்பம் சொல்லலாமா?" என்று தன்னைப் போற் றியதும் ஒரு இடி யோசை கேட்டேன்.

"நிறுத்து. அரிசி வாயை மூடு!" என்ற கடகட வெனச் சிரிப்பு.

திரும்பிப் பார்த்தால் ஆட்டுக் கல்லின் ஹுங்காரம். "ஆட்டுக் கல்லே, இந்த அரிசியின் தம்பட்டத்தைக் கேட்டீர்களா?" என்றது உழுந்து.

"உழுந்தே, நீ நினைப்பதும் தவறு; அரிசி நினைப்பதும் தவறு. இட்லியின் முழுச் சிறப்புக்கும் அடியேன் காரணம்!" என்றது ஆட்டுக்கல் தடலடியாக.

"வாயைப் பார் வாயை!" என்றது அரிசி.

"ஆமாம் நான் வாயாடி. அதிகமாகவே கத்துவேன். தமிழ் நாட்டுச் சிற்பிகள் தமது திறமையைக் கோவில்களிலும் குகைகளிலும் விட்டுச் சென்றார்கள். வீட்டுக்கு வீடு கோயில் கொண்டவன் நான். தெய்வம் உங்கள் உருவமா? அரிசியும் உழுந்தும் என் உருவத்துக்குச் சமர்ப்பணம் நைவேத்தியமாக. ஊழிகாலம் வரை நிலவும் கடவுள் என்னிலிருந்து பிறந்தார்."

உலக மக்களுக்கு 'கற்காலம்' என்பதாக ஒருகாலம் வந்தது. கல்லைப் பயன் படுத்தியவன் தமிழன். ஆட்டுக்கல் என்பதாக ஒன்றைச் செதுக்கித் தமிழ் நாட்டின் தனிப் பெரும் சிறப்பு வாய்ந்த இட்லி–தோசைக்கு வழி வகுத்தது எந்த தேசத்தில், எந்த நாட்டில் நடைபெற்றது?

எல்லோரா, அஜந்தா என ஓவியங்களை மலைக் குகைக்குள் அடைத்த சிற்பிகள் பெரியவர்களா? வாழ்க்கையின் அன்றாடத் தேவைக்கு உரித்தான கலைப் பாத்திரத்தை வடித்த சிற்பிகள் பெரியவர்களா? மன இன்பத்தோடு வயிற்றுக்கும் பயன் தருவதே உயர்ந்த கலை என்பதாக † ஒரு நிபுணர் சொன்னார். அவர் என்னை மனசிலே தூக்கிப் போட்டுக் கொண்டே பேசியிருக்க வேண்டும். இத்தனை யுகமாக தமிழர்கள் கல்லை வணங்கி வழிபட்டதோடு நில்லாமல் உழுந்தையும் அந்த அரிசியையும் இரும்பு, மரம் இவைகளில் ஆட்டி எடுக்கக் கூடாதா?

கல்லில்தான் சூட்சமம். 'காட்சியிலே இல்லையது கல்லிலே உள்ளதடா' என்பது எனது விவாதம். பஞ்சு போன்ற இட்லியின் தன்மைக்குக் காரணம் இந்த முரட்டு ஆட்டுக்கல் எனக் குழவி சாட்சியாகச் சொல்லுவேன்.

கல்லைப் பேசாத் தெய்வம் என்பதோடு பேசுந் தெய்வமாகவும் கொள்ளலாம். கடகட வெனப் பேசவில்லையா நான்? மொஹஞ்சதாரோவில் என்னென்ன மறைபொருள்கள் தோண்டி யெடுக்கப்பட்டாலும் ஆட்டுக்கல் கிடைத்திருக்கிறதா?

மூட்டை அளந்த உழுந்தே! அந்த மூவேந்தர்கள் படையில் யானைப் பக்கம் நீ வந்தது உண்டோ? அந்நாளிலே ரயிலும், ரயில்வே சிப்பந்திகளுக்கு 'ப்ரீ பாசும்' இல்லாத காரணத்தால் யானைகள் அதைச் செய்தன. ஒவ்வொரு யானையின் முதுகிலும் இரும்புச் சங்கிலிகள் கோத்துவிட்ட ஆட்டுக் கற்கள் இடசாரி வலசாரியாகக் காற்றிலே ஊசலாடிச் சென்றதை யாரறிவார்? இதற்கென யானைப் படையில் 'ஆட்டுரற் களிமா' என்ற பேரானை உண்டு. அதுவே ஆட்டுரற் படையை முன்னின்று நடத்தும் என்பது வரவரப் புலனாகாத உண்மையாகப் போய் விட்டது.

கோவிலுக்குக் கோபுரமும், கடலுக்கு நீலமும், கவிதைக்கு இசையும் எப்படியோ அப்படியே இட்லிக்கு ஆட்டுக்கல்.

இட்லியின் சிருஷ்டி கர்த்தா நான்.
சட்டினியின் தாய் நான்
மிளகாய்த் தூளின் தந்தையும் தாயுமானவனும் நானே
சாம்பாரின் அட்சய பாத்திரம் நான்!

★

ஆட்டுக்கல்லின் இடிக் குரல் நின்றது. நான் மூச்சுவிட எண்ணி இட்லியைப் பார்த்தேன். என் முன்னே இட்லியைக் காணோம். மனப் பிரேமையில் இவ்வளவும் நடந்திருக்கிறது.

† உணவு நிபுணர்

"என்ன காலைத் தூக்கமா இட்லி சாப்பிட வாருங்கள்" என்றாள் காந்திமதி.

"இட்லியா? அம்பிப் பயல் வரட்டும். அவன் மூன்று மாதமாக என்னை நச்சரித்தான்" என்றேன்.

"எந்த அம்பி?"

"ஹோட்டல் அம்பி! 'டேபில் கிளீன்' என்பானே அவன்!"

"கர்ண மகாராஜா யாசகத்திற்குப் புறப்பட்ட கதையாக இருக்கிறதே. அம்பி, வீட்டுக்கு இட்லி சாப்பிட வருகிறது" என்றவள் இட்லி அவிக்கப் போனாள்.

இட்லி உண்மையிலே தமிழன் பெருமைப் படத்தக்க பொருள் தானா? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் புட்பகம், சாவகம், கங்கணம், ஈழம், யவனம் எங்கும் திசையிட்டுச் சென்ற கப்பல்களில் தமிழர் சொல்லுகிறார்கள்! திரை கடலில் திரவியம் தேடப் போன அவர்கள் கொண்டு செல்லும் முக்கிய பொருள் என்னவாக இருந்திருக்கும். பொன்னா, மணியா? கூர்ந்து பாருங்கள். இட்டலி, வெற்றிலை, வாழையிலை. சீனம் யவனம் எங்கணும் என் வெண்ணிற வடிவம் உலாவிற்று. மிசிரர், யவனர், கொங்கணர், கடாரர் முதலான நாட்டினர்களின் நாவுக்கு அரசனானேன். நேற்றுக்கூட ஹோட்டல்களிலே ஆங்கில அமெரிக்க ஸோல்ஜர்கள் செய்த தொம்ஸம் கொஞ்சமா, நஞ்சமா? இருந்திருக்கலாம் அன்றும் பழந் தமிழர் படைகளில் ஆட்டுரற் களிமாப் படை யென்று!

என் சிந்தனைக்கு முட்டுக் கட்டையாக "சார்! என்ற குரல்!' அது அம்பியின் குரல். அவன் இட்லி சாப்பிட வந்திருக்கிறான்! காந்திமதி பறிமாற வந்தாள்.

அம்பி "சார் சார். அப்படியே தட்டில் வைக்கச் சொல்லுங்கள். நான் எடுத்துப் பறிமாறுகிறேன். என் கையிலே அதைத் தொட வேண்டும். இப்போ ஹோட்டல்களிலே போடுகிற தோசை, அது தோசையா? வௌவாலை மடக்கிப் பிடிக்கிற மாதிரி. இட்லியை வட்டுவட்டா, நிலாத் துண்டு போல டாண் டாண்ணு தூக்கி வீசலாமே........." என்றவன் எடுத்து என் இலையில் பறி மாறினான். அவனும் ரஸித்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

சஞ்சீவி மலையைக் கண்ட அனுமானுக்கு இவ்வளவு சந்தோஷம் இருந்திருக்குமா? கன்றைப் பிரிந்த காராவிற்குத்தான் இருக்குமா? அல்லியின் மொட்டு, வெண்ணிலவின் கிரணங்களுக்கு ஏங்குவது போலல்லவா இருக்கிறது அம்பியின் இட்லி ஸ்பரிச வாதனை. இட்லியைக் காணாத அம்பியின் விரல்கள் போல என்ற புதுமொழி சொல்லலாம்.

அம்பி "அண்ணா, இட்லிக்கு ஹோட்டல் இட்லிதான் ஓசத்தி, சாப்பாட்டுக்கு வீட்டுச் சாப்பாடுதான் ஒசத்தி!" என்றான். உடனே சாம்பார் சமுத்திரத்தில் இட்லித் தீவுகளில் வெங்காயக் குன்றுகள் மிதக்கும் காட்சி எழுந்தது. அதற்குள்ளே அம்பியின் குரல்,

இட்லியின் வாழ்வதனை ஜொஜ்ஜி கவ்வும்
இட்லி மறுபடி வெல்லும், எனும் இயற்கை
வட்டமதை, நம்மாலே உலகம் கற்க
வழி தேடிப் போர் இந்த செய்கை செய்தான்.
சுட்டதனை மென்மேலும் சேர்ப்போம் — இன்று
துன்புற்றும் பொறுத்திருப்போம்; காலம் மாறும்
இட்லியை அப்போது எங்கும் காண்போம்
இடமுண்டு அதன் பெயர்தான் ஹோட்டல் அண்ணு.

என்ற சப்த ஜாலம் என் மனதாலே கவிதா உணர்ச்சியைக் கிளறியது. பாடினேன், வர கவியாகப் பாடினேன்.

இட்டலி யே வேண்டும் ஓட்டலில்
இட்டலி யே வேண்டும் — செந்
தாமரை நிறத் தினதாய் — வெங்காயம்
தேங்கி நிற்பன வாய் — அந்த
இட்டலித் தட்டினி லேஓர் — தேங்காய்ச்
சட்னி வர வேண்டும் — ஓடும்
§ பானின் அருகினி லே — அம்பி
ஏனமும் கரண்டியும். (இட்டலி)

பாட்டுப் பாடிடவே அங்கே — ரேடியோ
பெட்டி தான் வேணும்
காட்ட மாயப் பொடியே — தட்டில்
கலந்து விழ வேணும்
ஓட்ட மாய் ஓடிவந்து — எண்ணெய்
ஒரு சொம்பு ஊற்ற வேணும்
வாட்ட சாட்டமாய்க் — கிழங்கை
வாரிப் போட வேணும்.

அம்பி, "அண்ணு பேஷ்! அந்த நாளும் வந்திடாதோ?" என்முன்

"அம்பி இன்னும் சாப்பிடலாம்."

நிலாத் துண்டுகளை விழுங்கும் நிலா முகிற் பறவையைப் போல விழுங்கிக் கொண்டிருந்தோம். ஆவி யடித்தது கையில். மனதிலும் இதயக் கதவு திறந்தது.

இட்லி, "மூவேந்தர்கள் எங்கும் படையெடுத்ததின் ரகஸியம் இதுவே. அங்கங்கே அரிசி உழுந்து உண்டு தமிழன் கலைச் செல்வத்தை நிலை நாட்டப் போயிருப்பார்கள். நான் இல்லா விட்டால் தமிழ்நாடு இல்லை. தமிழர் நாகரிகம் இல்லை. நமது சமையற் கலை தழைக்க வேண்டுமானல் ஹோட்டல்களுள் இட்லி வர வேண்டும்! இதை அரசாங்கம் கவனித்தால்?......... இன்றைக்கே என் ஒவி அவியும். என் நெஞ்சு நீராவியில் வேகும். அதுவரை நான் வீட்டுக்குள் சமைந்த பெண்ணைப் போல் பதுங்கிக் கிடக்க வேண்டும்! வீதிக்கு வீதி பலர் முன்னிலையில் மேஜையிலே பளிங்குக் கற்களிலே துள்ளி விளையாடும், அந்த நாளும் வந்திடாதோ!" எனச் சொல்லிற்று.

அந்த நாளும் வந்திடாதா?

---

§ மின்சார விசிறி



# பிரயாணி

குமா. பாலசுப்ரமணியம்

★

ஞாலமிதில் சிவர்திருச் சங்கம் விட்டு,
'நான்' பிரிந்து வந்த பழங்காலந் தொட்டே,
காலமெனும் நீண்ட தனிப்பாதை மீதென்
காலயரச் செல்லுவதில் ஓய்வொழிந்தேன்.

பந்தமுடன் பின் தொங்கும் பழைய மூட்டை
பாதாளம் சேர்ப்பது போல் கீழே ஈர்க்கும்;
நொந்த சிறு உள்ளத்தால் வாழ்க்கையூடே
நம்பிக்கைப் பிரயாணம் நீடிச் சென்றேன்.

துன்பம் நேர் வெய்யிலிது வேதை மிஞ்சித்
துள்ளிடவே உச்சியினில் தாக்கும். அற்ப
இன்பம்போல் ஆங்காங்கே நிழலின் துண்டு
இருப்பதனைக் கண்டாலோ மெய் சிலிர்ப்பேன்.

என்ன முடிவாகிடுமோ; எங்கே போமோ?
இந்த வழியின் இறுதி ஏதோ; என்றே?
சொன்னதிலை மர்மமதைக் கண்டோர் - இங்கே
சொல்பவரில் யாருமதைக் கண்டாரில்லை!

சொர்க்கந்தான் பாரென்பார். சிலரோ வாயாற்
சொல்லொண்ணாச் சோதியதைச் சேர்வோ மென்பார்.
தர்க்கத்தின் புதை பொருளை அறியேன். ஆனால்
தாமதியேன் தனிவழியே செல்வதற்கே!

# எங்கள் காவேரி

அ. கிருஷ்ணமூர்த்தி

"அது என்ன, காவேரியை உங்கள் காவேரி என்று உங்களுக்கு மட்டும் சொந்தம் பாராட்டுகிறீர்?" என்று கேட்டார் ஒரு நண்பர், இந்தத் தலைப்பைப் பார்த்ததும்.

"தலைப்பைப் படியுங்கள்" என்றேன். "எங்கள் காவேரி" என்றார்.

"இன்னொரு முறை"

"எங்கள் காவேரி"

"மறுபடியும்"

"எங்கள் காவேரி"

"காவேரி இப்பொழுது யாருடையது?" என்றேன்.

"எங்கள் காவேரி" என்றார்.

பிறகு நான் கேட்டேன், "இப்படியே படிக்கும் போதெல்லாம் காவேரியை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காவேரி என்று படித்துக் கொள்வார்களல்லவா?"

"ஆம், காவேரி அப்பொழுது படிப்பவருக் கெல்லாம் சொந்தமாகிறது" என்றார்.

பழைய தமிழாசிரியர்கள் சில சொற்களுக்கு வேடிக்கையாகச் சில சிறப்புக்களைக் கற்பனை செய்வார்கள். அது ஒரு வெறும் போலிக் கற்பனையே தவிர உண்மையல்ல. அந்த முறையை ஒட்டி "எங்கள்" என்ற சொல்லுக்கும் ஒரு கற்பனை சொல்லத் தோன்றுகிறது.

'எ' என்பது உயிரெழுத்து. வேடிக்கை காணச் சொல்லும் சேதியில் ஏது இலக்கணம் நுழைகிறதே என்று மூர்ச்சையாகிவிட வேண்டாம். அப்படித் திக்கு முக்காடும் சேதி ஒன்றுமில்லை.

'எ' – இது உயிரெழுத்து

'ங்' – இது மெல்லெழுத்து

'க' – இது வல்லினம்

'ள்' – என்பது இடையினம்

எனவே, உயிரெழுத்து, மெல்லினம், வல்லினம், இடையினம் என்ற ஒவ்வொரு வகையிலும் ஒவ்வோரெழுத்து வந்து இந்தச் சொல்லில் அமைந்திருக்கிறது, அதனதன் பிரதிநிதி போல. ஆகவே, தமிழின் முக்கியமான ஓசையெல்லாம் மாலை போலத் தொடுக்கப்பட்ட சொல்–ஒரு அரிய சொல்–எங்கள் என்பது.

"மன்னும் இமயமலை எங்கள்
மலையே"

"கொச்சிமலை குடகுமலை எங்கள்
மலைநாடு

குமரேசர் வாழுவதும் எங்கள்
மலைநாடு"

என்று குறத்தி பாடுகிறாளே — யார் பாடினாலென்ன பாட்டு இனிமைதானே? அந்தப்பாட்டில், எங்கள் என்ற சொல்லை எடுத்து விட்டுப் படியுங்கள். அதன் உயிர்ச் சத்து அடியோடு போய் விடுகிறதல்லவா? எங்கள் என்ற ஓசையைக் கேட்டதும் ஒரு நெருக்

கம், ஒரு உரிமை, பற்றுதல்—எல்லாம் புலப்படுகிறது.

ஆனால் எங்கள் என்ற சொல்லை எடுக்காமல் பாட்டின் அடியை எந்தவிதமாக மாற்றினாலும் அதன் அழகு குறைவதில்லை.

"பச்சைமலை பவழமலை எங்கள்
மலைநாடு"
"பரமேசர் வாழுவதும் எங்கள்
மலைநாடு"

இதை அம்மாதிரிப் படித்துப் பார்க்கவும்.

இனி காவேரியிடம் போவோம். காவேரியின் பெயர் காவேரி யல்ல. அதன் திருத்தமான காவிரிதான். கா—சோலை. சோலைகள் விரிந்த செழிப்பான நதி என்பது அதன் பொருள். பின்னர் காவேரி என்று வருவானேன்?

எளிமைக்கும் இனிமைக்கும் இருப்பிடமாக இருக்கிறது காவேரி என்ற ஓசை. வார்த்தைகளை எளிமை இனிமை கருதி நீட்டியும் குறைத்தும் பேசுவது வழக்கம். காவேரி என்று சொல்வதில் ஒரு அருமை, ஒரு இன்பம், ஒரு மலர்ச்சி நிறைந்திருக்கிறது.

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியார் பாடினார். அது பலவிடத்தில் நெஞ்சை யள்ளுகிறது. அவற்றில் மாதவியுடன் கோவலன் கடற்கரைச் சோலையில் மதுர கீதம் பாடுகிற இடமும் ஒன்று. அங்குக் காவேரியாற்றின் அருமைகளை இசையோடு இழைத்து யாழ் வாசிக்கிறார்கள் கோவலனும் மாதவியும். அந்த இரண்டு காதலர்கள் மூலமாய்க் காவேரியைப் பற்றித் தம் மனதில் ஊறி யெழுந்த காதலையெல்லாம் கொட்டி வைத்து விட்டார், ஆசிரியர் இளங்கோவடிகள்.

காவிரி என்று அழைப்பதே முறை. அந்தச் சொல்லை அப்படியே வைத்து இன்னிசை எழுதுவது முடியாத காரியமல்ல. இருந்தும் சரியான முறையைக் கடந்தாவது காவேரி என்று தன்னை நீட்டி யழைக்கும்படிச் செய்தாள் அந்த நதி மங்கை.

நமக்கு அந்தப் பாடல்கள் கூட முக்கியமல்ல;

நடந்தாய் வாழி காவேரி!
அறிந்தேன் வாழி காவேரி!

—என்று பாடும் அந்த இடந்தான் நெஞ்சை யள்ளுகிறது. ஒழுங்கு முறை தவறி ஒருமுறை இருமுறையல்ல, இன்னும் பலமுறை கூட நீளமான ஓசையோடு வாயார அழைக்கிறார் 'வாழி காவேரி' என்று! அந்த ஓசையிலிருக்கும் இன்பத்தின் இனிமையைக் கருதி.

எவ்வளவோ ஆறுகள் தமிழ் நாட்டில் மாலை மாலையாக ஓடுகின்றன. அந்த ஆற்றின் பெயர்களை மக்களுக்கு இட்டு அழைப்பதில்லை. ஆனால் 'காவேரி' என்று பெண்களைப் பெயர் சொல்லி அழைக்கிறது தமிழ்நாடு. அரிசில்! குடமுருட்டி! கொள்ளிடம்!—என்று யாரையும் அழைப்பதில்லை.

என்ன காரணம்? தென்னாட்டில் ஓடும் மற்ற ஆறுகளைவிட அது செழிப்பிலும் சீர்மையிலும் செல்வங் கொழிப்பது. சோழ நாட்டில் ஓடும் ஆறுகளுக் கெல்லாம் தாயாகித் தலைமை தாங்கும் பெருமையுடையது.

மற்ற ஆறுகளின் பெயரால் மக்களைக் கூப்பிடாதது மட்டு மல்ல; ஆற்றிக்குப் போகும் ஒருவனை, எங்குப் போகிறாய்

என்றால் 'காவேரிக்கு' என்று பதில் சொல்லுவான். உண்மையில் அவன் போவது வெட்டாறு, வெண்ணாறு, குடமுருட்டியாக இருக்கும்! வைகை, தாமிரவருணி கூடக் காவேரி என்று இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்படும். இப்படி மற்றப் பெயர்களை அடிப் படுத்திப் பொதுமையில் தன் பெயரே வழங்கும்படிச் செய்த சிறப்புடையவள் காவேரி.

இப்படிச் சிறப்புடைய ஒரு செல்வத்தை "எங்கள் காவேரி" என்று ஏன் சொல்லக் கூடாது உரிமையோடு? எங்கள் என்ற சொல்லில் உள்ள உரிமை யின்பமும், காவேரி என்ற சொல்லின் மெல்லிய ஓசைநயமும், பெண்மையழகோடு ஒரு சாயலாக நினைவுக்கு வருகின்றன எங்கள் காவேரி என்னும் போது.

வட நாட்டிற்கு இமயமும் கங்கையும் எப்படியோ அப்படித் தமிழ்நாட்டுப் பொதியமும் காவிரியும். ஆனால், இமயத்திற்கும் கங்கைக்கும் புண்ணியமும் புராணமும் உண்டு. அவை பொதிய மலைக்கு முண்டு; காவேரிக்கு முண்டு. இப்படிப் புண்ணியமும் புராணமும் இல்லாவிட்டாலும் இமயமும், பொதியமும், கங்கையும், காவிரியும் தத்தமக்கென்று வேறு எவ்வளவோ சிறப்புக்களைக் கொண்டிருக்கின்றன. ஏன்? காவேரியின் பெருமை புண்ணியத்தினாலும் புராணத்தினாலுமல்ல. காவேரியின் வளந்தான் புண்ணியத்தைக் கற்பித்தது. புண்ணியம் புராணத்தைப் பெற்றது. அப்படியேதான் கங்கைக்கும்!

உயிரே யில்லாத ஒரு பொருளுக்கு உயிரைக் கொடுப்பது; சர்க்கரை கலக்காமல் ஒரு பொருளுக்குத் தித்திப்பு ஊட்டுவது; அசையாத ஒரு பொருளை அசைவது போலக் காட்டுவது; ஆயிரம் மைலுக்கு அப்பால் உள்ள ஒரு பொருளை, ஆயிரம் ஆண்டுகள் முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை கண்ணுக்கு முன்னால் இருப்பது போல் கற்பனை செய்வது முதலான அரிய வித்தைகளை அழகிய வார்த்தையால் செய்யும் திறமை புலவனுக்கு உண்டு.

காவேரி உயிரில்லாத ஒரு ஆறு தான்; இருந்தாலும், அவளை உயிருள்ள ஒரு இன்பக் காதலி போலவும், சோழ மன்னன் அவளுடைய ஆசை நாயகன் போலவும், அவனுடைய செழிப்பான செங்கோலால் காவேரி கவலையற்றுக் களிப்படைந்தவள் போலவும், அந்தக் களிப்பில் அசைந்து ஒதுங்கித் தன்னை மறந்து நடப்பவள் போலவும், அந்த இன்பக் காட்சியைக் கடற்கரையில் கண்ணகி கோவலன் பாடுவது போலவும் ஆசிரியர் இளங்கோவடிகள் மெல்லிய தமிழோசையில் உணர்ச்சி ததும்பப் பாடுவது உண்மையிலேயே நெஞ்சை யள்ளுகிறது.

"பூவார் சோலை மயில் ஆலப்
புரிந்து குயில்கள் இசை பாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன் வாழி காவேரி!"
"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்!
புலவாய் வாழி காவேரி

இந்தக் கவிகளில் இளங்கோவின் ஒப்புயர்வில்லாத பெரும்

புலமை பாலோடு கலந்த தேன் போலக் கலந்து கிடக்கிறது. காவேரி யாற்றின் தண்ணீர் சிலு சிலு களு குளு என்று ஓடுவது போல, அக்கவிகளும் ஓசையினிமையில் மிதந்து வழிந்து ஓடுகின்றன. இந்த ஓசையோடு இன்னிசையும் கலந்து விட்டால் முப்பழமும் சர்க்கரையுந்தான்!

நதிகளை வருணிப்பதில் ஆசிரியர் இளங்கோவடிகளுக்கு அடுத்தபடி ஆசிரியர் கம்பரைத்தான் சொல்ல வேண்டும். கோதாவரியைப் பாட வந்த கம்பர், அந்த நதிமங்கை போகிற போக்கில் முத்தை இழுத்துப் பொன் திரட்டி, மணிகளை உருட்டிக் காடு, மலை நாடு நகரமெல்லாம் பாய்ந்து வழிந்து வருகிற அழகை,

முத்திர்த்துப் பொன் திரட்டி மணியுருட்டி
முது நித்தம், முன்றில் ஆயர்
மத்திர்த்து மரவிர்த்து மலையிர்த்து
மானிர்த்து வருவது, யார்க்கும்
புத்திர்த்திட்டு அலையாமல் புலவர் நாடு
உதவுவது, புனிதமான
அத்திர்த்தம் அகன்கோதா விரியென்பர்
அம்மலையின் அருகிற்று அம்மா!

என்று ஒரு பெரிய வெள்ளம் முத்தை — மணியை — மலையை — மரத்தை அடித்து உருட்டிக் கொண்டு வருவது போன்ற எடுத்த ஓசையில் பாடுகின்றார். இது கம்பனுடைய மேதைக்கும் புலமைக்கும் ஒரு எடுத்துக் காட்டான இடம்.

இருந்தாலும், காவேரியைக் கம்பர் இப்படிப் பாடியிருந்தால் இன்னும் எவ்வளவு அழகாக இருந்திருக்கும்! இருந்தாலும், காவேரியின் மந்தமான நடையை மெல்லிய நாதத்தில் பாட இளங்கோவடிகளே ஏற்றவர். ஏன்? கோதாவரி உருண்டு புரண்டு வேகமாகச் செல்வது போல், காவேரி ஓடுவதில்லை. கோதாவரி ஓடினால், காவேரி நடக்கிறாள். எனவே, கோதாவரிக்குக் கம்பனுடைய கடுமையான நடையும், காவேரிக்கு இளங்கோவின் மந்தகாசமுந்தான் இன்பமளிக்கின்றன. இந்த இன்ப ஓசையை இளங்கோவடிகள் "வையை என்னும் பொய்யாக் குலக் கொடி" என்று பாண்டியனுடைய வையைமா நதியைப் பாடும் போதுகூட இன்பத்தின் இளமை தோன்றப் பாடுகிறார்.

இருக்கட்டும், இவ்வளவு குணம் படைத்த காவேரி, குடகு மலையில் பிறந்து, மேடிட்டுப் போன மைசூரை விட்டுத் தெற்குப் பக்கமாக ஒதுங்கி, ஓட்டமும் நடையுமாக வந்து, கொங்கு தேசத்தில் புகுந்து, வலது பக்கம் கோவையை வைத்து, இடதுபுறம் சேலத்தை விட்டு மெதுவாகத் தப்பிச் சோழ தேசத்தில் நுழைகிறாள். குடகு மலையிலும், மைசூர்த் தேசத்திலும் அகப்படும் பொன்னின் பொடியைத் தன் உடம்பெல்லாம் பூசிச் சோழ நாட்டின் இரண்டு கரையிலும் மண்ணோடு கலந்து பொன்னையுங் கொடுத்துப் 'பொன்னி' என்று பெயரையும் பெற்றாள் இந்தக் காவேரி.

அவளுடைய அலையின் அழகும், அலையிற் கலந்த மண்ணின் தூசியுந்தான் சோழ தேசத்தின் செல்வச் செழிப்புக்குக் காரணம். செழிப்புக்குக் காரணமானதால் தான் பொன்னியும் புகழ் பெற்றாள். புண்ணிய நதியுமானாள்.

சோழ தேசத்தில் நுழையப் போகிற காவேரி, ஒரு 100 மைல் தூரம் போவதற்குள் பத்துப் பதினைந்து வழியாகப் பிரிந்து ஓடிச் சோழதேசத்தின் எல்லா மக்களுக்

கும் ஓரவஞ்சனையில்லாமல் சோறூட்டினள். இவள் சோழ நாட்டின் தாய். இவள் தந்தை குடகு மலையரசன்.

ஒவ்வோராண்டும் ஆடி மாதமானல் அவள் அருள் பெருகிய கைக்கு ஒரு சாண் உட்பட்டுத்தான் இருக்கும் சோழ தேசம். சிறப்பாகத் தஞ்சை நாடு. தஞ்சை முழுவதும் ஒரு சாண் தண்ணீருக்கு அடியில் முழுகியிருக்கும், தாகம் பசி யில்லாமல்.

காவிரியின் இருமருங்கும் கரும்பும், நெல்லும், இஞ்சியும், மஞ்சளும், வாழையும் கமுகும், மாவும் பலாவும் எங்கும் பூத்துக் குலுங்கியபடி நிற்கும். அடர்ந்த சோலையும், தணிவான கரைகளும், மந்தமான இருளும், குளிர்ந்த வாடையுமாகப் பூங்காவனங்கள் விரிந்து நிற்பதால் காவிரி என்ற பெயர்இவளுக்கு மிகவும் பொருத்தம்.

தமிழ் நாட்டின் முக்கியமான சைவ, வைணவ ஊர்களெல்லாம் இந்தக் காவிரிக் கரையில்தான் உள்ளன. சோழ தேசத்தின் பெரிய சரித்திர நிகழ்ச்சிகள் இந்தக் காவிரிக் கரையில் நடந்துள்ளன.

இவ்வளவு சீரும் செழிப்பும் நிரம்பினமையால், கம்பர்,

“தண்ணீரும் காவிரியே,
தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே”

என்று ஆற்றை முதலிற் புகழ்ந்து பிறகு அரசனையும், நாட்டையும் புகழ்ந்தார்.

காவேரியாற்றில் வெள்ளம் வரும்போது, சோழன் கரிகாலன் அப்புது வெள்ளத்திற்காக ஒரு பெரிய திருவிழாவே நடத்தின சிறப்பு சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டது. வானம் பொய்த்தாலும் தான் பொய்யாமல் எந்நாளும் தண்ணீர் தருவது; “வான் பொய்ப்பினும், தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி” — என்று பட்டினப் பாலை காவிரியைப் பாராட்டுகிறது.

சோழன் கரிகாலன் தன் தலைநகரமான உறையூரை விட்டுப் புதுத் தலைநகரம் கட்டியது கூடக் காவிரி கடலோடு கலக்குமிடத்தில். அதாவது, ஆறும் கடலும் கூடிச் செல்வஞ் செழிப்பதற்கேற்ற புகார் நகரத்தில். காவிரியின் கரையிலுள்ள ஊர்களுக்கெல்லாம் மகுடம் போல விளங்கியது காவிரிப்பூம் பட்டினம். இதனுல் காவிரியைப் பாடுவது என்ருல், புலவர்க்கெல்லாம் ஒரு ஆசை.

புலவர் பாரதியார் “கங்கைக் கரையிடத்துக் கோதுமைப் பண்டம், காவேரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்” என்று வட தேசத்தின் கோதுமையைக் காவிரியின் வெற்றிலைக்குப் பண்டமாற்று செய்வோம் என்று பெருமிதமாகப் பாடிய பாட்டு இங்கு நினைவுக்கு வருகிறது.

காவிரியின் பெருமை மற்றவரால் வரவில்லை.

காவேரியின் பெருமைக்குக் காவேரிதான் காரணம். வாழி காவேரி!

★

# மனித இதயம்

[எச். விஜயகுமார்]

கடந்த ஏழெட்டு நாட்களாகத் தன் தந்தையின் முகம் ஏன் வாடியிருக்கிறது என்ற விஷயம் ஸுலதாவுக்கு இன்றுதான் தெரிந்தது. பிரேம குமாரரின் கடிதம் அவளது உள்ளத்தை ஒரு ஆட்டு ஆட்டி விட்டது. தந்தையின் துக்கமும் பிரேம குமாரனின் கடிதமும் அவளை மீள முடியாத துக்கக் கடலில் ஆழ்த்தி விட்டன.

பிரேம குமாரிடம் க்ஷயரோகத்தின் சின்னங்கள் காணப்படுகின்றன என்று ஸுலதா கேள்விப் பட்டதிலிருந்தே அவள் சதா காலமும் விசனக் கடலில் ஆழ்ந்திருந்தாள். க்ஷயரோகம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இயற்கையாக மனிதனின் இதயத்தில் என்னென்ன பயங்கரக் கற்பனைகள் தோன்றுமோ அவைகளனைத்தும் ஸுலதாவின் இதயத்திலே தோன்றியிருந்தன. ஆனால் இன்று வந்த கடிதத்தில் க்ஷயரோகத்தைக் காட்டிலும் பயங்கரமான செய்தியை அவள் படித்தாள். ஒரு முறை இரு முறை அல்ல! இருபது முறைகள். ஒவ்வொரு முறையும் அவள் கண்களிலிருந்து வழியும் நீர் கடிதத்தை நனைத்துவிடும். கடிதத்தைப் படித்தபிறகு அவள் விடும் நீண்ட பெருமூச்சின் உஷ்ணத்தால் நனைந்த கடிதம் மறுபடியும் உலர்ந்துவிடும். இவ்விதம் நனைந்தும் உலர்ந்தும் அக்கடிதம் படாத பாடு பட்டுவிட்டது.

கடிதத்தைப் படித்து விட்டுத் துக்க சாகரத்தில் மூழ்கி யிருந்த அவளுக்கு வெளியுலகத்தைச் சரியாக அறிந்து கொள்ளும் தெளிவு ஏற்படுவதற்கு முன்னமேயே அவள் தந்தை அவளைக் கூப்பிட்டார். எங்காவது ஓடிப்போய் ஒளிந்து கொள்ளலாமா என்று ஒருகணம் அவள் மனம் எண்ணியது. தந்தைக்கு எல்லா விஷயங்களும் தெரிந்துதான் தன்னைக் கூப்பிடுகிறார் என்பதை ஸுலதா நன்றாக அறிந்திருந்தாள். எனினும் அவர் முன்னால் தன்னால் பேச முடியுமா, பேசுவதற்கு சக்தி இருக்குமா? என்றசந்தேகம் அவள் மனதில் எழுந்தது. ஏதாவது அவர் கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற பிரச்னையும் அவள் மனதை வாட்டியது.

தன் தந்தையின் அன்பை அவள் நன்றாக அறிந்திருந்தாள். சிறிய வயதிலிருந்தே பெற்றோர்களின் அன்பென்னும் அமிர்தத்தைப் பருகி வளர்ந்தவள். அவள் சுதந்திரத்திற்குத் தடையாக யாரும் இருந்ததில்லை, அவள் இருபதாவது வயதை அடைந்தவரை ஒரு நாள்கூட அவள் வாழ்க்கைப் பாதையின் முன்னேற்றத்தில் இன்னல்களோ தடைகளோ ஏற்பட்டதில்லை. அவளுக்குச் சகோதரிகளும் இருந்தார்கள். எனினும் சாதாரணமாக உலகத்தில் காணப்படும் போட்டியும் பொறாமையும் சண்டையும் சச்சரவும் அவள் குடும்பத்தில் தலை காட்டவே

இல்லை. யார் மற்றவர்களை விட அதிக அதிர்ஷ்டசாலி, அதிக அறிவாளி, அதிக அழகுள்ளவர்கள் என்ற பிரச்னைக்கு அவளது குடும்பத்தில் இடமே இருந்ததில்லை. எல்லோரும் ஒருமனப்பட்டு ஒரு உடலின் பல அங்கங்கள்போல ஒத்துழைத்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

இவ்வித அதிர்ஷ்ட சாலியான குடும்பத்தில் பிறந்த பெண்ணாகிய ஸுலதாவுக்கு கலியாண விஷயத்தில் கட்டுப்பாடுகள் கனவிற் கூட இருந்ததில்லை. தான் விரும்பும் வாலிபனுடன் மணம் செய்து கொள்வதற்குத் தந்தை மறுப்பார் என்ற எண்ணமே அவள் மனதில் தோன்றியதில்லை. அதே போல ஸுலதாவுக்கு என்று, தான் வரன் பார்த்தால் அதை ஸுலதா வேண்டாமென்று சொல்லமாட்டாள் என்று அவள் தந்தை பரிபூரண உறுதியுடன் இருந்தார். தந்தையும் மகளும் ஒருவர் இதயத்தை இன்னொருவர் நன்ருக அறிந்து கொண்டிருந்தனர். ஸுலதாவின் தாயும் குடும்ப சேவை செய்வதொன்றைத்தவிர, வேறெதற்காகவும் ஆசைப்படவில்லை.

முதன் முதலில் ஸுலதாவின் தமையனுக்குத்தான் பிரேம குமாரனின் பரிச்யம் ஏற்பட்டது. அதற்குப்பின் ஸுலதாவின் தந்தைக்கும், பின்பு ஸுலதாவுக்கும் அவ்வாலிபன் பரிச்சியம் ஏற்பட்டது. ஆடம்பரம், ஊடல், சமாதானம், மனப் போராட்டம், ரகசிய சந்திப்பு முதலியவைகள் எதுவுமின்றியே பிரேம குமாரனும் ஸுலதாவும் ஒருவர் பால் ஒருவர் கவரப்பட்டனர். அவ்விருவரின் குடும்பத்தாரும் அவர்களது நட்பால் மனமகிழ்ந்து மனதிற்குள்ளாகவே இருவரையும் ஆசீர் வதித்தார்கள்.

பிரேம குமாரன் பார்வைக்கு அழகாகவும், கட்டுமஸ்தான தேகத்துடனும் ஆரோக்யத்துடனும்தான் இருந்தான். அவன் உடலில் ஏதாவது வியாதி நுழைந்து விடக்கூடும் என்று யாருமே நினைத்திருக்க முடியாது. ஆனுல் ஏதோ விதிஎன்று சொல்லுகிருர்களே அது உண்மையாகத்தான் இருக்கும்போலிருக்கிறது. தன் வெகுநாளைய ஆசை ஒன்றைப் பூர்த்தி செய்வதற்காக பிரேம குமாரன் இந்திய சுற்றுப் பிரயாணத்திற்காகப் புறப்பட்டான்.

வடநாடு முழுதும் சுற்றி அலைந்த பிறகு தென்னுட்டில் அவன் புகுந்தவுடன் வாழ்க்கையில் முதல் முறையாக அவன் நோயுற்ருன். ஆனுல் சாதாரணமான அக்காய்ச்சலை அவன் லட்சியம்செய்வதேது? கொஞ்சகாலம் வரை அவன் தன் வியாதியை யாருக்கும் – ஸுலதாவுக்கும்கூட – தெரியப்படுத்தவில்லை. தன் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருந்தான். ஆனுல் திடீரென்று ஒருநாள் பிரேமகுமாரனின் தந்தைக்கு பிரேமகுமாரன் திருவாங்கூர் ஆஸ்பத்திரியில் நோயுற்று இருப்பதாகத் தந்திவந்தது.

கவலை நிறைந்த மனதுடன் பிரேமகுமாரனின் பெற்ருேர்கள் திருவாங்கூர் புறப்படச் சித்தமானுர்கள். ஸுலதாவின் மனதை அறிந்து கொண்ட அவள் தந்தை அவளையும் பிரேம குமாரனின் பெற்ருேருடன் செல்ல அனுமதித்தார். அந்தச் சமயத்தில்தான் பிரேமகுமாரன் – ஸுலதா இவர்களின் உடல்கள் மட்டும் வேறு உயிர் ஒன்றேதான் என்றும் எல்லோருக்கும் நிதர்சனமாகத் தெரிந்தது.

ஸுலதாவுக்கும் கூடப் பிரேம குமாரன் இல்லாமல் தான் வாழ முடியாதென்று அப்போது தான் தெரிந்தது. ரயில் அவர்களைச் சுமந்து கொண்டு திருவாங்கூர் போய்ச் சேருவதற்குள் ஸுலதாவின் களைசொட்டும் முகம் களை இழந்து விட்டது. அவள் கண்களிலிருந்த நீரெல்லாம் அழுதழுது வற்றிவிட்டது. பிரயாணத்தின் பொழுது பிரேமகுமாரின் பெற்றோர்கள், தமது உயிருக்கு மேலான புதல்வனைக் காட்டிலும் ஸுலதாவைப் பற்றி அதிகக்கவலை எடுத்துக்கொண்டார்கள்.

எனினும் எல்லாரும் நினைத்திருந்த அளவு வியாதி ஒன்றும் அவ்வளவு பயங்கரமாக இருக்கவில்லை. பயத்தைப் பற்றிய கற்பனையைவிட பயம் எவ்வளவு பயங்கரக்குறைவாக இருக்கிறதோ அதே போல வியாதியைப் பற்றிய கற்பனையைவிட வியாதி குறைவாகவே இருந்தது. ஸுலதாவின் கண்கள் மறுபடியும் பிரகாசம் வீசத் தொடங்கின. களையிழந்த முகத்தில் முன்னைக்காட்டிலும் முற்றும் புதியகளை சொட்டியது. ஸுலதாவைக் கண்டதுமே பிரேம குமாரனின் வியாதியும் இரண்டு நாட்களில் நீங்கிவிட்டது.

எல்லாரும் பம்பாய்க்குத் திரும்பினார்கள். பிரேமகுமாரனின் உடம்பில் சிறிது பலஹீனத்தைத் தவிர வேறெவ்வித வியாதியும் இருக்கவில்லை. மெதுவாக அவன் தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான்.

மார்கழி, தை மாதங்களென்றால் ஊரில் கலியாணங்களுக்குக் கேட்கவா வேண்டும்? இந்நாட்களில் இயற்கையாகவே பிரேம குமாரன் — ஸுலதா ஆகியவர்களின் பெற்றோர்களுக்கு இவ்விருவரையும் கலியாணக் கயிற்றால் கட்டிவிட வேண்டுமென்ற ஆசை தோன்றியதில் வியப்பெதுவுமில்லையல்லவா? ஒருதடவை இவ்விருவரின் பெற்றோர்களும் கலந்து பேசினார்கள். அதற்கு மறுநாளே ஸுலதா – பிரேமகுமாரர் ஆகியவர்களுக்கு இடையில் இக்கலியாணப்பேச்சு நடந்தது.

“எனக்கு இன்னும் உடம்பு சரியாகக் குணமாகவில்லை! மேலும் இப்போதைக்குக் கலியாணத்துக்கு அவசரமில்லை. நீ எப்போதும் என்னுடையவள் தானே ஸுலதா!” என்று கூறினான் பிரேமகுமாரன்.

“இப்போது குணமாகா விட்டால் என்ன? கலியாணத்திற்குப் பிறகு எனது கவனத்தாலும் சேவையாலும் உங்கள் உடம்பு முற்றிலும் குணமாகி விடுமே!” என்று கூறி, பிரேமகுமாரனின் வாயை அடைத்து விட்டாள் ஸுலதா!

ஆகவே கலியாணம் அநேகமாக முடிந்தமாதிரிதானிருந்தது. ஆனால் எதிர்பாராத இடைஞ்சல் ஒன்று நேரிட்டுவிட்டது. பிரேமகுமாரனின் சிற்றப்பன் முறையான ஒருவர் இக்கலியாணப்பேச்சு நடந்த நாலாவது நாளே நீண்டகால படுக்கைக்குப் பிறகு காலமாகி விட்டார். இக்காரணத்தை முன்னிட்டு இருசாராரும் கலியாணத்தை அடுத்த வருஷத்துக்கு ஒத்திப் போட்டார்கள். இவ்விதம் கலியாணத்தை ஒத்திப் போட்டது ஸுலதாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எனினும் யாரிடமும் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

“கலியாணத்தை ஒத்திப் போட்டது மிகவும் நல்லதாயிற்று ஸுலதா! ஒருவருஷத்திற்குள் என்

உடம்பு ஒன்று முற்றும் குணமாகி விடும். அல்லது முற்றும் மோசமாகிவிடும்!'' என்று கூறி நகைத்தான் பிரேமகுமாரன்.

அவன் இவ்வாக்கியத்தை என்னமோ விளையாட்டாகத்தான் சொன்னான் என்றாலும், அவ்வாக்கியமே உண்மையாகப் போயிற்று. கலியாணப் பேச்சு நடந்த பிறகு ஒருமாதம் வரைக்கும் அவன் உடம்பு என்னவோ நன்றாகத்தானிருந்தது. எனினும் அதற்குப் பிறகு அவனுக்குப் பலஹீனம் அதிகரித்தது. மருந்துகளுக்கும் கடுமையான பத்தியங்களுக்கும் அவன் பின் வாங்கவே இல்லை. என்றாலும் உடம்பு நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வந்தது.

கோடைக் காலத்தில் பிரேமகுமாரனின் தந்தை அவனது சுகாதாரத்திற்காகக் குடும்ப சகிதம் பஞ்சகனிக்குச் சென்று சிறிது காலம் இருக்கலாமென்று தீர்மானித்து, ஸுலதாவையும் தம்முடன் வரும்படி அழைத்தார். ஸுலதா தன் தம்பியைக் கூட்டிக் கொண்டு பஞ்சகனிக்குச் செல்லச் சித்தமானாள்.

அந்த நாட்களைச் ஸுலதாவால் எளிதில் மறக்க முடியுமா? பஞ்சகனிக்கு வந்தபிறகு பிரேமகுமாரனின் தந்தை இடையிடையில் பம்பாய்க்குச் சென்று கொண்டிருந்தார். ஒருமுறை அவர் பம்பாய்க்குச் செல்லும்போது பிரேமகுமாரனின் தாயாரும் அவருடன் சென்றாள். ஸுலதாவும் பிரேமகுமாரனும் தனியாக விடப்பட்டார்கள். இந்நாட்களில் இருவரும் ஆனந்த கடலில் திளைத்திருந்தார்கள் என்று சொன்னால் மிகையாகாது. பஞ்சகனியின் சீதோஷ்ண நிலைமை பிரேமகுமாரனுக்கு நல்ல பலனையே அளித்தது. அவன் உடம்பு மறுபடியும் குணமடைய ஆரம்பித்தது. ஸுலதா பிரேமகுமாரன், ஸுலதாவின் தம்பி, ஆகிய மூவரும் காலையும் மாலையும் மைல் கணக்கில் நடந்து அலைந்து திரிந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த பங்களாவிற்குப் பின்னாலுள்ள பள்ளத்தாக்கில் அவர்கள் எவ்வளவு மணிநேரம் உட்கார்ந்திருந்தார்கள்! மாலையில் மறையும் சூரியனைத் தினம் தினம் வித விதமான வர்ணங்களில் கண்டு களித்து இந்த உலக வாழ்க்கையின் இன்னல்களை எவ்வளவு எளிதில் மறந்திருந்தார்கள்? தென்றற் காற்றும் மெதுவாகத் தூறும் மழையும் அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தை அளித்தன? மலைகளின் மேலே மேகங்களுக்கிடையில் அவர்கள் திரியும்போது, உலகத்தில் அவர்களைத் தவிரவும், நிரந்தரமான ஆனந்தத்தைத் தவிரவும் வேறெதுவுமில்லை என்றல்லவா அவர்கள் நினைத்திருந்தார்கள்.

அவ்வின்ப நாட்களை ஆனந்தமாகக் கழித்து விட்டு அவர்கள் பம்பாய் திரும்பியபோது பிரேமகுமாரனின் உடம்பு முற்றும் குணமடைந்தது. அவன் உடம்பின் நிறமே அடியோடு மாறிப் போயிருந்தது. அவனைக் கண்ட எல்லோரும் "அப்பாடி! வேறுடன் தொலைந்தது உன்வியாதி!'' என்று கூறினார்கள்.

ஆனால்......?

ஆனிமாதம் முதல் மழை பெய்தவுடனேயே மறுபடியும் பிரேமகுமாரனின் உடல் நிலை மோசமாய்க் கொண்டு வந்தது. பம்பாயின் சீதோஷ்ணநிலை மாறிக் கொண்டு வந்தது போலவே

பிரேமகுமாரனின் தேக ஆரோக்யமும் மாறிக்கொண்டே வந்தது. பஞ்சகனியில் அவனுக்குக் கிடைத்த தேக ஆரோக்யம் பதிளைந்து நாட்களிலேயே மறைந்து விட்டது. பிரேமகுமாரனின் பெற்றோர்களின் மனதில் கவலை மறுபடியும் புகுந்து கொண்டது. ஸுலதாவைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. பிரேமகுமாரனின் மனதிலோ நிராசையே குடிகொண்டுவிட்டது. மருந்துகள் என்னவோ அவன் சாப்பிட்டுக் கொண்டுதானிருந்தான். ஆனல் அவனுக்கு அவைகளிலிருந்த நம்பிக்கை அடியோடு குன்றிப்போய் விட்டது. "இனி நான் பிழைக்க முடியாது"! என்று அவன் தன் மனதில் நிச்சயம் செய்து கொண்டான். இந்த நம்பிக்கை யின்மையைப் போக்க ஸுலதா மிகவும் முயன்று கொண்டிருந்தாள். எனினும் பயன் எதுவும் காணவில்லை. ஸுலதாவின் காதலும், அக்காதலில் தோன்றும் கண்ணீரும் வீணுகிக் கொண்டிருந்தன.

பிரேமகுமாரன் குணமடையவேயில்லை. ஒருநாள் திடீரென்று அவன் நெஞ்சில் வலி யெடுத்தது. அவன் தந்தைக்கு தலைமேல் இடி விழுந்தது போன்ற துன்பம் ஏற்பட்டது. எனினும் யாருக்கும் சொல்லாமல் அவர் பிரேமகுமாரனைத் தனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவரிடம் அழைத்துக் கொண்டு போனர். "எக்ஸ்—ரே" படமெடுத்த பிறகு பிரேமகுமாரனுக்குச் சுவாச கோசங்களில் க்ஷயரோகம் ஆரம்பித் திருப்பதாகத் தெரிந்தது. பிரேமகுமாரன் தைரியமாகவே இச் செய்தியைக் கேட்டு மனதில் வைத்துக்கொண்டான். எனினும் அவன் தந்தையோ சிறிதும் நம்பிக்கையே அற்றவராகி விட்டார். கொஞ்சம் நஞ்சம் இருந்த தைரியமும் அவரை விட்டகன்றது.

மறுநாள் ஸுலதா பிரேமகுமாரனைப் பார்க்க வந்தாள். பிரேமகுமாரன் கண்ணீருடன் ஸுலதாவைப்பார்த்து, "சுலதா! இனி நான் பிழைக்கமாட்டேன்!" என்று கூறினன். ஸுலதா ஒன்றும் பதிலே கூருமல் உட்கார்ந்து விட்டாள்.

அதற்கு அடுத்தநாள் ஸுலதாவின் தந்தை பிரேமகுமாரனின் தந்தையிடம், பிரேமகுமாரனை மீரஜ்ஜிற்காவது பஞ்சகனிக்காவது அழைத்துக் கொண்டு போகும்படியும், வியாதி இப்போது தான் ஆரம்பமாகி யிருப்பதால் முளையிலேயே கிள்ளிவிடமுடியும் என்றும் அபிப்பிராயம் கூறினர்.


இந்த அபிப்பிராயத்தை பிரேமகுமாரனின் தந்தை ஏற்றுக் கொண்டு மீரஜ்ஜுக்குப் பிரயாணமானர். ஸுலதாவை உடன் வரும்படி யாரும் அழைக்கவில்லை. அவளும் ஒன்றும் பேசாமலேயே இருந்தாள்.

பிரேமகுமாரன் "மீரஜ்" சென்றபோது அவனுக்கிருந்த மனநிலையை யாரும் அறிந்து கொள்ளவில்லை. ஸுலதாவிடமும் மனம் விட்டுப் பேச அவனல் முடியவில்லை. அவன் மனம் விட்டுப் பேசி யிருந்தானனல் க்ஷயரோகத்தின் பயங்கரக் கற்பனைக் கடலில் தத்தளிக்கும் அவனுக்கு எவ்வளவு ஆறுதல் தேவையாயிருந்தது என்பதை ஸுலதா அறிந்து கொண்டிருக்கமுடியும். ஆனல் பிரேமகுமாரன் ஒன்றும் பேசாமலேயே இருந்துவிட்டான். சுலதாவும் மௌனம் சாதித்தாள்.

பிரேமகுமாரன் மீரஜ் சென்ற பிறகு அவனிடமிருந்து ஒருநாள் விட்டு ஒருநாள் உடல் நிலையைப் பற்றிய செய்திகள் தவறாமல் வந்துகொண்டிருந்தன. அச்செய்திகளால் ஸுலதாவின் பெற்றோர்கள் எப்போதும் கவலையிலேயே மூழ்கிக் கிடந்தார்கள். ஸுலதாவின் முகத்திலிருந்த அந்த மோகனப் புன்னகை எங்கோ மறைந்து போயிருந்தது. வருடக்கணக்கில் மகிழ்ச்சி தங்கியிருந்த வீட்டில் இன்று துக்கமும் சோகமும் குடிகொண்டிருந்தன.

பிரேமகுமாரன் தன் கைப்பட ஸுலதாவுக்குத் தன் தேக நிலை பற்றிய கடிதங்கள் எழுதுவான். ஸுலதாவும் தன் கவலையெல்லாம் கடிதத்தில் எழுதி நிரப்புவாள். இருவருக்கிடையிலும் கடிதப் போக்கு வரத்து நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. மீரஜ்ஜின் அற்புத சௌந்தரியத்தைப் பற்றிச் சில சமயங்களில் பிரேமகுமாரன் சுலதாவுக்குக் கடிதமெழுதுவான். ஸுலதா பஞ்சகனியில் தானும் பிரேமகுமாரனும் கழித்த அவ்வின்ப நாட்களை ஞாபக மூட்டுவாள்.

ஆனால் பிரேமகுமாரனின் உடம்பு குணமடையவேயில்லை. நாட்கள் செல்லச்செல்ல வியாதியும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒருநாள் டாக்டர் தமக்கு



நம்பிக்கையில்லை யென்று மறைமுகமாகப் பிரேமகுமாரனின் தந்தையிடம் சொன்னார். பிரேமகுமாரனின் இதயத்தில் இவ்வார்த்தைகள் ஊடுருவிப் பாய்ந்தது. அவன் இவ்வளவு நாட்களாகச் சேர்த்து வைத்திருந்த தைரியத்

தையும், நம்பிக்கையையும் அறவே அகற்றிவிட்டான். இன்று அவன் ஸுலதாவுக்கு எழுதிய கடிதத்தில் அவன் மனதின் உண்மையான வேதனை பிரதிபலித்தது. மரணத்தின் சோகரேகை அதில் படர்ந்திருந்தது. ஸுலதா இந்தக் கடிதத்தைப் படித்ததும் நடுநடுங்கி விட்டாள். அவள் தன் தந்தையைப்பார்த்து "நான் மீரஜ்ஜுக்குப் போகட்டுமா அப்பா?" என்று கேட்டாள். அவள் தந்தை மறுக்கவில்லை.

சுலதா மீரஜ் சென்ருள். முதலில் திருவாங்கூர் சென்றபோது அவளுக்கிருந்த மன வேதனையைக் காட்டிலும் இன்று அவள் மனதில் பன்மடங்கு வேதனையிருந்தது ஆனாலும் அவ்வளவு வேதனைக்கிடையிலும் ஒரு சிறிய மகிழ்ச்சி பிரேமகுமாரனின் சேவைக்காகத் தன்னையே அர்ப்பணிக்கப் போகும் மகிழ்ச்சி அவள் மனதில் தோன்றிக் கொண்டிருந்தது. "நான் அங்கே இருந்தால் அவருக்கு விரைவில் குணமாகிவிடும்!" என்று அவள் நினைத்தாள்.

ஆனல்......?

தனக்கு சேவைசெய்ய அநுமதியே கிடைக்காது என்று ஸுலதா கனவில்கூட நினைக்கவில்லை. அவள் மீரஜ்ஜுக்கு வந்து சேர்ந்தவுடன் பிரேமகுமாரனின் தாயும் தந்தையும் அவளுக்கு இப்படி இருக்கவேண்டும்; இப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை கொடுத்தார்கள். இவ் வெச்சரிக்கைகளினல் சலிப்படைந்து கடைசியில் ஸுலதா பிரேமகுமாரனிடம் வந்துசேர்ந்த போது அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படி பிரேமகுமாரனின் கண்களில் அவள் எதைக் கண்டிருப்பாளோ? அவள் கண்களில் நீர் துளிர்த்தது. பிரேமகுமாரனும் தன் கண்களில் தோன்றிய நீரை மறைத்துக் கொள்ள முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஸுலதாவால் மேற்கொண்டு அங்கு தங்க முடியவில்லை. அவள் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் அவளுக்கு மிகவும்கடினமானவைகளாகத் தோன்றின. பிரேமகுமாரனின் மனமும் நாளுக்கு நாள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தது. இருவருடைய உள்ளங்களும் துடித்தன. ஆனலும் ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஸுலதா மீரஜுக்கு வந்து நான்கு நாட்களாகியிருக்கும். பிரேமகுமாரனின் தந்தை ஸுலதாவைத் திரும்பிப் பம்பாய்க்குச் செல்லும்படி கூறினர். ஸுலதாவின் வரவால் பிரேமகுமாரனின் உடம்பு குணமாகவில்லை என்பதை அவளும் அவனும் உணர்ந்தார்கள்.

ஸுலதா பம்பாய்க்குத் திரும்பிச் செல்ல நேர்ந்தது. மீரஜுக்குப் புறப்பட்டபோது மனதில் கொந்தளித்துக் கொண்டிருந்த துக்கக் கடலிலும் சேவை செய்ய முடியும் என்ற நினைவு அவளுக்குப்படகைப்போன்று உதவியது. ஆனல் இப்போதோ? அதுகூட இல்லை. அவள் வீடுவந்து சேர்ந்த போது அவள் மனம் உடைந்து போயிருந்தது. அதன் பிறகு பிரேமகுமாரனுக்குக் கடிதம் எழுத அவளால் முடியவில்லை. இங்கே பிரேமகுமாரனுக்கும் கடிதம் எழுதக்கூடாது என்று அவன் தந்தை தடையுத்தரவு போட்டிருந்தார். இருவருக் கிடையிலிருந்த கொஞ்சநஞ்ச தொடர்பும் அற்றுப் போய்விட்டது.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் பிரேமகுமாரனின் தந்தை எழுதிய நீண்ட கடிதம் ஒன்றைச் ஸுலதா தன் தந்தையின் கையில் பார்த்தாள். "படிப்பதற்குக் கொடுங்கள்!" என்று அவளால் கேட்க முடியவில்லை. தந்தையும் அதைப் "படி!" என்று கொடுக்கவில்லை. என்றுமில்லாத் துக்கம் அவர் கண்களில் இருப்பதை அவள் பார்த்தாள்.

பத்து நாட்களுக்குப் பின் பிரேமகுமாரன் எழுதிய கடிதம் அவளுக்குக் கிடைத்தபோது தன் தந்தைக்குவந்த கடிதத்தின் ரகஸியத்தை அவள் அறிந்து கொண்டு விட்டாள். கடிதத்தை மறுமுறையும் படித்தாள் அவள்:

ஸுலதா!

அல்லும் பகலும் மனதில் ஏற்பட்ட ஓயாத போராட்டத்திற்குப் பிறகு இக்கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். கணப்பொழுது மனதில் எழுந்த ஆவேசத்தில் இதை எழுதுகிறேன் என்று நினைத்துவிடவேண்டாம்.

இப்போது எனக்கிருக்கும் வியாதியே எனக்கு எமன் என்றும் இவ்வியாதியிலிருந்து நான் பிழைக்க முடியாது என்றும் எனக்கு உறுதியாகத் தெரியும். ஏதாவது மந்திர சக்தியினால் நான் பிழைத்து விட்டாலும் என் வாழ்க்கை வாழக்கூடியதாக இருக்காது.

"என் ஸுலதாவின் கதி என்னவாகும்?" என்ற ஒரே கவலை என்னை இரவும் பகலும் அரித்துத் தின்று கொண்டு வருகிறது.

கண்ணீர் நிறைந்த கண்ணுடன் உன்னைநான் வேண்டிக் கொள்கிறேன். என் மீது உனக்குள்ள அன்பை – காதலை மறந்துவிடு.

எனது இவ் வேண்டுகோள் உன்மனதை ஓயாத துக்கசாகரத்தில் ஆழ்த்தும் என்பதை நான் நன்ருக அறிவேன். எனினும் என் மனதைச் சாந்தப் படுத்துவதற்கு இதைவிட வேறுவழி ஒன்றும் தோன்றவில்லை.

ஸுலு! என் சாவுடன் உன் சாவையும் நான் விரும்பவில்லை.

இப்படிக்கு,
உன் பிரேமகுமார்.

தந்தை கூப்பிட்டதால் போகாமலிருக்கவும் அவளால் முடியவில்லை. அவள் தந்தையிடம் சென்றபொழுது அவர் கண்கள் பூமியைப் பார்த்த வண்ணம் இருந்தன. அருகில் வெறித்த பார்வையுடன் தாயார் உட்கார்ந்திருந்தாள். அவளது அண்ணனும் துக்கத்தை மறைப்பதற்குத் தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டிருந்தான்.

"ஸுலதா!" தந்தையின் குரல் கேட்டது. ஸுலதா அவரைப் பார்த்தாள்.

"பத்து நாட்களுக்கு முன் பிரேமகுமாரனின் தந்தையிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருந்தது. அதற்கு என்னுல் பதில் எழுத முடியவில்லை! இன்று அவரிடமிருந்து இரண்டாவது கடிதம் வந்திருக்கிறது!" என்று கூறிக் கொண்டு அவள் தந்தை இரண்டு கடிதங்களையும் அவள் கையில் கொடுத்தார்.

ஸுலதா கடிதங்களை வாங்கிக் கொண்டாள். ஆனுல் படிக்கவில்லை. மெதுவான குரலில், "எனக்கும் கடிதம் வந்திருக்கிறது!" என்று கூறினுள். அவ்வளவுதான். அதற்கு மேல் பேச

அவளால் முடியவில்லை. போதிய தைரியமுமில்லை. கண்களில் நீர் தளும்பியது. தந்தையால் இதைப் பார்க்க முடியவில்லை. அவர் எழுந்து அடுத்த அறைக்குள் சென்று விட்டார். பேச்சு அத்துடன் முடிந்தது.

பகற் பொழுது கழிந்தது. இரவில்தான் ஸுலதாவின் மனம் சற்றுத் தெளிவடைந்தது. எண்ண மேகங்கள் அவள் மனதில் கூடிக் குமுற ஆரம்பித்தன.

"எவ்விதம் அவரை மறப்பது? கலியாணம் ஆகிவிட்ட தென்றே நான் எண்ணிக் கொண்டிருக்கிறேனே!" என்று அவள் காதல் கேட்டது.

அதைக் கேட்ட கடிதம் பதில் சொல்லியது.

"அவர் மனதுக்குச் சாந்தியளிக்க........." இடையிலேயே வாக்கியம் நின்று விட்டது.

"அவர் உன் சுகத்திற்காகத் தானே எழுதுகிறார்!" என்று சொல்லியது மனம்.

"முடியாது! அவரை மறக்க—தியாகம் செய்ய—முடியாது! அவர் வாழ்க்கையுடன்என் வாழ்க்கையும் முடியட்டும்!" என்றது அவள் காதல்.

இவ்வித மனப் போராட்டங்களிலிருந்து முடிவு எவ்விதம் ஏற்படும்? நித்திரைக்கும் விழிப்புக்குமிடையே ஸுலதா இரவைக் கழித்தாள். எவ்வித முடிவுக்கும் அவளால் வர முடியவில்லை.

அடுத்த நாள் அவள் அண்ணன், தந்தை பிரேமகுமாரனின் தந்தைக்கு எழுதிய கடிதத்தை அவள் கையில் கொடுத்து, "உன் கடிதத்துடன் இதையும் சேர்த்துத் தபாலில் போட்டுவிடு!" என்று கூறிச் சென்று விட்டான். ஸுலதா திடுக்கிட்டாள். அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானாள்.

"தங்கள் கடிதத்தைப் படித்த போது நான் எவ்வளவு துன்பத்தையனுபவித்தேன் என்பதைத் தங்களுக்கு எவ்விதம் எழுதுவது? தாங்கள் என்னையும் என் குடும்பத்தையும் நன்றாக அறிவீர்கள்.

ஒன்று இரண்டு வருடங்கள் பொறுத்துக்கொள்ளலாம் என்று நான் நினைத்தேன். ஸுலதாவின் கலியாணத்தை முடிப்பதற்கு எவ்வித அவசரமுமில்லை.

ஆனால் தாங்கள் எழுதுவதிலும் நியாயமிருக்கிறது. இவ்வியாதியைப் பற்றி எதுவுமே சொல்வதற்கில்லை. பூரணமாகக் குணமாகி விடுமென்று சொல்ல முடியாது. ஆகவே தாங்கள் எழுதுவது சரி என்றே எனக்குப் படுகிறது.

ஸுலதாவுக்கு இக்கடிதத்தைக் கொடுக்கிறேன். அவள் எழுதும் பதிலே என் பதிலாகும். வாழ்க்கையில் நான் ஒருவர் மனதையும் கஷ்டப் படுத்தியதில்லை. இன்றும் கஷ்டப்படுத்த விரும்பவுமில்லை. ஸுலதா அறிவாளி. அவள் செய்யும் முடிவு எதுவானாலும் அது சரியாக இருக்குமென்றே நான் நம்புகிறேன்!"

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் ஸுலதாவின் வறண்ட கண்களில் மறுபடியும் நீர் துளிர்த்தது. மனதிலிருந்த பாரம் குறைவதற்குப் பதிலாக அதிகமாக ஆரம்பித்தது. அவள் அங்கேயே உட்கார்ந்து விட்டாள்.

மத்தியானம் பிரேமகுமாரனின் இரண்டாவது கடிதம் வந்தது.

அன்புமிக்க ஸுலதா,

உனக்கு நான் கடிதம் எழுதிய பிறகு என் கனவில் நீ வந்திருந்தாய். "நான் வாழ்விலும் சாவிலும் உங்களுடையவளேதான்!" என்று நீ கூறினாய். நான் உனக்கு ஆறுதல் கூற ஆரம்பித்தேன்.

"ஸுலதா! நீ மனதின் ஆழத்திலிருந்து பேசுகிறாய். ஆனால் அந்த ஆழத்தை இதுவரை யாராலும் அடைய முடிந்ததில்லை. நான் பிழைத்தாலும் உபயோகமற்றவனாகவே இருப்பேன். உனக்கு வாழ்வில் இன்பமளிக்க சக்தியற்றவனாகவே இருப்பேன்...... முடியாது! என்னால் அதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஸுலதா! நான் உன்னைக் காதலிக்கிறேன். அதை நான் நிரூபிக்க வேண்டும். நீ துன்பப்படுவதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று நான் கூறினேன். ஆனால் நீயோ விடாப்பிடியாக, "என் சுகம் உங்களில் அடக்கம்! நானும் என் காதலை நிரூபிக்க வேண்டுகிறேன்!" என்று கூறினாய்.

அதற்குள் நான் விழித்துக் கொண்டேன். கனவு என்னவோ மறைந்து விட்டது. ஆனால் அதன் நினைவு என் மனதில் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. அதனால்தான் கடிதம் எழுதலானேன். ஸுலதா! அன்பின் ஆவேசத்தில் அடிபட்டு விடாதே! நான் சுகமாக இருப்பதை நீ பார்க்க விரும்பினால் என்னை விட்டு விடு. அப்போதுதான் என் ஆன்மாவுக்குச் சாந்தி கிடைக்கும். வீணாக மனதுடன் போராடாதே! "கல்யாணமான பிறகு இதெல்லாம் நடந்திருந்தால்?" என்று நீ நினைக்காதே! ஆனால் அதற்கு மாறாக, கடவுளின் விருப்பம் வேறு மாதிரியாக இருந்திருக்கும். அதனால்தான் மணமாகவில்லை!" என்று நினைத்து மனதைத் தேற்றிக்கொள். உன் வாழ்க்கை மலரைக் கருகச் செய்யும் பாவம் எனக்கு வேண்டாம்.

என் கடிதத்துக்கு உடனே பதில் எழுது!

உன்னுடைய
பிரேமகுமாரன்

ஸுலதா இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். திடீரென்று அவள் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. அவள் அண்ணனை அழைத்தாள்.

"அண்ணா! மீரஜுக்குத் தந்தி செய்ய வேண்டும்! பிரேமகுமாரன் சம்மதித்தால் நான் அங்கு செல்ல விரும்புகிறேன்!" என்று கூறினாள் ஸுலதா. தந்தி கொடுத்த நாலு மணி நேரத்திற்குள் பதில் வந்தது.

"என் கடிதத்துக்குப் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்!" – பிரேமகுமாரன்.

ஸுலதா யோசித்தாள். அவள் கண் முன் பிரேமகுமாரனின் படுக்கை தோன்றியது. அவன் கண்களில் தளும்பி நின்ற அந்தக் கண்ணீரும் காணப்பட்டன. திடீரென்று எழுந்து தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

மேஜையின் மேல் தந்தை எழுதிய கடிதம் கிடந்தது. அதை எடுத்து அடியில் தன் பெயரை எழுதினாள். கண நேரம் அகன்ற கண்களுடன் அக்கடிதத்தைப் பார்த்தவாறே இருந்தாள். பிறகு கதவைத் திறந்து அண்ணன் கை

யில் கவரைக் கொடுத்து விட்டாள்.

ஸுலதா எவ்வளவோ முயன்று பார்த்தும் மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. கடவுளைத் தொழுவதில் கூட வெகு நேரத்தைக் கழித்தாள். என்றாலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. பெற்றோர்களும் ஸுலதாவின் இவ்வித நிலைமையைப் பார்த்துத் துக்கக் கண்ணீர் வடித்தார்கள். தனக்காக வீடு முழுதும் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறது என்பதைச் ஸுலதா அறிந்திருந்தும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

நான்கு நாட்களுக்குப் பின் மீரஜிலிருந்து கடிதம் வந்ததும் அவள் மனநிலை மாறியது. கவரின் மேல் பிரேமகுமாரனின் கையெழுத்துத்தான் இருந்தது. கடிதத்தை நடுங்கிக் கொண்டே கையில் வாங்கினாள். படிக்கும் பொழுதோ அவள் இதயமே அடித்துக் கொண்டது. ஆனால் அந்த நீண்ட கடிதம் முழுவதையும் படித்து முடித்த பிறகு அவள் முகத்தில் தெளிவு ஏற்பட்டது.

கடிதம் பிரேமகுமாரனுடையதுதான். கடிதம் தேதி வாரியாக எழுதப்பட்டிருந்தது மல்லாமல் கடிதம் எழுதிய நேரமும் குறிக்கப் பட்டிருந்ததிலிருந்து இரண்டு இரவுகளில் மும்முறை உட்கார்ந்து அவன் அக்கடிதத்தை முடித்திருக்க வேண்டுமென்று தெரிந்தது. சிற்சில இடங்களில் எழுத்துக்கள் கண்ணீரால் அழிக்கப்பட்டிருந்தன.

கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது:

என் உயிரே!

இன்னும் நான் ஏன் உனக்குக் கடிதம் எழுதுகிறேன் என்ற ஐயம் உன் மனதில் தோன்றலாம். ஆனால் தைரியத்துடன் இக்கடிதத்தைப்படி! இவ்விஷயத்தில் இனிமேல் வேறு எதுவும் எழுதவேண்டியிருக்காது என நினைக்கிறேன்.

உன் தந்தையின் கடிதத்திற்கு அடியில் நீ நடுங்கிய கைகளுடன் உன் பெயரை எழுதியிருந்ததைப் பார்த்தேன். அதிலிருந்து நான் உன் மன நிலையைக் கற்பனை செய்து அறிந்துகொண்டேன். உன்மனம் எவ்வளவுதூரம் துன்பப்படும் என்பதை என்னால் கற்பனை செய்ய முடியாவிட்டால் பிறகு வேறு யாரால்தான் முடியும்?

ஆனாலும் உன்கடிதம் எனக்குச் சாந்தியை அளித்திருக்கிறது. நான் எந்த வியாதியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேனோ அதிலிருந்து மீளும் நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. உண்மையைச் சொல்லப்போனால் நான் இறந்து விடுவேனே என்ற கவலை எள்ளளவும் என் மனதில் தோன்றவில்லை. உன் கடிதம் எனக்குக் கிடைக்காத வரை வாழ வேண்டுமென்று உனக்காகவாவது கஷ்டப்பட்டு உயிரோடு இருக்கவேண்டுமென்று ஆசைப் பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது உன் கடிதம் கிடைத்துவிட்டது. இனி என் வாழ்வை — உயிரை — கடவுளிடம் ஒப்படைத்து விட்டேன். ஆசையோ நிராசையோ எதுவும் இப்போது என் உள்ளத்தில் இல்லை.

கடைசி முறையாக ஒரே ஒரு விஷயத்தை உனக்குத் தெரிவிக்க

இக்கடிதத்தை எழுதுகிறேன். இவ்விஷயத்தை அறிந்த பிறகு உன் உள்ளத்திற்கும் சாந்தி கிடைக்கும் என நம்புகிறேன். என் வேண்டுகோளை நீ ஏற்றுக் கொண்டாய். அது நமக்கு மட்டு மல்ல நம்முடையவர்கள் என்று நாம் சொல்லிக்கொள்ளும் அத்தனை பேர்களுக்கும் – அத்தனை பேர்களுடைய வாழ்விற்கும் – இன்பத்திற்கும் அது அத்யாவசிய மானது.

இந்தயோசனை எனக்குத் திடீரென்று எப்படித் தோன்றியது? என் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியினலோ அல்லது என் அபூர்வ அறிவாலோ எனக்குத் தோன்றவில்லை. ஆகவே அதைப் பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்ள என்னல் இயலாது. நீ எனக்காகத் தவித்துக் கொண்டிருப்பதைப்போல் தான் நானும் உனக்காகத் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னை என் அருகிலேயே எப்பொழுதும் உட்கார்த்தி வைக்கத் துடிதுடி என்று துடித்துக்கொண்டிருந்தேன். அவ்விதம் செய்தால் உன்கதி என்னவாகும் என்பதை நான் என்றும் நினைக்கவேயில்லை. எனக்குச் சாவு நேரிட்டால் உன் உயிர்......

ஒருநாள் என் மனதை நான் தந்தையிடம் திறந்து காட்டி விட்டேன். "ஸுலதா இங்கே இருந்தால் எனக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்" என்று நான் அவரிடம் சொன்னேன். அப்பொழுது என்னவோ அவர் ஒன்றுமே பேசவில்லை. ஆனலும் அதற்குப்பிறகு அவர் மெதுவாக அந்தகாரத்தில் – அறியாமையில் – மூழ்கியிருந்த என் ஆன்மாவைத் தட்டி யெழுப்ப ஆரம்பித்தார். ஒருநாள் அவர் எனக்குப் புத்திமதி கூற ஆரம்பித்தார்.

"இதோ பாரப்பா குமார்! உன் மனதிலிருந்து ஸுலதாவை அகற்றி விடு. உன் கட்டுகளிலிருந்து அவளுக்கு விடுதலை அளி! அவள் உன்னை மறக்கா விட்டாலும் அவளுக்குப் புத்திமதி கூறி உன்னைத் தியாகம் செய்துவிடும்படி அறிவுறுத்து." என்று அவர் கூறினர்.

அன்பு நிறைந்த சொற்களால் அவர் எனக்கு ஆறுதலளித்தார். ஒருநாள் நான் உன்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். என் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாக வழிந்து ஓடியது. என் தோளின்மீது திடீரென்று யாரோ கை வைத்தார்கள், திரும்பிப் பார்த்தேன். அன்பு கனிந்த முகத்துடன் என் தந்தை நின்று கொண்டிருந்தார். அவர் என் முதுகைத் தடவியவாறு என்னைப் பார்த்து, "அப்பா பிரேமகுமார்! இவ் வியாதியிலிருந்து கடவுள்தான் உன்னைக் காப்பாற்ற முடியும். அதுவும் எப்போது என்று சொல்ல முடியாது. வியாதி நீங்கி விட்டால் கூட அது மறுபடியும் வராமல் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? இவ்வித நிலைமையில் உன்னல் குடும்ப வாழ்க்கை எவ்விதம் நடத்த முடியும்? ஒருவருடைய வாழ்க்கையை வீணுக்குவதில்........."

பின்னெரு நாள் உன் நிலைமையை எனக்குத் தெளிவாக்கிக் காட்டினர் அவர். என் மரணத்துக்குப்பின் உன் வாழ்க்கையின் சித்திரம் எவ்விதமிருக்குமென்பதை அவர் எடுத்துக் காட்டினர். நான் நடுநடுங்கி விட்டேன். என் உள்ளத்தில் போராட்டம் ஏற்பட்டது. "நீ ஸுலதாவை உண்மையாக நேசிக்கிருயா?" என்று கேட்டது என் மனம். "ஆம்" என்றேன் நான். "அப்படி

நேசித்தும்கூட அவள் வாழ்க்கையை நாசமாக்க எண்ணுகிருயா?'' என்று மறுபடியும் கேட்டது என் மனசாட்சி. நான் திகைத்தேன்.

ஒருமுறை என் தந்தை என்னிடம் உன் குடும்பத்தைப்பற்றிப் பேசினர். இவ்விதம் – இப்போது நான் இருக்கும் நிலைமையில் – நாம் பிரிந்து விடாவிட்டால் நமது குடும்பங்களின் கதி என்னவாகும்? நான் இறந்துவிட்டால் அந்தத் துக்கம் உனக்கு மட்டுமல்ல. உன் குடும்பம் முழுவதையுமே தாக்குமல்லவா? இந்தப் பாவத்திலிருந்து தப்பிக்க நினைத்தது என் மனம்.

"குமார்! நாம் கலியாணம் செய்துகொண்டிருந்தால் என்னவாகியிருக்குமென்று நினைக்காதே அதைப்பற்றி நினைக்க உனக்கு உரிமையில்லை. நடக்காததைப் பற்றி நினைப்பதைவிட நடந்ததைப்பற்றிச் சிந்திப்பதுதான் அறிவும் அழகுமாகும்.'' என்று இன்னெருநாள் என் தந்தை சொன்னர்.

இவ்விதமாக நாள்க் கணக்கில் தந்தை என்னிடம் பேசியும் தர்க்கித்தும், வாதித்தும் என் மனதை - உறுதியான மனதை - அசைத்து மாற்றியும் விட்டார். எந்த இதயத்தில் காதலுடன் தன்னலமும் கலந்திருந்ததோ அந்த இதயம் புனிதமடைந்தது. களங்கமற்ற காதல் உள்ளத்தோடு உன் பிரச்னையை நான் அலசிச் சிந்தித்துப் பார்த்தேன். என் தந்தை சொன்னது உண்மையென்று பட்டது.

அவ்வுண்மையை உறுதிப்படுத்துவதற்குச் சிலநாட்கள் சென்றன. உனக்குக் கேட்கவோ படிக்கவோ பிடிக்காத கற்பனைகள் கணக்கின்றி என் கண்முன் தோன்றின. உண்மையாகக் கூறுகிறேன் ஸுலதா! என்ஞல் அக்கற்பனைக் காக்ஷிகளைக் காணச் சகிக்கவில்லை. கேவலம் என் சுகத்திற்காகச் ஸுலதாவின் வாழ்க்கையைப் பலி வாங்குவதா என்று என் உள்ளம் கதறியது.

இவ்வித மனநிலைமையில் என் முடிவை நான் என் தந்தைக்குத் தெரிவித்துவிட்டேன். அவர் உன் தந்தைக்குக் கடிதம் எழுதினர். ஆனல் பதில் வரவில்லை. ஆகவே நானே உனக்குக் கடிதம் எழுதினேன். அக்கடிதத்தை உனக்கு எழுதியபிறகு என் மனவுறுதி தளர்ந்து விட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். தந்தைக்குத் தெரியாத விதமாக நடு இரவில் அழுதழுது கண்ணீர் சொரிந்து என் தலையணையை நனைத்து விட்டேன். ஆனல் இது கேவலம் எனது மனவுறுதியின்மை என்பது எனக்கு நன்ருகத் தெரியும்.

இதற்குப்பின் நான் கண்ட கனவை உனக்கு எழுதியுள்ளேன். நீ கொடுத்த தந்தியில் உன் காதல் எனக்கு நன்ருகத் தெரிந்தது. அந்தக் காதலை நான் தவருக உபயோகித்துக் கொள்ள முடியுமா? உனக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்று நான் எண்ணினேன். என் எண்ணத்தை நீ ஏற்றுக்கொண்டு எனக்கு எவ்வளவு சாந்தியையும் மகிழ்ச்சியையும் அளித்திருக்கிருய் என்பதை நான் எவ்விதம் எடுத்துக் காட்டமுடியும்? ஸுலதா! என்னைப் பரிபூரணமாக நம்பு. என் கடிதத்தில் இந்த மேன்மையான எண்ணத்தைத் தவிர வேறெந்த விதமான நோக்கமும் இல்லை; கணநேர சுகத்திற்காக ஒருவளுடைய வாழ்க்கை

யைப் பலி வாங்கக்கூடாது என்ற எண்ணமே என் மனதில் தலை தூக்கி நிற்கிறது. என் இதயமும் மனித இதயம் தானே!

நம்முடைய இந்த முடிவு நம்மிருவருடைய பெற்றோர்களுக்கும் திருப்தியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. நீயும் என்னைப்போல் கடவுளைத் துதித்து, மகிழ்வு பொங்கும் மனதுடனே இருக்க வேண்டுமென்பதுதான் என் அவா!

உன்னுடைய கடிதம் கிடைத்த பிறகு என் உள்ளத்தில் மரணத்தைப் பற்றியோ வியாதியைப் பற்றியோ எவ்விதமான கவலையும் கிடையாது. நான் தைரியசாலியாகிவிட்டேன். வியாதி என் உடம்பில் பரவினுல் பரவிக்கொள்ளட்டும். என் ஆன்மா புனிதமான — அமுத மயமான — அன்பு வாரிதியில் திளைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது தான் நான் உண்மைக் காதலனுகவும் ஆகியிருக்கிறேன்.

ஸுலதா! இதுதான் என் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலின் கதை! இக்கதையிலிருக்கும் ஒவ்வொரு சொல்லும் செய்கையும் இதயத்தின் — மனித இதயத்தின்— ஆழத்திலிருந்து வந்தவை, என்று நம்பி என் மாறுதலை மன முவந்து ஏற்றுக் கொள்வாய் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமேயில்லை. உன் வாழ்க்கை மலர், கண்மூடித்தனமான காதலில் சிக்கிக் கருகி விடாமல் பார்த்து, அதை மலரச்செய்து அதன் மணத்தைக் குடும்பத்திலும் ஊரிலும் உலகத்திலும் பரப்புவாயாக. அந்த மணம் எனக்கும் — என் மனித இதயத்திற்கும் — சாந்தியளிக்கும்.

உன் பிரேமகுமாரன்

ஸுலதா இக்கடிதத்தைப் பின்னுமொருமுறை படித்துக் கண்ணீரால் நனைத்தாள். எனினும் தெளிந்த மனத்துடன் அதை நெஞ்சில் அழுத்திக் கொண்டு தெய்வ வாக்கைப்போல் அதனை மன முவந்து ஏற்றுக் கொண்டாள். மனித இதயம் மனித இதயத்திற்கு மனச்சாந்தியை அளித்தது.

★

# ஒளியோட்டம்

ஆர். கே. விசுவநாதன்

வான வெளியில் ஒளியின் போக்கை அனைவரும் கவனித்திருக்கலாம். ஆகாயம் மப்பு மந்தாரமாக இருக்கும்போது மேகத்தைக் கிழித்துக் கொண்டு வரும் சூரிய கிரணங்களைக் கண்டவர்கள் ஒரு பொழுதும் அக்காட்சியை மறக்க முடியாது. இதைக் கண்டவர்களுக்கு ஒளியோட்டத்தின் முதற் பண்பு, நேர் கோடுகளில் செல்லுவது என்று சொல்லாமலே விளங்கும். ஒளியின் கதியை அளந்து பார்த்தபோது உலகில் அதைகாட்டிலும் வேகமாகச் செல்லக் கூடிய பொருள் ஒன்றுமே கிடையாது என்று தெரிய வந்தது. வெற்றிடத்தில் ஒளிக்கிரணங்கள் செகண்டுக்கு லக்ஷத்தி எண்பத்தாறுயிரத்து முன்னூறு மைல் வீதம் பரவுவதைக் கண்டார்கள். சூரியனில் கிளம்பும் ஒளி எட்டு நிமிஷத்தில் பூமியை வந்தடைகிறது. முதன் முதல் ஒளிக்கிரணங்களெல்லாம் மிகச் சிறிய தூள்களின் பாதைகளாக இருக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அதனால்தான் ஒளிக் கிரணங்கள் நேர் கோடுகளாக இருக்கின்றன என்று கருதினார்கள். மிகச் சிறிய துகள்களாக இருந்த போதிலும் அளவு கடந்த கதியின் விளைவாக இவை அதிக ஆற்றலுடன் இருக்கின்றன என்று கூறினார்கள். ஒளியை வெளியிடும் பொருள்களிலிருந்து இத்துகள்கள் கிளம்பி நானுதிசைகளிலும் செல்லுகின்றன என்றும் இத் துகள்கள் கண்ணாடி போன்ற பொருள்களின் மூலம் சுலபமாக ஊடுருவிச் சென்று விடுகின்றன என்றும் கருதி வந்தார்கள். இத் துகள்கள் பொருள்களின்மீது மோதும்போது ரப்பர்ப் பந்தைப் போல நெகிழ்ச்சி வன்மையால் பிரதி பலிக்கப் படுகின்றன என்றும், பொருள்களை ஊடுருவிச்செல்லும்போது அவற்றின் அணுக்களால் கவரப்படுகின்றன. ஆதலால்தான் அவை நுழைந்த திசைக்குசற்று விலகிச் செல்லுகின்றன என்றும் இவ்வாறாக ஒளி பிரதிபலனத்திற்கும் (Reflection) ஒளிக் கோட்டத்திற்கும் (Refraction) காரணம் கூறினார்கள். இது உண்மையாய் இருக்கும் பக்ஷத்தில் தண்ணீரில் ஊடுருவிச் செல்லும்போது ஒளி அதிக வேகத்துடன் செல்ல வேண்டுமென்று ஏற்பட்டது. அதாவது ஒளியின் கதி வெற்றிடத்தில் இருப்பதைவிட அதிகமாக தண்ணீரில் இருக்க வேண்டுமென்று ஏற்பட்டது.

சோதனை செய்து பார்த்தால் உண்மை தெரிந்து விடுகிறது என்று நினைத்து தண்ணீரில் ஒளியின் கதியை அளந்தார்கள். ஒளி வெற்றிடத்தில் செல்லுவதைவிட சற்று தாமதமாகவே தண்ணீரில் செல்லுவது தெரிய வந்தது. எனவே ஒளிக்கிரணங்கள் சிறிய துகள்களின் பாதையாக இருக்க முடியாது என்று ஐயம் உண்டாயிற்று. வேறு சில ஒளி நிகழ்ச்சிகளைக் கண்டார்கள். துகள்களைக் கொண்டு அவற்றுக்குக் காரணம் கூறமுடியவில்லை. அவற்றில் ஒன்று

நியூட்டன் (Newton) கண்டு பிடித்த ஒளி வளையங்கள். ஒரு கண்ணாடிச் சில்லின்மீது மற்றொரு கண்ணாடி வில்லையை வைத்து மஞ்சள் ஒளியில் பார்த்தபோது அதன்மீது ஒளியும் இருளும் மாறி மாறி வட்டங்களாகத் தோன்றுவதைக் கவனித்தார். மஞ்சள் ஒளியில் சோதிக்காமல், வெள்ளொளியில் சோதிக்கும்போது பல வர்ண ஒளி வட்டங்கள் தோன்றுவதைப் பார்த்தார். நீரில் சிறிது எண்ணெ விழுந்தவுடன் பல வர்ணங்கள் தோன்றுவதைப் போல இங்கும் தென்படுவதை நியூட்டன் கண்டார். இதற்குக் காரணம் துகள்களைக் கொண்டு சொல்ல முடியவில்லை. இது இவ்வாறு இருக்க எங் (Young) என்ற விஞ்ஞானி மற்றொரு ஒளி நிகழ்ச்சியை கண்டார். ஒளியையும், ஒளியையும் சேர்க்கும்போது இருள் உண்டாவதை இவர் கண்டார். ஒளிக் கிரணங்கள் துகள் துகளாக இருக்குமானால் துகள்களையும் துகள்களையும் சேர்க்க அதிக துகள்கள் அல்லவா கிடைக்க வேண்டும்.

துகள்களே இல்லாமல் எவ்வாறு ஆகமுடியும் என்று இவர் கேட்டார். எனவே ஒளிக்கிரணங்கள் துகள்களின் பாதையாக இருக்க முடியாது. அலைகளின் பாதையாகத்தான் இருக்கமுடியும் என்று கூறினார். இதற்கு ஒலி நிகழ்ச்சி ஒன்றிலிருந்து ஓர் உதாரணத்தையும் காட்டினார். ஒரே சுருதியுள்ள ஒலி அலைகளைச் சேர்க்கும்போது ஒலி மறைந்து விடுவதுண்டு. ஒலியைப்போல ஒளியும் அலைகளானால் ஒளி அலைகள் வளைந்து செல்ல வேண்டுமே, அவ்வாறில்லாமல் நேர் கோடுகளில் அல்லவா செல்லுகின்றன என்று சிலர் கேட்கலானார்கள். அதாவது ஒளிக்கும் நிழல் இருக்க முடியாது என்று ஏற்பட்டது. இதைச் சற்று விளக்குவோம். ஒலி தோன்றுமிடத்திற்கும் நமக்கும் இடையே ஒரு சுவர் இருந்தாலும், சுவரைத் தாண்டி கொண்டு ஒலி அலைகள் வளைந்து நம் காதில் விழுகின்றன. ஆனால் ஒரு சந்தின் வழியே வரும் ஒளியின் பாதையில் சந்தைவிட சிறிய பொருளைக் குறுக்கிட்டால் அதற்கு மேலும் கீழும் ஒளிக் கிரணங்கள் நேரே செல்லுவதையும் அப்பொருளின் பின் நிழல் விழுவதையும் பார்க்கிறோம். ஒலியைப்போல ஒளியும் அலைகளாக இருக்குமானால் பொருளின் பின்புறத்திலுள்ள நிழலிலும் ஒளி பரவ வேண்டுமே என்று விஞ்ஞானிகள் சந்தேகித்தார்கள். மிக நுட்பமான கருவிகளைக் கொண்டு சோதனை செய்து பார்க்கும்போது அப்பொருளின் பின்புறப் பிரதேசம் முழுதும் நிழலாயில்லாமல் அந்நிழலின் ஓரங்களில் நிழலுக்குள்ளும் ஒளிபரவியுள்ளதைக் கண்டார்கள். இவ்வாறு ஒளி நுழைந்துள்ள இடம் அங்குலத்தில் ஆயிரத்திலொரு பங்கைவிடக் குறைவாக இருப்பதினால் ஒளி படர்ந்த நிழல் பாகம் நமக்கு தெரியாமற் போயிற்று என்றும் நுட்பமான கருவிகளைக் கொண்டு நிழலைப் பரிசோதித்தால்தான் அது தென்படுகிறது என்றும் காட்டினார்கள். ஒலி அலைகளைவிட ஒளி அலைகள் பல மடங்கு சிறியனவாக இருப்பதினால்தான் ஒளி நேர் கோடுகளில் வருவதுபோலத் தோன்றுகிறது என்றும் காரணம் கூறினார்கள்.

ஒலியைப் போல ஒளியும் அலைகளானால் ஒலி பரவுவதற்குப் பொருள் வேண்டியிருப்பது போல ஒளி பரவுவதற்கும் பொருள் வேண்டுமென்று ஏற்பட்டது. அதாவது ஒலி காற்

றின் மூலமாகவோ தண்ணீரின் மூலமாகவோ அல்லது கட்டிப் பொருளின் மூலமாகவோதான் பரவும். வெற்றிடத்தில் ஒலி அலைகள் பரவிச் செல்ல மாட்டாது. ஆனால் ஒளி வெற்றிடத்திலும் செல்லுகிறது. ஒளி அலைகள் பரவுவதற்கு விசும்பு (Ether) என்னும் மிகமிக நுண்ணிய பொருள் ஒன்று எங்கும் வியாபித்து இருக்க வேண்டுமென்று கருதினார்கள். இப்பொருள் தன் மூலம் ஒளி அலைகளை அனுப்புவதற்காக விசித்திரமான பண்புகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று ஏற்பட்டது. ஒளி அலைகள் வெகு வேகமாகச் செல்லுவதினால் விசும்பின் நெளிவு (Density) காற்றைவிட மிகமிகக் குறைவாக இருக்க வேண்டுமென்றும் இதன் நெகிழ்ச்சி வன்மை (Elasticity) எஃகைவிட பல மடங்கு அதிகமாக இருக்க வேண்டுமென்றும் ஏற்பட்டது. ஒரே சமயத்தில் கெட்டியாயும் லேசாயும் உள்ள இவ்விசித்திர பொருள் உண்மையில் இருக்கின்றதா என்று சோதனை செய்து பார்க்கலானார்கள். மைக்கேல்ஸன் (Michaelson) என்ற அமெரிக்க தேசத்து விஞ்ஞானி இவ் விசித்திரப் பொருள் இருக்க முடியாது என்று நிரூபித்துக் காட்டினார். இப்பொருள் இல்லை என்றால் ஒளி அலைகளாக இருக்க முடியாதே என்று விஞ்ஞானிகள் திகைத்துப் போனார்கள்.

இச்சங்கடத்தை மாக்ஸ்வெல் (Maxwell) என்ற ஆங்கில விஞ்ஞானி நிவர்த்தி செய்தார். இவர் கணக்கியலாகவே மின்காந்த அலைகள் (Electromagnet waves) என்ற ஓர் வகை அலைகள் இருக்க வேண்டுமென்றும் அவை செல்லுமிடங்களில் மின்சக்தி காந்த சக்தி இரண்டும் எப்பொழுதும் தோன்ற வேண்டும் என்றும் காட்டினார். மேலும் இத்தகைய அலைகள் ஒளி செல்லும் வேகத்துடன் செல்ல வேண்டுமென்றும் சொன்னார். இவர் கூறியது உண்மைதானா என்று "ஹெர்ட்ஸ்" என்ற ஜெர்மனி தேசத்து விஞ்ஞானி பரிசோதனை செய்து பார்க்கும்போது அவை இருப்பதையும் அவை ஒளி செல்லும் கதியுடன் செல்வதையும் கண்டார். உடனே இவ்வலைகளைக் கொண்டு அயல் நாடுகளுக்கு சமாசாரத்தை அனுப்புவதற்கு சாதனங்களைக் கண்டுபிடித்தார்கள். ஆங்காங்கே ரேடியோ நிலையங்கள் ஏற்பட்டன. இப்புது வகை மின்காந்த அலைகள் பரவிச் செல்வதற்குப் பொருள் ஒன்றும் வேண்டியதில்லை. வெற்றிடத்திலும் இவை செல்லும். உடனே ஒளி அலைகள் இம்மின்காந்த அலைகளின் வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். வேறு சில ஒளி நிகழ்ச்சிகளும் இம்முடிவை ஊர்ஜிதப் படுத்தின.

ஒளியை மின்புலத்தின் (Electric field) மூலமாகவோ அல்லது காந்தப்புலத்தின் (Magnectic field) மூலமாகவோ செலுத்தினால் அதன் தன்மை குன்றி விடுவதை பாரடே (Faraday), ஜீமான் (Zeeman) என்ற விஞ்ஞானிகள் கண்டார்கள். ஒளி மின்காந்த இயல்பு கொண்டிராவிட்டால் இம்மாதிரி ஏற்படாது என்று கூறினார்கள். ஒளி, மின்சாரம், காந்தம் எல்லாம் தொடர்பு வாய்ந்தவையே என்று தெரிய வந்தது. ஒளி அலைகள் மட்டும் அல்லாமல் வெப்ப கிரணங்கள், எக்ஸ் கிரணங்கள், காமா கிரணங்கள் (Gamma rays) முதலிய எல்லா வகை கிரணங்களும் மின்காந்த அலைகள் தான் என்று நிரூபிக்கப்பட்டது.

அலைகளில் நீளமான அலைகளும் உண்டு. ரேடியோ மூலம் அயல் நாடுகளுக்கு சமாசாரம் அனுப்பு வதற்கு உபயோகப்படும் மின் காந்த அலைகளின் நீளம் அடிக் கணக்கில் இருக்கும். சமீபத்தில் அங்குலத்தில் இருபத்தைந்தில் ஒரு பங்கு நீளமுள்ள ரேடியோ சிற் றலைகளையும் கண்டு பிடித்து விட் டார்கள். இரண்டாவது உலகப் போரின் நிமித்தம் பிரபலமடைந்த விஞ்ஞான சாதனங்களுள் ஒன்று கிய ரேடாரில் (Radar) இம்மிகக் குறுகிய அலைகள் தான் பயன் படு கின்றன. இவ்வலைகளைக்கொண்டு கடலிலுள்ள கப்பல்கள், பனி மலைகள், வானத்திலுள்ள விமா னங்கள் முதலியவற்றின் இருப் பிடத்தை அவைகளினுதவியின் றியே அறிந்து வருகின்றார்கள்.

ஒளி அலைகளின் நீளம் ரேடியோ அலைகளின் நீளத்தைவிட மிகச் சிறியது. பல நிற ஒளிகளும், பல வேறு நீளமுடைய அலைகளாகும். சிவப்பு ஒளி அலையின் நீளம் அங் குலத்தில் முப்பதினாயிரத்தில் ஓர் பங்கு இருப்பதையும் ஊதா ஒளி அலையின் நீளம் அங்குலத்தில் அறு பதினாயிரத்தில் ஓர் பங்கு இருப்ப தையும் கண்டார்கள். இவ்விரண் டிற்கும் இடையே மற்ற நிற ஒளி அலைகளின் நீளங்கள் அமைந்திருக் கின்றன. சூட்டலைகள் சிவப்பு நிற ஒளி அலைகளின் நீளத்தைவிட அதிகமான நீளம் கொண்டிருப் பதைப் பார்த்தார்கள். ஆஸ்பத்திரி களில் பயன்படும் எக்ஸ் கிரணங் களின் அலைகளின் நீளம் சாதாரண மாக அங்குலத்தில் கோடியில் ஓர் பங்கு இருப்பது தெரிந்தது. இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரேடி யம் (Radium) என்று ஒரு கதிரி யக்கப் பொருளை (Radio actiye Substance) கண்டு பிடித்தார்கள். இது ஓயாது பல வகைக் கிரணங் களை வீசிக்கொண்டிருக்கும் இயல் பானது. அக்கிரணங்களில் ஒன் றுண் காமா கிரணங்களும் (Gamma rays) மின் காந்த அலை களே என்று கண்டார்கள். இவ் வலைகளின் நீளம் சாதாரணமாக அங்குலத்தில் முன்னூறு கோடி யில் ஓர் பங்காக இருப்பதை அறிந் தார்கள். இவ்வாறாக எல்லா அலை களும் தொடர்ச்சியாக அமைந் திருப்பதையும் அவை எல்லாம் செகண்டுக்கு நூற்று எண்பத்தா றாயிரத்து முன்னூறு மைல் வீதம் பரவுவதையும் உணர்ந்தார்கள். சிவப்பு முதல் ஊதா வரை உள்ள மின்காந்த அலைகளைத் தவிர மற்ற எல்லா மின்காந்த அலைகளும் கண் ணுக்குப் புலனாகாது. தக்க கருவி களைக் கொண்டுதான் அவற்றை அறிய முடியும்.

ஒளியின் மூலகாரணத்தை ஆரா யும்போது அது பொருள்களின் அணுக்களிலிருந்து வெளிப்படு வது தெரியவந்தது. எல்லாப் பொருள்களும் கோடிக்கணக் கான அணுக்களால் ஆனவை என் பது நெடு நாட்களுக்கு முன்பே தெரிந்த விஷயம். அணுவுக்குள் ளும் ஓர் அமைப்பு இருப்பது சமீ பத்தில்தான் தெரியவந்தது. ஒவ் வொரு அணுவின் நடுவிலும் பர மாணு (Proton) என்னும் மிகை மின்சாரம் ஏற்றுள்ள பாகம் சிலந்தி தன் வலையின் நடுவே இருப் பதுபோல இருப்பது தெரிய வந் தது. இதைச் சுற்றி வேறு துகள் கள் இருப்பதையும் அவை எல் லாம் குறை மின்சாரத்தை ஏற்று மிக மிகக்குறைவான எடையுடன் இருப்பதையும் கண்டார்கள். இவற்றுக்கு மின்னுருக்கள் (Electrons) என்று பெயர். உல கில் தொண்ணூற்றிரண்டு தனிப் பொருள்கள் (Elements) தான் உண்டு. அவற்றின் அணுக்களில்

நடு முதலைச் சுற்றி ஒன்று முதல் தொண்ணூற்றிரண்டு வரை மின்னுருக்கள் ஓடிவருவது தெரிய வந்தது. வெங்காயத்தை சூழ்ந்து பல்வேறு மூடிகள் இருப்பது போல நடுமுதலைச் சுற்றி பல அடுக்குகளில் இம்மின்னுருக்கள் ஓடி வருகின்றன. பொருளின் தன்மைக்குத் தகுந்தவாறு பல அடுக்குகளில் ஓடிவரும் மின்னுருக்குகள் அமைவதைப் பார்த்தார்கள். மின்னுருக்கள் ஒரு அடுக்கிலிருந்து மற்றொரு அடுக்குக்குத் தாவும்போதுதான் ஒளி உண்டாகிறது என்று அறிந்தார்கள்.


ஒளிக்கு மூலகாரணத்தை அறிய செய்த ஆராய்ச்சிகள், ஒளி அலைகள் என்பது முற்றிலும் உண்மை அல்ல என்று காட்டின. அணுவினுள் மின்னுருக்கள் ஒரு அடுக்கிலிருந்து மற்றொரு அடுக்குக்குத்தாவும்போது ஒளிதொடர்ந்து வெளிப்படாமல் தொடர்பற்று வெளிவருவது தெரிய வந்தது. அலை இயக்கமானல் ஒளி தொடர்ந்து வெளிப்பட வேண்டும். எனவே இம்முடிவு அலை இயக்கத்திற்கு முரணுக விருக்கிறது. ஒளி பொருண்மையான துகள்போன்று இருந்தாலன்றி தொடர்பற்று வெளிப்பட முடியாது. எனவே ஒளி கிரணங்கள் துகள்களின் பாதை என்று முதன் முதலில் மேற்கொண்ட கொள்கைக்கு மறுபடியும் வந்தார்கள். இதை ஊர்ஜிதப் படுத்தியது மற்றொரு ஒளி நிகழ்ச்சி. ஸோடியம் (Sodium), பொடாஸியம் Potassium) என்று இரண்டு உலோகங்கள் உண்டு. அவற்றின்மீது ஊதா ஒளிக்கும் குறைவான அலை நீளமுள்ள ஒளி விழும்போது மின்னுருக்கள் வெளிப்படுவதைப் பார்த்தார்கள். உலோகத்தின் அணுக்களிலிருந்து இம்மின்னுருக்கள் வெளிவருவது தெரிய வந்தது.

இவை எவ்வாறு வெளிப்படுகின்றன என்று ஆராய்ந்து பார்த்த போது ஒளியின் பொருண்மை குணம் வெளிப்பட்டது. ஒளிக் கிரணங்கள் துகள்களின் பாதை தான் என்று இந்நிகழ்ச்சி ஐயந்திரிபு அன்னியில் எடுத்துக் காட்டியது. எனவே ஒளிக்கு இரண்டு குணங்களும் இருப்பதாக முடிவு கட்டினர்கள். ஒளி ஒரோரமயம் அலைபோன்றும் மற்ருேரமயம் துகள்போன்றும் ஒழுகுவதாகக் கூறினர்கள். அலை நீளம் குறைவாக உள்ள ஒளிக்குத்தான் இத்துகள் பண்பு அதிகமிருப்பது தெரிய வந்தது. அறவே வேருன இரண்டு தன்மைகளும் ஒளியோட்டத்துக்கு இருப்பதுதான் விஞ்ஞானிகள் கண்ட விசித்திரம்.



# கண்வளராய்!

'விசாகன்'



புன்னுகவராளி                                        ஆதி.

கண்வளராய் நீ கண்வளராய் - என்
காதலின் வடிவே! கண்வளராய் (கண்)

தென்றலும் நறுமண மலரினில் திளைத்தே
தீங்குழல் இசையுடன் தவழ
ஒன்றியே தாமரை மலரினில் உறங்கிடும்
ஒயில்நிறை அன்னமாய் உறங்காய்! (கண்)

பொற்சிமிழ் எனவே பொலியுமுன் இமையுள்
புதுமணிக் கண்களை மூடி
நற்றவப் பயனுல் நான்மகிழ் செல்வமே!
நல்லிசைக் குயிலே, துயில்வாய்! (கண்)

கள்ள விழிகளில் கவிதைகள் பேசியென்
கருத்தினில் நிறைந்திடும் கனியே!
பிள்ளைக் கலியினைத் தீர்த்திடப் பிறந்த
பேசும் பொன் ஓவிய உருவே! (கண்)

★

# கலையும் கலைஞனும்

எம். எஸ். ஹமீத்

கதாசிரியன் நாசூக்கான மனப் பக்குவம் பெற்றவன் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அவன் காணும் முடிவு, வெற்றி அல்லது வாழ்க்கையின் அனுபவம், அவனைப் பைத்தியத்தின் பூரணத் தன்மையை அடையச் செய்கிறது. உலகத்தினர் கண்களுக்கு அவன் சாதாரணமானவனாகவோ நாசூக்கானவனாகவோ காட்சியளிக்கிறான். அவனுடைய கதைகளிலிருந்து எவ்வளவு குதூகலம் கொள்ளுகிறோம்? சில சமயங்களில் மனதுடன் மனம் உராயும் போது, உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் பெருகுகிறதே!

ஆம், எனக்குக் கூட இதயம் இருக்கிறது. நான் அவனுடைய சின்னஞ் சிறிய மனப் பூங்காவனம் நாசமடைவதைப் பார்த்திருக்கிறேன். இப்போது அவன் இதயத்திலிருப்பது தான் என்ன? — துக்கம், பொறாமை, துடி துடிக்கச் செய்யும் மறையாத ஒரு பிளவு! அவன் கலைஞன்!

ஒரு சிறிய இருட்டறையில் அவன் அமர்ந்திருந்தான். ஒரு மூலையில் அகல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. சில ஓலைகளும் எழுத்தாணியும் ஒரு பெட்டியின் மேல் கிடந்தன. இதய எண்ணங்களை ஓலையில் மின்னல்களாகப் பரிமளிக்க வைக்கும் அவன் திகில் கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

ஒரு ஜோதி அவன் சமீபமாக வந்து கொண்டிருந்தது. கலைஞன் மனம் கலங்கினான். அது ரொம்ப சமீபத்தில் வந்து அவன் எதிரே நின்றது! அதைப் பார்த்தபோது அவனுக்குப் பாட்டி சொன்ன அலங்காரமான பயங்கர மந்திரக் கதைகள் நினைவிற்கு வந்தன. பாட்டிகளின் கற்பனையில் உதித்த ராணிகளைப் போலவே அவளும் இருந்தாள்! அவளது கேசம் ஸ்வர்ணமயமாக இருந்தது. நடையில் ஒரு வித நளினமும், அவளது போக்கில் போதை தரக்கூடிய ஒரு புரட்சியும் மிளிர்ந்து கொண்டிருந்தன.

அவன் உலகை மறந்து அந்த ஒளி மங்கையின் அழகில் ஐக்கியமானான். அவனது சாந்தமயமான இருதய சமுத்திரத்தில் புயல் வீச ஆரம்பித்தது. வாழ்க்கையில் முதல் தடவையாக அந்த யுவதியின் சௌந்தரியத்தில் மூழ்கினான். அவனுடைய இதயத்தில் நாசூக்

கான மனோவேகம் வேகமான நீரோட்டம் போல் பாய்ந்தோட ஆரம்பித்தது. அவன் தன்னை மறந்திருந்தான். பொன்னிறமான கேச ஜாலம் மின்னியது, "அவள் அவனுடைய இதய ராணி!

கற்பனை லோகம் எவ்வளவு மனோ ரம்யமானதாக இருக்கிறது!... ஆனால், அவன் மனம் கலங்கியிருந்தான். 'எங்கிருந்து இந்த ராணி வந்தாள்' என்பது அவனுக்கு விளங்கவில்லை. அது ஒரு புதிராக இருந்தது. எவ்வளவு தான் முயன்றும் இந்தச் சிக்கலை அவனால் தெளிவு படுத்திக் கொள்ள முடியவில்லை. மனவேதனை யடைந்து எழுந்தான். உலாவிக் கொண்டே சிந்தித்தான். அவளைக் கண்டு சிறிது கலவரமடைந்த போதிலும் அதில் ஏதோ ஒரு இன்பம் இருப்பதை உணர்ந்தான். கலைஞனின் முகபாவத்திலிருந்து கலா தேவி அவன் உள்ளத்தை ஊகித்து அறிந்து கொண்டாள். அவளது அழகிய வதனத்தில் புன்னகை அரும்பியது. கலைஞன் தன்னைச் சமாளித்துக் கொண்டு அந்த ஒளி மங்கையைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான்.

"கலை!"

"கலை என்றால்?"

ஜோதி மாது சிரித்துக் கொண்டு "உன்னுடைய கலை!" என்று சொன்னாள்.

"என்னுடைய கலையா?"

"ஆம்."

"எப்படி?"

"நீ கலைக்கு அவசியமானவன்."

"நானா?"

"ஆம்! நான் உன்னை ஆசீர்வதிப்பேன். நீ உலகத்தில் அமர கலைஞனாக மதிக்கப்படுவாய். இதற்குப் பிரதியாக உன் அன்பை எனக்குத் தானம் செய்தால் போதும்!"

"ஆனால்...... நான் உன்னை அழைக்கவில்லையே?"

"இது எனக்குத் தெரியும்!...... நான் விரும்பாதவர்கள் என்னை அழைத்தாலும் போக மாட்டேன்."

"அப்படியானால் நீ போய் விடுவாயா?"

ஜோதி மாது "ஊஹூம்" என்று சொல்லித் தலையசைத்தாள். அவள் முகம் மலர்ந்தது. மேகத்தில் மின்னலின் ஒரு ரேகை மின்னி மறைந்தது.

"கலா!"

"ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

"ஆம்!"

"சொல்லு!"

"நீ நாருக்கான மனப்பான்மை கொண்ட இதயத்தைப் போல் மிருதுவானவளா?"

"இருக்கலாம்!"

"உனது கண்கள் ரோஜாவைப் போல் சிவந்திருக்கின்றன. இடையோ சிறிய கொடியைப் போல் மெலிந்திருக்கிறது. உனது குரலில் வீணையின் இனிய ஸ்வரம் தொனிக்கிறது. உன் கால் சலங்கையில்......"

கலைஞன் திடுக்கிட்டான். ஜோதி மாது மெள்ள அறையை விட்டு வெளியேற முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

"இது என்ன! போகிறாயா கலா?"

"ஆம்!"

"ஏன்?"

"நீங்கள் தான் பேசிக்கொண்டிருந்தீர்களே!"

"நான்............ இல்லை!"

கலாதேவி மௌனமாக நின்றாள். கலைஞன் அவள் சமீபமாகச் சென்று, "நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்பாயா கலா?" என்று கெஞ்சுதலாய்க் கேட்டான்.

கலாதேவியின் கண்களில் யுவன் நர்த்தனம் செய்து கொண்டிருந்தான். அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். தன்னை மறந்து நின்ற கலாவின் தேகம் வியர்த்து நடுங்கிக் கொண்டிருந்தது. என்ன காரணத்தாலோ யுவனும் நடுங்கிக் கொண்டிருந்தான். கலாதேவி லேசாக அசைந்து நகர ஆரம்பித்தாள்.

"கலா!"

அவள் பேசவில்லை. மெதுவாகப் போய்க் கொண்டிருந்தாள். கலைஞன் விரைவாகச் சென்று அவளுடைய முந்தாணியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"கலா! நீ என்னை விட்டுப் பிரியமாட்டாயே; சொல்லு!"

கலாவின் வதனத்தில் லேசாகப் புன்னகை பூத்தது. இதைக் கண்டதும் கலைஞனின் மனம் குளிர்ந்தது. ஆம், அவனுடைய ஆசை நிறைவேறி விடும். அவனது விருப்பங்கள் பூர்த்தியாகி விடும். அவனுடைய ஸ்வப்பன லோகத்தின் சௌந்தர்யவதி, லட்சிய சுந்தரி கிடைத்து விட்டாள்! அன்றிலிருந்து அவள் அவனுடன் அந்த இடத்தில் தங்க ஆரம்பித்தாள்.

ஒரு தினம் கலாதேவியும், கலைஞனும் உல்லாசமாய் அமர்ந்திருக்கும் போது, "ஒரு கதை சொல்லட்டுமா?" என்று கலைஞன் கேட்டான்.

"சொல்லு, கேட்கிறேன்!" என்று ஆவலுடன் சொல்லி விட்டு கலாதேவி கதை கேட்கத் தயாரானாள். அவன் சொல்ல ஆரம்பித்தான். அது அற்புதமான உண்மைக் கதை! கலாதேவி மெய்ம் மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

★

அது சுவர்ணமயமான தேசமாக இருந்தது. உலகம் அதைப் பொன்னிறமான பறவை என்று பெருமையாக அழைத்துக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் இமாலயத்தின் சிகரத்தில் சந்திர கிரணங்கள் விழுந்து துள்ளிக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் சமுத்திர அலைகளின் மேல் மெல்லிய தென்றல் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. சமுத்திரம் பாராக்காரனாகவும், தென்றல் சிப்பாயாகவும், இமாலயம் அரசனாகவும் அந்த தேசத்தை ஆண்டு வந்தன. அது சுதந்திர ராஜ்யம். நதிகள் புதிய சங்கீதத்தின் பற்றுதலில் போதையுண்டவை போல், கர்வத்துடன் தள்ளாடிப் பாய்ந்து கொண்டிருந்தன.

அங்கே ஒரு யுவதி வசித்துக் கொண்டிருந்தாள். மலைச் சிகரத்தின் மேலுள்ள ஒரு குகையில் அவள் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய இதயம் ஆநந்தத்தால்

எக்களித்துக் கொண்டிருந்தது. அவள் அப்போது தான் யௌவனப் பருவத்தில் நுழைந்து புது அழகு பெற்று மலர்ந்திருந்தாள். அவள் பெயர் 'பனிமாது'.

மனதிலுள்ள உல்லாசத்தால் துள்ளிக் குதித்துக் கொண்டு, அருமையான கீதங்களை மெதுவாகப் பாடியவாறு அவள் குகையை விட்டு வெளியே வந்தாள். அவளுடைய சகோதரன் சந்திரன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எப்போதும் சுகமாகக் காலங் கழிப்பவன். மிகவும் குளிர்ந்த சுபாவமுள்ளவன். பனிமாது சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். அடர்ந்து வளர்ந்த மரங்களும், மலையின் மீதிருந்து வெள்ளிக் கம்பிகளைப் போல் விழுந்து கொண்டிருக்கும் நீர் வீழ்ச்சிகளின் தோற்றமும் அவள் உள்ளத்தை நிரப்பின. பூமியின் மீது வெண்மையான துணி விரித்தது போல் பனி படிந்து இருந்தது. இதைப் பார்த்ததும் அவள் மேலும் குதூகலம் கொண்டு, "ஆஹா! எவ்வளவு அழகாக இருக்கிறாள் என்னுடைய பூமி தேவி" என்று வாய் விட்டுச் சொன்னாள்.

"அதைவிட நீ எவ்வளவு சுந்தரமானவளாக இருக்கிறாய்!" வான வெளியினின்றும் ஒரு குரல் ஒலித்தது. சந்திரனின் பிரகாசம் பொருந்திய கதிர் ஒன்று பனி மாதின் சரீரத்தில் ஒளி வீசிச் சென்றது. சந்திரன் நகைத்தான்.

"சகோதரா! நான் எல்லாப் பக்கங்களிலும் சுற்றித் திரிந்து வந்தேன். ஆனால் மேற்குப் பக்கத்திற்கு நான் போனதே இல்லை. அந்த தேசம் எப்படியிருக்கும்? என்னை நீ அங்கு ஏன் போகவிட மறுக்கிறாய்?"

"சகோதரி, உனக்கு ஒன்றும் தெரியாது. அந்த ஜனங்களே வேறு மாதிரி. அவர்கள் வஞ்சகர்கள், கபடர்கள், தயையற்ற மூர்க்கர்கள்! தர்மத்தை மதிக்காத கல்மனம் கொண்டவர்கள்!"

"இல்லை சகோதரா, அப்படிச் சொல்லாதே. அங்கும் பறவைகள் பாடிக் கொண்டிருக்கும். புஷ்பங்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கும்!"

"எனக்குத் தெரியுமே, நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டாய்!"

"சகோதரா! ஒரு தடவை நீ என்னை அங்கு கூட்டிக் கொண்டு போக மாட்டாயா?"

"அமரலோகம் போய் விடுவாய்! அந்த ஜனங்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்!"

"நான் அவர்களுக்கு விரோதியா என்ன? அவர்கள் என்னை எதற்காக அண்ணா வஞ்சிக்கின்றனர்?"

"ஆனால் அவர்களுக்கு உன் மீது தயை ஏற்படும் என்பதற்கு என்ன காரணம் இருக்கிறது? அவர்கள் வியாபாரிகள். உன்னிடமிருந்து ஏதாவது லாபமடையப் பார்ப்பார்கள். நீ கொடுத்து விடுவாயோ?"

"அப்படியானால் நான் கல் மாதிரி நெஞ்சைக் கெட்டி செய்து கொண்டு விடுவேன். கொடுமையானவளாக மாறி விடுவேன், ஆமாம்!"

"உனக்குத் தெரியாது. நீ உஷ்ணத்தைக் கண்டதும் உருகிப் போய் விடுவாய்! கம்பீரத்தைக் கண்டதும் கரைந்து விடுவாய்! இனிமையைக் கண்டதும் இளகி

விடுவாய்!"— இதைச் சொல்லி விட்டுச் சந்திரன் மௌனமானான். கொஞ்ச நேரத்தில் மேகக் கூட்டத்திற்குள் சென்று மறைந்து விட்டான். பனிமாது சிறிது வாட்டமுற்று குகைக்குத் திரும்பினாள்.

இரண்டாவது தினம். அவளுடைய கண்கள் மலர்ந்தன. எதிரே கொஞ்ச தூரத்தில் நின்றிருந்த கூட்டத்தையும் இரைச்சலையும் கேட்டதும் திகில் கொண்டு, "இதென்ன சத்தம் — என்ன கூட்டம்?" என்று கேட்டாள்.

இரண்டு சிப்பாய்கள் வந்து பயபக்தியுடன் வணக்கம் செய்து சொன்னார்கள்.

"ராஜகுமாரி! இங்கு அன்னிய தேசத்தைச் சேர்ந்த திருடன் ஒருவன் இருக்கிறான். தலை மறைவாக இதுவரை திரிந்து கொண்டிருந்தான். எங்களுக்கு சம்சயம் ஏற்பட்டுப் பிடித்து வைத்திருக்கிறோம்."

"எந்த தேசத்தவன்?"

"மேற்கத்தியவன் போலிருக்கிறது, ராஜகுமாரி!"

"மேற்கத்தியானா!" — ராஜகுமாரி கொஞ்சம் திகைத்து, "அவனை இங்கு கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டாள்.

சிப்பாய்கள் அவனை ராஜகுமாரியின் முன் கொண்டு வந்து நிறுத்தினர். ராஜகுமாரி பார்த்தாள். வெண்ணிறமான தேகம். சந்திரனைப் போல் சுந்தரமானவன். ஆனால் அவளுடைய சகோதரன் மிருதுவானவன். இவனோ கொடுமையானவனாகக் காட்சியளித்தான்.

"நீ ஏன் இந்த மாதிரி திருட்டுத்தனமாய் அலைந்து கொண்டிருந்தாய்? இங்கு நீ எப்படி வந்தாய்?" என்று ராஜகுமாரி கேட்டாள்.

"ஆம், திருட்டுத் தனமாய்த்தான் வந்தேன்!"

"அரசரின் அனுமதியின்றி நீ இந்த தேசத்திற்குள் ஏன் பிரவேசித்தாய்? திருட்டுத் தனத்தின் முடிவு என்ன தெரியுமா? — மரணம்!"

"ஆனால் நான் உங்கள் அதிதி தானே?...... என்னைக் கொல்வது பாபமல்லவா?" அவன் நடுங்கிக் கொண்டே சொன்னான். ராஜகுமாரி சிரித்துக் கொண்டே, "உன் விருப்பம் யாது?" என்று வினவினாள். பனிமாதின் நிலையுணர்ந்து அன்னியன் கொஞ்சம் மனம் தேறினான். அவன் ஒரு சிறு பெட்டியைக் கையிலிருந்து கீழே நழுவ விட்டான். அதற்குள்ளிருந்து விலையுயர்ந்த ரத்தினங்களும் வைரக் கற்களும் விழுந்து தரையில் சிதறின. ராஜகுமாரி வியப் பெய்தினாள்.

"நான் கேட்கிறேன், ஏன் பதில் இல்லை!— உன் விருப்பம் யாது?" என்று மறுமுறையும் பனிமாது கேட்டாள்.

"ஒரு வரம் தருவீர்களா?"

"சொல்லு, என்ன வரம் வேண்டும்?"

"நான் இந்த தேசத்தில் வியாபாரம் செய்ய விரும்புகிறேன். உத்தரவு கொடுங்கள்."

ராஜகுமாரி கொஞ்ச நேரம் யோசித்தாள். அவள் மனம் கலங்கியது. சமாளித்துக் கொண்டு, "நல்லது, நீ நாளைக்

காலையில் ராஜ தர்பாரில் ஆஜராக வேண்டும்!" என்றாள்.

"ஆனால் ராஜகுமாரி......"

"பயப்படாதே!...... இவனைக் கூட்டிக் கொண்டு போங்கள். நீ இன்றிலிருந்து எங்கும் திரியலாம்!"

அன்னியன் குனிந்து மூன்று முறை வணக்கம் செய்து விட்டு, சிப்பாய்களுடன் அதிதி பவனத்திற்குச் சென்றான்.

ராஜகுமாரி ஏகாந்தமாய் அமர்ந்து யோசனை செய்து கொண்டிருந்தாள். அப்போது தான் சந்திரன் வந்தான்.

"சகோதரி! நீ என்ன வேலை செய்தாய்!"

"என்ன செய்து விட்டேன்?"

"நீ அவன் வியாபாரம் செய்து கொள்ளுவதற்கு அனுமதி கொடுத்து விட்டாயல்லவா?"

"ஆம் சகோதரா!"

"இது நடக்கக் கூடிய காரியமா? தந்தையின் உத்திரவின்றி நாம் அனுமதி கொடுப்பது சரியா?"

"ஆமாம் சகோதரா! ஆனால்... நான் வாக்குக் கொடுத்து விட்டேனே?"

"இது எனக்குத் தெரியும்!" சந்திரனின் முகம் வாடியது.

"அப்படியானால் நான் பிராணத் தியாகம் செய்து கொள்ளவா?" — என்று பனிமாது சோகம் நிறைந்த குரலில் கேட்டாள். அவளுடைய கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தது. சந்திரன் சகோதரியின் மீது கொண்டிருந்த அன்பு மிகுதியால் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தள்ளாடினான். பனிமாது உருகிய வண்ணம் நின்றிருந்தாள். சந்திரன் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "சகோதரி! எப்படியாவது பிதாவை இதற்குச் சம்மதிக்கச் செய்ய வேண்டும்" என்று சொல்லி மறைந்தான்.

தர்பார் கூடியது.

ராஜா, "எங்கே அந்த விதேசி?" என்றார். ராஜாவின் முன்பு அன்னிய தேசத்தைச் சேர்ந்த அந்த வியாபாரி கொண்டு வரப்பட்டான். அவன் ராஜாவை வணங்கி ஒரு ஓரமாய் நின்றான்.

"நீ என்ன விரும்புகிறாய்?" என்று ராஜா அவனைப் பார்த்துக் கேட்டார். அவன் "மஹராஜ்!" என்று சொல்லி நடுங்கிக் கொண்டே ஒரு ஓலையை ராஜாவின் கையில் கொடுத்தான். அது விண்ணப்ப பத்திரம்! அதை மந்திரி படித்துக் காட்டினார். ராஜா சிறிது நேரம் திகைத்துப் போய் சிந்தனையில் ஆழ்ந்தார்.

"இளைஞ! உன் தேசத்தாருக்கு இடைஞ்சலாகவுள்ள இவ்விஷயத்திற்கு நான் அனுமதியளிக்கிறேன். நீங்கள் இனி இந்த தேசத்தில் வியாபாரம் செய்து கொள்ளலாம்!"

விதேசி மூன்று முறை பணிவாக வணக்கம் செய்து விட்டு, ராஜாவிடமிருந்து அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு போய் விட்டான்!

★

கலாதேவி பார்த்தாள். கலைஞனின் கண்களில் நீர் நிறைந்தது அவள் நடுங்கினாள். கலைஞன்

உணர்ச்சி ததும்பும் குரலில் பேச ஆரம்பித்தான்:

"கலாதேவி! உனக்குத் தெரியுமா? — அப்போதிருந்து அந்த தேசம் அடிமையாக இருக்கிறது! புனித நதிகளின் சங்கீதத்தில் வேதாந்தம் ஒலித்துக் கொண்டிருக்கிறது! புஷ்பங்கள் மலருகின்றன, ஆனால் உடனே வாடி விடுகின்றன! உத்தமர்களின் உள்ளங்களில் சுதந்திர தாகம் ஜங்காரம் செய்து கொண்டு எழுகிறது; அன்னியருக்குக் கீழ்ப்பட்டு கெட்டுப் போனவர்கள், அடிமை மோகத்தால் ராக ஆலாபனம் செய்கின்றனர்! இன்று அந்த தேசத்தைக் கொடிய பஞ்சம் பீடித்திருக்கிறது! மக்கள் பசியால் மடிந்து கொண்டிருக்கின்றனர்! அரிசி கிடைப்பதில்லை! மானத்தை மறைக்க துணி கிடைப்பதில்லை! ஸ்திரீகள் கிணறு ஆறுகளில் விழுந்து மடிகின்றனர்! எண்ணற்ற பெண்கள் அரை நிர்வாணமாய் அலைகின்றனர்! அவர்களுடைய சுயமரியாதை நஷ்டமாகி விட்டது! அவர்கள் தங்கள் பூர்வ சரித்திரத்தை மறந்து விட்டனர். பொன்னும் மணியும் பூத்துக் குலுங்க செல்வ வாழ்வு வாழ்ந்த காலம் அவள் நினைவில்லை! — நானும் அங்கு வாழுபவன் தான். நீ அங்கு என்னோடு வருகிறாயா?"

இது என்ன! கலைஞன் வியப்படைந்து எழுந்தான். பிறருக்குத் தெரியாத ஏதோ ஒரு சந்தேகத்தில் அவன் மனம் பதறிக் கொண்டிருந்தது. "கலா!...... கலா!" என்று கூவிக் கொண்டே அவன் கலாதேவியைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

"கலைஞா! என்ன கேட்கிறாய்?"

"கலா! உன் இனிமையான குரலும், அன்பு மயமான பார்வையும், அன்ன நடையழகும், போதையளிக்க வல்ல யௌவன தேக வனப்பும் எங்கு சென்றன!"

"கலைஞா! எப்போதும் அவை ஒரு இடத்தில் தங்கி யிராது!"

"கலா!" — கலைஞனின் குரல் தாழ்ந்தது. சொப்பனம் கலைய ஆரம்பித்தது- கலாதேவியின் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. அவள், "கலைஞா" என்று சொன்னாள்.

கலைஞன் பார்த்தான். கலாதேவி மூர்ச்சையாகிக் கீழே விழுந்திருந்தாள்!

['உமாகாந்த வர்மா' எழுதிய ஹிந்திக் கதையின் தழுவல்.]



# அவன்

க. பஞ்சாபகேசன்

மனஸ் தத்துவங்களை யெல்லாம் தங்களுக்கே உரிமையாக்கி இருப்பவர்களுக்கு அவன் ஒரு புதிராகத் தோன்றினான்; வாழ்க்கையிலே அடிபட்டுக் கரையேறும் வழியை அலசி அலசிப் பார்க்கிற பழுத்த அநுபவசாலிகளுக்கு அவன் போக்கு விடுவிக்க முடியாத ஒரு புதிராக இருந்தது. மொத்தமாக உலகத்துக்கே அவன் போக்கு பிடிபடாத புதிராக விளங்கி, அதன் மண்டையை சதா சர்வ காலமும் உடைத்துக் கொண்டு வந்தது.

அவன் விஷயத்தில் சமூகம் அலக்ஷயப் போக்கிலே போய் விட்டது. மனுஷ்யர்களுக்குப் புரியாத ஒரு போக்கிலே போகும் ஒரு பொருளுக்கு வெகு சுலபத்திலே, "அது என் மூளையைக் குழப்புகிறது; அதைப் பற்றிப் பேசினால் அது கவைக் குதவாத பேச்சாகவே முடியும்" என்ற அசட்டுப் பட்டத்தைக் கட்டுகிறார்கள். அதே மாதிரிதான் அவனுக்கும் எல்லோருமாகச் சேர்ந்து 'புத்திஸ்வாதீன மில்லாதவன்' என்ற பட்டத்தைக் கட்டி விட்டார்கள்.

இதை நினைத்த போது எனக்கு விழுந்து விழுந்து சிரிக்க வேண்டும் போலிருந்தது; இதயத்தின் ஒரு மூலை 'குபு குபு' வென்று பற்றி எரிந்தது. ஆனால் நான் மட்டும் அவனுடைய போக்கை — தினசரி வாழ்விலே அவன் கொண்டிருந்த அபிலாஷைகளை — அறிந்து விட்டேனா என்றால், அதுவும் கிடையாது. எனக்கும் அவன் விடுவிக்க முடியாத புதிராக விளங்கினான்; ஆனால் 'புத்திஸ்வாதீனமில்லாதவனாக' விளங்க வில்லை.

மற்றவர்களைப் பற்றி நான் இப்போது சொல்ல வரவில்லை. என்னைப் பற்றியே பேசுகிறேன். அவனை நேருக்கு நேரே கண்டால் என் இதயத்திலே பயபக்தி ஏற்பட்டது; அவன் முகத்தைச் சூழ்ந்து தாண்டவமாடிய அந்த அமானுஷ்ய ஒளி என் மனதை அவனுக்கு வணக்கம் செலுத்தத் தூண்டியது. சமூகம் கூறுகிற அந்த புத்தி ஸ்வாதீன மில்லாதவனுக்கு என் இதயம் தினசரி வணக்கம் செய்து கொண்டு வந்ததை அவன் அறிந்தானோ அறிய வில்லையோ, அதைப் பற்றி அவன் ஒரு கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

இன்றைக்கோ அவன் மறைந்து விட்டான். அவர்கள் — அவனுடைய குடும்பத்தார்கள் கூட — "அப்பாடி! இந்த மட்டுமாவது பைத்தியம் யாருக்கும் எந்தக் கஷ்டமும் வைக்காமல் தொலைந்

தசே!" என்று ஒரு பெரு மூச்சை விட்டார்கள். ஊரில் ஒவ்வொரு மனிதரும் மணிக் கணக்கிலே அவன் இறந்ததின் நன்மையைப் பற்றிப் பேசினர் கள். இவைகளை யெல்லாம் பார்த்த எனக்கு ரத்தக் கண்ணீர் விட்டு அழ முடியா விட்டாலும், வாய் விட்டுப் புலம்ப மனம் விரும்பிற்று.

வயலை நோக்கி நடக்க ஆரம் பித்தேன். ஆண்டவன் விரித்தி ருந்த பச்சைக் கம்பளம் – பசுமை யான இளங் கதிர்கள் - இளந் தென்றலில் தலை தூக்கி அசைந் தசைந்து ஆடுகின்ற இன்பத் தோடு கூடிய பச்சைக் கம்பளம்– கண்கள் எட்டும் தூரம் பரவி வெகு ரமணீயமான காக்ஷியை உண்டு பண்ணிக் கொண்டிருந் தது. மதகுக் கருகில் உட்கார்ந்து கொண்டு, அடியில் சலசலத்து ஓடுகின்ற நீரின் அழகையும், சிறு சிறு மீன்கள் ஒன்றை யொன்று தழுவியபடி துள்ளிக் குதித்து விளையாடுகிற காக்ஷியையும் பார் த்த எனக்கு, பொங்கி வந்த அழு கை ஓடி விட்டது.

'எதற்காக அழ வேண்டும்?' என்று எண்ண ஆரம்பித்தேன் நான். இந்த இன்பக் காக்ஷிகளை யெல்லாம் சிருஷ்டித்த தேவனு டைய பாதத்தை அடைந்த அந்த அமரனுக்குக் கிடைத்த பதவிக் காக மகிழ்ச்சி யோடல்லவா இருக்க வேண்டும்? நித்திய இன் பத்தை அனுபவிக்கப் போய் விட்டான் அவன். உலகோர் 'பைத்தியம், பைத்தியம்' என்று கூறுகின்ற துன்பச் சுழலிலிருந்து வெளியேறி விட்ட அமரனல்லவா அவன்?

ஆனல் மனுஷ்ய உணர்ச்சிகள் க்ஷணத்துக்குச் க்ஷணம் வேறு படுகிற அதிசயம் எல்லாரும் அறிந்ததுதானே! நீல வானைப் பார்த்த வண்ணம் அவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தேன்...

## 2

வெளி வேலைத் தொந்திரவுகளி லிருந்து மனமும் உடலும் விடு பட்டுக் கொஞ்ச நேரம் விச்ராந் தியாக இருந்த தினம் அது. அறையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படித்துக் கொண்டிருந் தேன். என் மனைவி உள்ளே நுழைந்தாள்.

"உங்களைத்தானே, உங்கள் 'கடவுள்' பண்ணின விஷயத் தைக் கேட்டீர்களா?" என்று ஆரம்பித்தாள் அவள்.

புஸ்தகத்தை மூடி மேஜை மீது வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந் தேன். என்னுடைய 'கடவுள்' என்று குறிப்பிட்டது அவனைத் தான் – அந்தப் புத்தி ஸ்வாதீன மில்லாதவனைத்தான்!

என் மனைவிக்கு அவனைப் பற்றி விஷய மிருக்கிறதோ இல்லையோ, பேசுவதில் அளவற்ற ஆனந்தம்! இன்றைக்கு ஏதோ விஷய மிருக்க வேண்டும். இல்லா விட்டால் அவளுடைய குரலில் அப்படிப் பட்ட ஆர்வம் இருக்காது. விஷ யத்தை மனதிலே வைத்துக் கொள்ளப் பெண்களால் ஆகாது. இது பொது விதி. ஆனல் நான், "என் மனைவிக்கு மனசிலே ஒன் றையும் வைத்துக் கொள்ளத் தெரியாது; ஒரே 'ப்ளெய்ன்' புத்தி அவளுக்கு!" என்று வெளி யில் சொல்லிக் கொள்ளுவது என்னுடைய சிறப்பு விதி.

"அடுத்த வீட்டு அம்மாள் போய் விட்டாளா, இருக்கி

ருளா ?'' என்று கேட்டேன் நான்.

''ஏன், அவளைப் பற்றி என்ன உங்களுக்கு ?''

''இல்லே, என்னமாவது பேச ஆரம்பித்தால்தான் நாம் சண்டையில் வந்து நிற்கிறோமே! நம்ம சண்டை ஊருக்கெல்லாம் ஏன் தெரியணும் என்று பார்த்தேன்!'' என்றேன்.

''எதையோ பற்றிப் பேச வந்தால் என்னென்னமோ சொல்லுகிறீர்கள்! கேளுங்கள்! அந்த — அவன் தான் — என்ன பண்ணினன் தெரியுமா? பாவம்! அந்தக் கிழவி தலையிலே வெந்நீரடுப்பு மூடுகிற பலகையைத் தூக்கிப் போட்டு விட்டான்...''

''எந்தக் கிழவி ?''

''அவள்தான், அவன் அம்மா!'' என்று அவள் கூறினவுடன் எனக்கு மனசை என்னமோ பண்ணியது. அவளைப் பேச விட்டு விட்டுச் சிந்தனையில் உட்கார்ந்தேன்.

''மண்டையில் நல்ல காயமாம். இந்தப் பித்துக்குளியை விரட்டியடித்து விடுங்கோன்னு எல்லாரும் சொன்னுல் கூட அந்தக் கெழம் கேட்க மாட்டேனென்கிறது. பாவம், பெத்த மனசல்லவா ? ஆனுல் அவனை அவன் அண்ணு செம்மையாக உதைச்சாராம்......''

''என்ன! உதைச்சாரா? தம்பிக்கு மூளை சரியாயில்லேன்னு அவருக்குத் தெரியாதா? அவனைப் போட்டு அடிச்சு என்ன பிரயோஜனம்?'' என்று நடுவிலே கேட்டேன் நான்.

''உங்களுக்கும் மூளை குழம்பிடிச்சா என்ன? அம்மாவைக் காயப்படுத்தின பிள்ளையை சும்மா விட்டு விடுவார்களா என்ன? அடிச்சவனும் பிள்ளே, அடிச்ச பிள்ளையை அடிச்சவனும் பிள்ளேதானே? அம்மா என்கிற விஸ்வாசம் இருக்காதா அவனுக்கு? உங்களுக்கு அவன் கூடப் பிறந்த தம்பியா என்ன? நன்ருயிருக்கிறது நீங்கள் அவனுக்குப் பரிஞ்சு பேசும் அழகு!'' என்று படபடவென்று கொட்டி விட்டு அறையை விட்டு வெளியேறினள் அவள்.

அவனுடைய சகோதரர் நல்ல சாந்தசீலர்; ஊரார் சொல்லுகிற படி பைத்தியகாரத் தம்பியைக் கட்டிக்கொண்டு பொறுமையே பூஷணமாக இருந்த அவருக்கும் கோபம் வந்து விட்டதானுல், அது வருத்தப் படவேண்டிய விஷயம்தான். ஆனுல் அவனைப் 'பைத்தியம்' என்று முடிவு கட்டி விட ஏனே என் நெஞ்சம் மறுத்தது?

★

அந்தி நேரத்தில் ஸ்வாமி தரிசனத்துக்காகக் கோயில் சென்று கொண்டிருப்பேன். அப்பொழுது அவன் அநேகமாகத் தரிசனம் செய்து விட்டுத் திரும்பி விடுவான்.

என்னைக் கண்டவுடன் அவன், ''என்ன சார், ரொம்ப நாழி கழிச்சுப் போறேள்?'' என்பான். மற்றவர்களைப் போல நான் அலக்ஷ்யமாகப் போய் விடுவதில்லே; நின்று அவனுக்குப் பதிலளிப்பேன்.

''இன்னிக்குக் கொஞ்ச நேரமாகிவிட்டது. கோயிலிலே ரொம்பக் கூட்டமோ?'' என்பேன்.

"சுமாராயிருக்கு. ஸ்வாமி கல்லிலிருந்து வெளிப்பட்டு வந்தாலல்லவா கூட்டம் கூடும்! அது தான் பிரமை பிடிச்சு நிக்கிறதே சார்! எல்லோரும் பார்த்ததையே தான் தினந்தினமும் பார்க்கிறார்களாம். அதனாலே கூட்டம் வர வரக் குறைஞ்சிடுத்து! ஆனா, சார், நீங்க பார்த்துட்டே யிருங்கள். முதல்லே ஸ்வாமி எனக்குத்தான் பிரத்யக்ஷமாகப் போகிறார்! அப்பறம் அதைப் பத்தி எல்லாருக்கும் நான் சொல்வேன்; கூட்டம் கூடிடும்! ஹி! ஹி!" என்று திடீரென்று சிரித்து விட்டு ஓடி விடுவான் அவன்.

பக்கத்திலே போய்க் கொண்டிருப்பவர்கள் சிரிப்பார்கள்; ஆனால் நான் சிரிக்க மாட்டேன். அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் மனிதன் யுகம் யுகமாகச் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள் அடங்கி யிருப்பதாகவே எனக்குத் தோன்றும்.

சில சமயங்களில் கோயிலிலேயே நான் அவனைச் சந்தித்து விடுவதுண்டு. அப்பொழுதெல்லாம் அவன் நேரே என்னிடம் ஓடி வந்து, "ஒரே சண்டை பிடிக்கிறார்கள் சார், பிரசாதத்துக்கு! இந்தாங்கோ, இதை வாங்கிக்கோங்கோ! பைத்தியம் கொடுத்ததுன்னுட்டு சுண்டுப் பயல் உதறிட்டான் சார்! நீங்கள் அப்படி யில்லையே?" என்று பிரசாதத்தை என் கையில் கொடுத்த வண்ணம் இடி இடி என்று சிரிப்பான் அவன்.

இந்த விஷயம் எப்படியோ என் மனைவியின் காதுகளுக்கு எட்டி விட்டது. அடிக்கடி அவள், "பைத்தியம் கொடுத்ததை என்றைக்கு வாங்கிக் கொண்டீர்களோ அன்றையலிருந்தே மூளை குழப்பிப் பேச ஆரம்பித்து விட்டீர்கள்!" இப்படிப் பேசுகிறாள்; சமாதானமாக இருந்தால், "உங்களைப் போல உண்டோ?" என்கிறாள்.

இவள் பைத்தியமா, அவன் பைத்தியமா என்று எனக்குப் பிடிபடவில்லை.

★

இதெல்லாம் தவிர அவன் ஒரு இளைஞன். இருபத்திரண்டு வயதுக்கு மேலிராது அவனுக்கு. எல்லாவற்றையும் விட ஆச்சரியம் என்னவென்றால், தனது பன்னிரண்டாவது வயதிலே எதையோ பார்த்து மிரண்டு விட்டானாம்; அது முதற்கொண்டு அவனுடைய புத்தி நிலை சரியாக இல்லையாம். ஆனால் ஊரில் ஒவ்வொரு வாயும் அவன் புத்தி யிழந்த நிலையைப் பற்றி ஒவ்வொரு விதத்தில் திரித்துப் பேசியது. மனம் கூசும்படியான வார்த்தைகளைக் கூடச் சொல்லத் தயங்க மாட்டாத ஜனங்களின் விவஸ்தை, கெட்டதனத்தை அவன் சிந்தித்துப் பார்க்கவில்லை. சிந்தித்திருந்தானானால் மான அவமானம், கௌரவ அவகௌரவ உணர்ச்சிகள் அவன் உள்ளத்திலே பொங்கி அவனை இந்தக் காலத்து மனுஷ்யர்களோடு ஒட்டிக் கொள்ளச் செய்து, நான் நினைக்கும்படியான அவனுடைய தெய்விக நிலையை க்ஷணத்திலே இழுக்கும்படிச் செய்திருக்கும்.

வீட்டு மாடியிலிருந்த என்னுடைய அறைக்கு எதிரே ஒரு திறந்த வெளி யுண்டு. இனிய மாலை நேரங்களில் மாடியின் கைபிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு உலாவும் வழக்கம் எனக்குண்டு. அந்த மாதிரி நான்

ஒரு நாள் உலாவிக் கொண்டிருந்த போது, கீழே தெருவில் அவன் போவதைக் கண்டேன்.

போய்க்கொண்டேயிருந்தவன் சட்டென்று நின்றான். மடியில் பத்திரப் படுத்தியிருந்த ஒரு கல்லை எடுத்தான். தலைமுறைக்கு ஒரு தரம் ரோடு ரிப்பேர் செய்வதற்காக முனிசிபாலிடியார் ஊர்ப்புறத்தில் போட்டு வைத்திருக்கும் படியான கற்குவியலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கல் அது! அவன் அதை இரு கண்களிலும் ஒத்திக் கொண்டான். சிறிது நேரம் இரண்டு கன்னங்களிலும் அதை மாறி மாறி வைத்துக் கொண்டு சந்தோஷம் கொண்டவனைப் போலத் துள்ளினான். இதற்குள் நாலைந்து சிறுவர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"டேய், டேய்! என்னடா அது? பால்கோவாவா?" என்று கேட்டான் ஒரு சிறுவன்.

"பால் கோவா இல்லையடா. அவனுடைய சாமியடா அது, சாமி!" என்றான் இன்னொரு சிறுவன்.

அதற்குள் அவன் 'உஷ்' என்று குரல் கொடுத்து விட்டு எல்லோரையும் பேசாதிருக்கும்படி சமிக்ஞை செய்தான். தெருவின் ஓரத்தில் சுவர் முனையில் கல்லை வைத்து விட்டு, மறுபடியும் மடியைத் திறந்து அரளி மலர்களையும் மலர்ந்த மல்லிகைகளையும் வில்வ இலைகளையும் எடுத்து அந்தக் கல்லின் மேலே போட்டான். சிறுவர்கள் எல்லோரும் பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு அவன் செய்கையைப் பார்த்த வண்ணமிருந்தார்கள்.

தெருப் புழுதியில் தேகம் முழுவதும் படும்படியாக அந்தக் கல்லுக்கு அவன் நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்தான். கையைக் கொட்டியவாறே, சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு ஏதோ ஜபித்தான். திடீரென்று கண்களை விழித்து, "டேய், பசங்களா! நமஸ்காரம் பண்ணுங்கடா! நான் ஆத்துக்குப் போறேன். யாராவது சாமியைத் தொட்டீங்களோ, ஆமாம்!" என்று அவர்கள் எல்லோரையும் முறைத்து விட்டுப் பெரிய நடை போட்டுப் போய் விட்டான் அவன்.

சிறுவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். "ஹே, ஹே! கல்லுக்கு நமஸ்காரம் பண்றான்டோய்!" எனக் கத்திக்கொண்டே அவர்களும் ஓட்டம் பிடித்தார்கள்.

தெரு முனையில் அந்தக் கல், மலர்கள் சூழ்ந்து எனக்கு அளித்த காக்ஷி, அன்று என்னைக் கோயிலுக்குப் போக வைக்கும் அவசிய நடையைக் குறைக்கச் செய்தது. எதிரேயே ஆண்டவனின் தரிசனம் கிடைத்து விட்டதல்லவா?

ஒரு இளைஞனுக்கு இருக்க வேண்டிய மன உணர்ச்சிகளும் இச்சைகளும் அவனிடம் கிடையாது; உண்மையான ஞானஸ்தர்களின் கூட்டுறவை அடையும் பாக்கியத்தை முந்திய ஜன்மாக்களில் அவன் அடைந்திருப்பானோ என்றே எண்ணினேன். ஊரார் அவனைப் பைத்தியம் என்றார்கள்; என்னால் அப்படி லேசில் ஒப்புக் கொள்ள முடியவில்லையே!

★

**அ**வனைப் பற்றிப் பேசுவதிலே என் மனைவிக்குத் தனிப்பட்ட ஒரு இன்பம் என்று சொன்னேனல்லவா? அன்று சாயங்காலம்

ஆற்றங் கரையிலிருந்து திரும்பி வந்தவள், குடத்தை அவசர அவசரமாகக் கீழிறக்கி வைத்து விட்டு மாடிக்கு ஓடிவந்தாள்.

"பார்த்தீர்களா உங்கள் 'கடவுளுடைய' அம்மாவுக்கு வந்த கோபத்தை?" என்றாள்.

"நான் பார்க்கவுமில்லை; கேட்கவுமில்லை!" என்றேன் வெறுப்புடன்.

"ஒரு விஷயம் சொல்லவந்தால் உங்களுக்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது? கொஞ்சம் கேளுங்கள். ஆத்தங்கரையிலே எல்லோரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அந்தப் பித்துக்குளியின் அம்மா அங்கே யிருந்ததை நாங்கள் கவனிக்கலே. அடுத்த வீட்டு சுந்தரத்தம்மா அசந்தர்ப்பமா ஒரு வார்த்தை சொல்லி விட்டாள்..."

"என்ன சொன்னாள்?" என்று நான் ஆவலாகக்கேட்டேன்.

"என்ன சொல்லி யிருப்பாள் அவள்! அப்படி ஒண்ணும் பிரமாதமா அவள் சொல்லிவிடவில்லை. 'பைத்தியம் தெளிஞ்சாதான் பொண்ணைக் கொடுப்பா; கல்யாணம் ஆனால்தான் பித்து போகும்' என்று ஒரு பழமொழியை......"

"ஆமாம், இது பிரமாதமேயில்லைதான்...!" என்றேன் நான் எரிச்சலும் ஏளனமும் கலந்த குரலில்.

"மேலே கேளுங்களேன் இதை சுந்தரத்தம்மா சொல்லிவிட்டாளா, அப்பறந்தான் எங்களுக்கெல்லாம் அந்தக் கிழவி அங்கேயிருந்தது தெரிய வந்தது, அப்பாடா! அவளுக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா? 'சிவ சிவா' என்று சொல்லி, இன்றைக்கோ நாளைக்கோ என்று காலத்தைக் கடத்தற கிழக் கட்டைகளுக்குத்தான் என்ன கோபம்! அவள் ஒரு அடி முன்னாலே வந்து, "என் பிள்ளை என் கிட்டேயே இருக்கட்டும். அவன் யாருக்கு என்ன தீங்கு பண்ணினான்? ஏன் எல்லோரும் இப்படி அவனைக் காய்கிறீர்கள் என்று கேட்டு ஒரு வசை புராணமும் பாடிவிட்டுப் போய் விட்டாள்......" என்று சொல்லி மூச்சு விட்டாள் என் சகதர்மிணி.

நான் பதில் பேசவில்லை. பேசினால் உண்மையை எடுத்துப் பேச வேண்டும். உண்மையை நியாயச் சிந்தையோடு நான் சொல்ல ஆரம்பித்தேனானால் என் மனைவி காதுகளில் வாங்கிக் கொள்ளவே மாட்டாள். அது அவளுடைய குணம் மட்டுமல்ல; மனுஷ்யனுடைய தொத்து வியாதியேதான்!

அவனுடைய தாயின் வார்த்தைகளிலே தொனித்த பெற்றவளின் பெரும் சோகத்தை நான் நினைக்க நினைக்க என் மூளை குழம்பிற்று...

## 3

எவ்வளவு பொழுது அவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தேனோ, எனக்குத் தெரியாது. ஜோஸ்யர் சங்கரையருடைய குரல் கேட்டு விழிப்படைந்தேன்.

"என்ன மாமா! ஊரிலே ஓயாமல் நடந்த பேச்சுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது போலிருக்கிறதே......" என்று ஆரம்பித்தேன் நான்.

"கிறுக்குப்பய பேச்சு நமக்கு எதற்கப்பா!" என்று ரொம்ப அலக்ஷ்யமாகச் சொன்னார் சங்கரையர்.

"பாவம் மாரடைப்பினல் போய் விட்டானும்! அவனைப் பற்றி இன்றைக்குப் பேசலாம்; நாளைக்கும் பேசலாம். நாளா வட்டத்திலே மறந்து போகக் கூடிய விஷயம்தானே? ஆனு, மாமா, ஒன்று நிச்சயம். இந்த



உலகத்திலே இருந்தபோது அவன் நம் எல்லாரையும் விட ஒருபடி மேலே யிருந்தான்; இப்பவோ என்ருல் பலபடிகள் ஏறி உயரத்துக்குப் போய்விட்டான்; அமரனுய் விட்டான்!" என்றேன் நான்.

சங்கரையர் அலக்ஷ்யமாகச் சூள் கொட்டினுர். நான் சொன்னது அவருக்குப் புரிந்ததோ இல்லையோ!

இருட்டிய பிறகு, வயல் வரப்புகளிலே தள்ளாடிய வண்ணம் நடந்து கொண்டு, எட்டாத உன்னத வைடூர்யங்களாகக் காக்ஷியளித்த தாரகைத் திரளை நோக்கிய வண்ணம் வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தேன்; என் வாய் பூர்வமாக, "அவன், அவன்" என்று சொல்லி என்றுமில்லாத நிறைவை அடைந்தது!

★




காட்டில் அநேக நாட்களாகத் தீர்க்கப் படாதிருந்த வழக்கு அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கஷ்டமான வழக்காக இருந்தால் புகழ்



பெற்ற வக்கீல் ஒட்டைச்சிவிங்கியாரைக் கோர்ட்டார் தருவித்திருந்தார்கள். வழக்கின் முடிவைத் தெரிந்து கொள்வதற்காகக் காட்டிலிருந்த மிருகங்கள் எல்லாம் கோர்ட்டில் வந்து கூடியிருந்தன.

வழக்கு இதுதான்: ஸ்ரீமான் நரியின் கொல்லையிலிருந்த வாழை மரத்தில், ஒரு சீப்பு வாழைப் பழங்களை ஸ்ரீமான் குரங்கு திருடிச் சென்றதாக நரி பிராது செய்தது. ஆனால் ஸ்ரீமான் குரங்கு அதை ஆட்சேபித்து தன்னுடைய கொல்லையிலிருந்த திராட்சைக் கொடியிலிருந்து ஒரு குலை திராட்சைப் பழங்களை நரி திருடிச் சென்றதாக வாதித்தது. இந்தத் திருட்டுகள் பௌர்ணமியன்று இரவில் நடைபெற்றன.

விசாரணை ஆரம்பமாயிற்று. பிரபல வக்கீல் ஒட்டைச்சிவிங்கியார் கம்பீரமாகத் திரும்பி குரங்கைப் பார்த்து, "ஸ்ரீமான் நரி, திராட்சைப் பழக் குலையைத் திருடினதற்கு சாட்சிகளுண்டா?" என்றார்.

"சாட்சி எதுங்க, நானே என் கண்ணாலே பார்த்தேனே" என்றார் ஸ்ரீமான் குரங்கார்.

"நரியையா?... ... திராட்சைப் பழக் குலையையா?"

"இரண்டையும் தானுங்க. அன்று இரவு நான் வழக்கம் போல் என் வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு கொல்லைப்புற வழியாக வீட்டுக்குள் போக வந்த சமயம் நரி திராட்சைப் பழக் குலையுடன் என் வீட்டுக் கொல்லையிலிருந்து ஓடினதைப் பார்த்தேனுங்க."

"நரியின் கையில் பழக் குலையை நிஜமாகப் பார்த்தாயா?"

ஆமாங்க. நிலா வெளிச்சத்தில் நன்ருகப் பார்த்தேனுங்க"

ஒட்டைச்சிவிங்கியார் எதையோ தன் முன் வைத்திருந்த காகிதத்தில் குறித்துக் கொண்டார். பின்பு நரியின் பக்கம் திரும்பி கம்பீரமாக, "நீயும் தினமும் இரவில் உன் வீட்டைச் சுற்றிப் பார்ப்பது வழக்கந் தானே?"

"ஆமாங்க."

"சுற்றிப் பார்த்து விட்டுக் கொல்லைப்புற வழியாகத்தான் வீட்டுக்குள் போவா யாக்கும்?"

"ஆமாங்க, எசமான்!"

"அப்படி வீட்டுக்குள் போகும் பொழுது குரங்கின் கொல்லையைப் பார்க்கும் வழக்கம் ஏதாவது உண்டா?"

"இல்லீங்க."

"சரிதான். அவருடைய கொல்லையில் திராட்சைப் பழக் கொடி இருப்பதாவது தெரியுமா? தெரியாதா?"

"அது தெரியுமுங்க."

"நிலா வெளிச்சத்தில் திராட்சைக் கொடியிலுள்ள பழக் குலைகளைப் பார்க்க முடியாதென்று நான் நினைக்கிறேன். ஏனென்ருல் கொடி........."

நரி இடைமறுத்து "இல்லீங்க எசமான். நான் நிலா வெளிச்சத்தில் அன்று நன்ருகப் பார்த்




தேன். குலை குலையாகப் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன" என்றது. கோர்ட் அதிரும்படியான சிரிப்பு ஏற்பட்டது. நரிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஒட்டைச்சிவிங்கி புன் சிரிப்புடன், "சற்று முன் குரங்கின் கொல்லையைப் பார்க்கும் வழக்கம் இல்லையென்று சொன்ஞய். இப்பொழுது திராட்சைப் பழங்கள் கொடியில் குலை குலையாய்த் தொங்கிக் கொண்டிருந்ததை அன்று நன்ருகப் பார்த்தேன் என்று சொல்கிருயே" என்று சொல்லிவிட்டுக் காகிதத்தில் எதையோ குறித்துக்கொண்டார். நரியார் அசட்டு விழி விழித்தார்.

ஒட்டைச்சிவிங்கியார் கனைத்துக் கொண்டு குரங்கைப் பார்த்து, "ஆமாம். நரியாரைப் பழக்

குலையுடன் பார்த்தும் நீர் ஒன்றும் பேசவில்லையா?"



"நீ செய்தது நியாயமா? இந்தத் திருட்டுப் புத்தி எதற்கு? என்னைக் கேட்டிருந்தால் நான் கொடுக்க மாட்டேனா?" என்று கேட்டேனுங்க.

"அதற்கு நரியார் என்ன சொன்னார்?"

"அவரால் பதில் சொல்ல முடியவில்லை எசமான்."

"ஏன்?"

"அவர் தன் வாயில் சில திராட்சைப் பழங்களை வைத்திருந்தார் எசமான்."

"அப்படியா, அது உமக்கு எப்படித் தெரிந்தது?"

"நான் அப்படிக் கேட்டதும், நரியார் தன் வாயிலிருந்த பழங்களைத் 'தூ, தூ' வென்று துப்பி விட்டுப் பேசாமல் ஓடி விட்டார் எசமான்!"


வக்கீல் ஒட்டைச்சிவிங்கி நரியைப் பார்த்து, "ஏனப்பா, திராட்சைப் பழங்களை எவனாவது சாப்பிடாமல் கீழே துப்புவானா? நீ செய்தது வேடிக்கையாக இருக்கின்றதே?"

நரியார் அவசரத்துடன், "சே! சே! அவ்வளவு புளிப்பான பழங்களை நான் என்றுமே சாப்பிட்டதில்லை" என்றார். கோர்ட்டில் கொல்லென்று சிரிப்பு ஏற்பட்டது. நரியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் தவறை உணர்ந்ததும் வெட்கத்துடன் தலையைத் தொங்க விட்டுக் கொண்டார். ஒட்டைச்சிவிங்கியார் மகிழ்ச்சியுடன் நிதானமாக குரங்காரைப் பார்த்து, "ஆமாம். உமது கொல்லைத் திராட்சைப் பழங்களைத் திருடிச் சாப்பிட்டதுமன்றி உம் முன்பே 'தூ' வென்று துப்பினதால் உமக்குக் கோபம் வரவில்லையா?"

"கோபம் வராமலிருக்குமுங்களா?"

"கோபம் வந்ததா! என் பதிலுக்கு நீர் ஒன்றும் செய்யாமலிருந்து விட்டீர்? ஆச்சர்யமாக இருக்கிறதே!"

"...அந்த வாழைப் பழம் மட்டும் புளித்திருந்தால் தெரிந்திருக்கும் சேதி...!" என்றார் குரங்கார் கோபாவேசத்துடன்.



'கொல்' லென்ற சிரிப்பும் பலமான கை தட்டலும் கோர்ட்டை அதிரச் செய்தன. ஒட்டைச்சிவிங்கியாரும் நீதிபதி கனம் யானையாரும் கூட கடகட வென்று சிரித்து விட்டனர்.

திடுக்கிட்ட குரங்கார் தமது தவறை உணர்ந்து தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பற்களைக் கடித்தார்.

விசாரணை முடிந்தது. ஜூரர்களாக நியமிக்கப்பட்ட சில மிருகங்களின் ஏகோபித்த தீர்மானத்தை யொட்டி நீதிபதி கனம் யானையார் தமது தீர்ப்பைத் தெரிவித்தார். இருவரையும் தான் குற்றவாளிகள் என்று தீர்மானிப்பதாயும் கா. பி. கோ 324ம் பிரிவின்படி குற்றம் செய்திருப்பதால் தலைக்கு ஒரு வருடம் கடுங்காவல்



தண்டனை அளித்திருப்பதாயும் தெரிவித்தார்.

அதாவது குரங்கார் பழத்தையோ, பட்டாணியையோ ஒரு வருஷத்திற்குப் பார்க்கக் கூடாது. நரியார் ஒருவருஷத்துக்குத்



திராட்சையைத் தீண்டவே கூடாது!

ஸ்ரீமான் குரங்காரும், ஸ்ரீமான் நரியாரும் கண்ணீர் விட்டனர். புகழ்பெற்ற ஒட்டைச்சிவிங்கியாருக்கு அக்காட்டின் ராஜா மாட்சிமை தங்கிய சிங்க மகாராஜா ஓர் பெரிய தங்கப் பதக்கம் பரிசளித்தார்.

## வேண்டாம்!

"ஹோட்டலுக்கு அறிமுகமான ஒரு எழுத்தாளர் உள்ளே போனவர், "என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

"பஜ்ஜி, மெதுவடை ஸார். பஞ்சுபோல் மிருதுவாய் இருக்கும் மெதுவடை".

"இரண்டு வடை கொண்டுவா..."

"வடை பெண் இதயம்போல் மிருதுவாய் இருக்கும் ஸார். அவ்வளவு மிருது."

"அப்படியானல் நாலு பஜ்ஜி மட்டும் போதும்!"



# புத்தக ஆராய்ச்சி

●

சிவாஜி (12 வது வருஷ மலர்) விலை: ரூ 2—0—0. கிடைக்குமிடம் பெரியகடை வீதி, திருச்சி.

இலக்கிய வானில் ஒளி வீசும் நட்சத்திர எழுத்தாளர்கள் பலரது அரிய சிருஷ்டிகளைத் தாங்கிய இந்த மலர் பெரிய அளவில், நிறைந்த பக்கங்களுடன் வெளி வந்திருக்கிறது. சுவைத்துப் படிக்க வேண்டிய விஷயங்கள் பல, இந்த மலரில் ஏராளமாய் இடம் பெற்றிருக்கின்றன. மலர் முழுதும் இலக்கிய மணம் கமழ் கிறது.

●

சினிமா உலகம் (தீபாவளி மலர்) விலை: ரூ 1—0—0. கிடைக்குமிடம்: ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

சினிமா சம்பந்தமான சிந்தனைக் கதை கட்டுரைகள், கண்கவரும் நட்சத்திரப் படங்கள், துண்டு துணுக்குகள் இத்தனையும் நிறைந்த ஒரு சிறந்த சினிமா மலராக மலர்ந் திருக்கிறது சினிமா உலகத்தின், இந்த ஆண்டு தீபாவளி மலர்.

●

பாசாசு (தீபாவளி மலர்) விலை: ரூ 2—0—0. கிடைக்குமிடம்: அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

சென்னை மராமத்து மந்திரி கனம் பக்த வத்சலம் முதல் யோகி சுத்தானந்த பாரதியார், பி. ஸ்ரீ, கி. வா. ஜகன்னாதன் பி. கே. முத்துசாமி முதலியோர் உள்ளிட்ட இலக்கியப் பிரமுகர் கள் பலர் சிறந்த விஷய தானங் கள் உதவி, மலரின் சிறப்பில் பங்கு கொள்கின்றனர். கண் கவரும் சில நட்சத்திரப் படங்கள் சினிமா அன்பர்களுக்குப் பெரி தும் திருப்தியளிக்கும். சித்திர விளக்கத்திற்கான பாடல்களும், படங்களும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை என்று சொல்ல முடியவில்லை. அமிர்தத்தில் விஷத் தைக் கலக்குவது போல சினிமா உலகில் பரவி வரும் 'செக்ஸ் அப் பீல்' விஷயம் இந்த இலக்கிய மல ரிலும் புகுந்திருப்பது மலரின் தரத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது.

●

பாரதமணி (சரஸ்வதி பூஜா மலர்) விலை: 0—8—0. கிடைக்குமிடம்: அலுமேலுமங்காபுரம், சென்னை.

கே. எஸ். ராமசாமி சாஸ்திரி யார், திரு. வி. க., கி. சந்திரசேக ரன், ந. சிதம்பர சுப்ரமணியம், எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ஆகியவர்களின் நல்ல விஷய தான ங்களுடனும் வழக்கமான இதர அம்சங்களுடனும் சரஸ்வதி பூஜா மலராக மலர்ந்திருக்கிறது பாரத மணி ஐப்பசி இதழ்.

கிராம ராஜ்யம் ஆசிரியர்: ஜி. வெங்கடாசலபதி, காந்தி நிகேதன், கல்லுப்பட்டி (மதுரை ஜில்லா). விலை: ரூ 0—8—0.

இந்தியாவின் ஜீவநாடியான கிராமங்களைப் பற்றி அறிய, கிராமங்களின் தேவையை வெளியிட, கிராமங்களைப் பற்றி மகாத்மா காந்திஜீயின் அபிப்பிராயங்களைப் பிரதி பலிக்க ஒரு நல்ல பத்திரிகை இல்லாதிருந்த குறையை இந்தக் 'கிராம ராஜ்யம்' அறவே நீக்கி விட்டது.

கிராம முன்னேற்றத்திலும், நிர்மாணத் திட்டங்களிலும் அக்கரையும் ஆர்வமும் கொண்ட பல சிறந்த ஊழியர்களின் அரிய விஷயதானங்களோடு வெளி வந்திருக்கும் இந்த முதல் இதழே 'கிராம ராஜ்யம்' பத்திரிகை உலகில் வெகு விரைவில் ஒரு உன்னத ஸ்தானம் வகிக்கும் என்பதைத் தெளிவாக்குகிறது. நல்ல தாளில் அழகாய் அச்சிடப் பெற்றிருக்கும் இந்தக் கிராம ராஜ்யத்தில் தொட்ட இடமெல்லாம் கிராமிய மணம் கமழ்கிறது என்று சொன்னால் அது தவராகாது.

பாரிஜாதம் ஆசிரியர்: வஸந்தன்; காரியாலயம், ராயவரம், புதுக்கோட்டை; விலை: ரூ 0—8—0.

சிறந்த சிறு கதைகள் எழுதுவதில் புகழ் பெற்ற 'வஸந்தன்' (வி. எஸ். ராமகிருஷ்ணன்) இலக்கிய அபிமானி ஒருவரின் அமோக ஆதரவில் ஆரம்பித்திருக்கிறார் இந்த பாரிஜாதத்தை. வழவழப்பான தாளில் சில நல்ல புகைப் படங்கள் ஒரு அனுபந்தமாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. பி. வி. சுப்பிரமணியன் ஒரு அழகான கிராமியக் கதையை எழுதியிருக்கிறார். டி. செங்கல்வராயனின் 'என் தலைவர்' என்ற கட்டுரையும், பிரபல சங்கீத வித்வான் ஜி. என். பி. ரசிகர்களைப் பற்றி எழுதியிருக்கும் கட்டுரையும் அந்தந்த வகையில் சிறப்பாய் அமைந்திருக்கின்றன. பாரிஜாதத்தின் வருங்காலம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை முதல் இதழே பறை சாற்றுகிறது. பாரிஜாதத்துக்கு நல்வரவு கூறி வரவேற்கிறோம். அதன் நறுமணம் எங்கும் பரவட்டும் என்று இதய பூர்வமாய் வாழ்த்துகிறோம்.

— 'உமாபதி'



197248



## "என் மகன்"

கீழ்க்கண்ட இடங்களில்
இப்பொழுது வெற்றிகரமாக
ஓடிக்கொண்டிருக்கிறது.

**பிரபாத் டாகீஸ் — திருவாரூர்**
**கஜலக்ஷிமி டாகீஸ் — திருப்பூர்**
**செல்லம் டாகீஸ்— பொள்ளாச்சி**
**வெலிங்டன் டாகீஸ் — திருச்சி**

**எதிர்பாருங்கள் ஆரம்ப நாளை**

மதுரை, சேலம், கோவை,
வெல்லூர், மாயவரம் இன்னும்
முக்கிய இடங்களில் வெகு சீக்கி
ரத்தில் திரையிலிடப்படும்.

**சமீபத்தில் திரைக்குவருகிறது**

## "வால்மீகி"

நடிகர்கள் :

**டி. ஆர். ராஜகுமாரி, வசந்தகோகிலம்,**
**யு. ஆர். ஜீவரத்தினம், ஹொன்னப்ப**
**பாகவதர், காளி என். ரத்தினம்,**
**சி. டி. ராஜகாந்தம்**
மற்றும் பலரும் நடிப்பது.



CENTRAL STUDIOS VALMIKI

விரைவில் வெளிவருகிறது

## "ஸ்ரீ முருகன்"

நடிகர்கள் :

**டி. ஆர். ராஜகுமாரி, மாலதி, யு. ஆர். ஜீவரத்தினம், குமுதினி,**
**பாப்பா, ஹொன்னப்ப பாகவதர், காளி என். ரத்தினம்,**
**சி. டி. ராஜகாந்தம்** மற்றும் பலரும்.

---

**ஜுபிடர் பிக்சர்ஸ் சர்கியூட்,**

மதராஸ் : : திருப்பூர்


பெண்கள் விரும்பும்,
உயர்ந்த ஆபரணங்கள்
ஸ்வர்ண மாளிகை
பி.எ. ராஜூ செட்டியார் & பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கடைத்தெரு-கோயமுத்தூர்